# திருமறைத்தீபம்



BIBLE LAMP
**திருமறைத்தீபம்**

**Issue No.2 of 2007**
**ISBN 1173-7255**

இக்காலாண்டுப் பத்திரிகையில் வெளிவரும் பெயர் குறிப்பிடப்படாத ஆக்கங்கள் அனைத்தும் ஆசிரியரால் எழுதப்பட்டவை. ஆசிரியரின் எழுத்துமூல அனுமதியின்றி பத்திரிகையின் எப்பகுதியையும் எவ்விதத்திலும் பிரசுரிக்கக் கூடாது.

ஆசிரியர்: ஆர். பாலா

**Editor:** R. Bala
**Publisher:** Sovereign Grace Publications
**Address:** P O Box 62 159
Sylvia Park, Auckland 1006
New Zealand
**Telephone:** 64 9 272 8061
**Fax:** 64 9 272 8032
**e-mail:** blamp@ihug.co.nz
**Web site:** www.biblelamp.org

"கொள்கைகளையும் கோட்பாடுகளையும் புறக்கணித்து, சத்தியத்தை வெளிப்படையாக எடுத்துக் கூறாத ஒரு பத்திரிகையை இலக்கியத் தடங்கல் என்றுதான் கூற வேண்டும்."

சி. எச். ஸ்பர்ஜன்
1834-1892

## அன்புக்குரியவர்களே!

*உழைப்பைப் பற்றி இந்த இதழில் சில ஆக்கங்கள் வந்திருக்கின்றன. நம்மினத்தில் பெரும்பாலான விசுவாசிகள் உழைப்பைப் பற்றிய வேதபூர்வமான எண்ணங்களை வளர்த்துக்கொள்ளாமல் இருக்கின்றனர். ஊழியத்திலும் நேர்மையாக, நேரத்தைப் பயன்படுத்தி உழைக்கிறவர்கள் தொகை குறைவு. வேதம் உழைப்பைப் பற்றி என்ன சொல்லுகிறது என்பதை விளக்கியிருக்கிறேன். இந்தப் போதனைகளை இறையியல் கற்று வருகின்ற ஊழியக்காரர்கள் மத்தியில் ஏற்கனவே கொடுக்கப்பட்டவை. எல்லோருக்கும் பயனுள்ளதாக இருக்க இவற்றை இங்கே தந்திருக்கிறேன்.*

*காணிக்கை கொடுப்பதைப் பற்றி பல தடவை விசுவாசிகள் என்னிடம் கேட்டிருக்கிறார்கள். காணிக்கை வாங்குவதில் நடந்துவரும் குளறுபடிகள் இன்று கிறிஸ்தவ ஊழியத்தை அவிசுவாசிகள் மத்தியில் அசிங்கப்படுத்தியிருக்கின்றது. காணிக்கை கொடுப்பது பற்றிய இந்த இதழில் வந்திருக்கும் ஆக்கம் அநேகருடைய சந்தேகங்களைப் போக்கி காணிக்கைகளைக் கொடுக்க வேண்டிய இடத்தில் மட்டும் கர்த்தரின் மகிமைக்காக கொடுக்க உங்களைத் தூண்டுமானால் அதுவே இந்த ஆக்கத்திற்கு கிடைத்த பலனாக அமையும்.*

*இந்த இதழ் தவிர்க்க முடியாத சில காரணங்களால் சிறிது தாமதமாக உங்கள் கரங்களை வந்தடையும். மன்னித்துக் கொள்ளுங்கள். இதை எழுதி முடித்து வெளியிடக் கிருபை பாராட்டிய கர்த்தருக்கு நன்றி கூறுகிறேன். வழமையாக வந்துகொண்டிருக்கும் சில ஆக்கங்கள் இந்த இதழில் இடம்பெறவில்லை. இனி வரப்போகும் இதழ்களில் அவை தொடர்ந்து வெளிவரும். இந்தப் பத்திரிகையை வெளியிடும் இலக்கியப் பணியில் ஈடுபட்டு வருகிறவர்களுக்காக தொடர்ந்து ஜெபியுங்கள். பிரதிபலன் எதிர்பார்க்காமல் இதை வெளியிட என் சபை மக்கள் உட்பட அநேகர் உழைத்து வருகிறார்கள். இதுவரை வந்துள்ள இதழ்களைப் போலவே இந்த இதழும் உங்களுக்கு அநேக ஆத்மீக ஆசீர்வாதங்களை அள்ளித்தர கர்த்தர் கிருபை பாராட்டுவாராக. - ஆசிரியர்.*

[அட்டையில் மும்பாயின் "The Gateway of India". கடல் வழியாக மும்பாய்க்கு (Mumbai) வருகிறவர்கள் கண்களுக்கு முதலில் தெரிவது இதுதான்.]

# எங்கே, எப்படி, யாருக்குக் கொடுப்பது காணிக்கை?

காணிக்கை கொடுப்பதைப் பற்றி நீங்கள் நிச்சயம் எழுத வேண்டும் என்று தமிழக நண்பர் ஒருவர் என்னைக் கேட்டுக் கொண்டார். அது பற்றி விபரமாக எழுத வேண்டும் என்ற எண்ணம் எனக்கும் இருந்தது. காணிக்கை யாருக்குக் கொடுக்க வேண்டும்? எங்கே, எப்படிக் கொடுக்க வேண்டும்? என்பது பற்றி சரியான விளக்கம் இல்லாமல் இருந்து வருகிறவர்கள் நம் மத்தியில் அதிகம். இந்த ஆக்கம் இதற்கு வழி செய்யுமானால் அது கர்த்தரின் ஆசீர்வாதமாக இருக்கும்.

கூட்டங்களில் காணிக்கை கேட்பதும், பல தடவைகள் காணிக்கை எடுப்பதும், பத்திரிகைகள், சஞ்சிகைகள், இ-மெயில்கள் வாயிலாகக் காணிக்கை கேட்டுப் பலரை நெருக்குவதென்பது ஊழியங்களில் இன்று வழக்கமாக நடந்து வருகிற நிகழ்ச்சி. காணிக்கைகள் இல்லாமல் ஊழியங்கள் நடக்க முடியாது என்பது உண்மையானாலும், காணிக்கை வாங்குவதில் மட்டும் பலர் காட்டி வருகிற தீவிர ஆர்வம் பெரும் சந்தேகத்தை ஊட்டிவிடுகிறது. ஒரே கூட்டத்தில் பல தடவைகள் காணிக்கை எடுக்கும் அயோக்கியத்தனத்தை இன்று பல கிறிஸ்தவ கூட்டங்களில் பார்க்கலாம். முதல் காணிக்கையில் பணமும், இரண்டாம் காணிக்கையில் நகையும், மூன்றாம் காணிக்கையில் இதற்கு மேலும் எவ்வளவு கொடுக்க முடியும் என்ற வாக்குறுதியையும் பெற்றுப் பல தடவைகள் காணிக்கை எடுத்து கூட்டத்துக்கு வந்தவர்கள் கையில் இருப்பதையெல்லாம் இழந்துவிட்டு வீட்டுக்குப்போக வைத்துக்கொண்டிருக்கிறார்கள் அநேக போலி ஊழியர்கள். காணிக்கை எடுப்பதை மட்டுமே நோக்கமாகக் கொண்டு ஊழியத்தைப் பெரிய வியாபாரமாக நடத்தி வருகிறவர்கள் தொகை தமிழர்கள் மத்தியில் அதிகம். கர்த்தருக்காக எதையும் இழக்கலாம் என்று தங்களைத் தாங்களே ஏமாற்றிக்கொண்டு வாழ்கிறவர்களே இத்தகைய போலித்தனங்களுக்கு தங்களை ஒப்புக் கொடுத்து நடுத்தெருவில் நிற்கும் நிலைக்கு வந்துவிடுகிறார்கள். இந்தளவுக்கு காணிக்கைப் பிரச்சனை இன்று அகோரமாக வளர்ந்து நிற்கிறது; கிறிஸ்தவ ஊழியத்தை அவிசுவாசிகளும் மதிக்கமுடியாமல் செய்து வைத்திருக்கிறது.

காணிக்கை எடுப்பதைப் பற்றி வேதம் என்ன சொல்கிறது என்று சிந்தித்துப் பார்ப்போம். கர்த்தரின் சித்தத்தை வெளிப்படுத்தும் வேதமே நமக்கு எல்லா விஷயங்களிலும் சரியான முடிவெடுக்க உதவும் கர்த்தரின் அதிகாரமாக இருக்கிறது. அதிலிருந்தே நாம் கர்த்தர் நம்மிடம் எதை எதிர்பார்க்கிறார், நம்மில் எதை வெறுக்கிறார் என்று அறிந்து கொள்கிறோம். கர்த்தரின் வேதமே எந்தக் காரியத்திலும் இறுதித் தீர்ப்பை வழங்கும் நியாயாதிபதியாக இருக்கிறது.

## பழைய ஏற்பாட்டில் காணிக்கை

*காணிக்கை பற்றி பழைய ஏற்பாடு தெளிவாகப் போதிக்கிறது. அது பழைய ஏற்பாட்டு ஆராதனையில் ஒரு பகுதியாக இருந்திருப்பதை நாம் அறிந்து கொள்ள முடிகிறது. ஆதியாகமம் 4ம் அதிகாரத்தில் காயினும், ஆபேலும் கர்த்தரை ஆராதிக்க வந்தபோது காணிக்கை கொண்டு வந்திருக் கிறார்கள். இன்று பிரசங்கிகளில் அநேகர் இப்பகுதியில் காணிக்கையை மட்டுமே பார்க்கிறார்கள். அது முழுத்தவறு. இப்பகுதி ஆராதனையைப் பற்றி விளக்குகிறது. ஆராதனையின் ஓர் அங்கம் மட்டுமே காணிக்கை. காணிக்கை கொடுப்பதே ஆராதனையாகிவிடாது. "பலியையும் காணிக்கை யையும் நீர் விரும்பவில்லை" என்று எபிரெயர் 10:5ல் வாசிக்கிறோம். காயினின் ஆராதனை கர்த்தருடைய வார்த்தையின்படி அமையாததால் அதனைக் கர்த்தர் நிராகரித்தார். ஆபேலின் ஆராதனை கர்த்தரின் வார்த்தையின்படி அமைந்திருந்ததால் அதைக் கர்த்தர் அங்கீகரித்தார். கர்த்தருடைய ஆராதனையில் காணிக்கையும் உள்ளடங்கியிருக்கிறது.*

*அதற்குப் பிறகு ஆபிரகாமும் கர்த்தருக்கு தசம பாகத்தை அளித் திருப்பதைப் பார்க்கிறோம். (எபிரெயர் 7:2). மெல்கிசேதேக்கு ராஜா மட்டுமல்ல, கர்த்தருடைய ஆசாரியனாகவும் இருந்தான். பழைய ஏற்பாட்டில் தன்னுடைய ஆராதனையை ஆசாரியனை வைத்துச் செய்யக் கர்த்தர் கட்டளையிட்டிருந்தார். ஆசாரியர்கள் இல்லாமல் பழைய ஏற்பாட்டில் ஆராதனை இருக்க முடியாது. ஆகவே, எபிரெயர் 7ல் ஆபிரகாம் ஆராதனையில் ஈடுபட வந்தபோதே கர்த்தருடைய தசம பாகத்தை மெல்கிசேதேக்குக்கு அளித்திருக்கிறான் என்பதை அறிந்து கொள்ளுகிறோம். ஆசாரியனான மெல்கிசேதேக்கின் வழியிலேயே ஆசாரியருக்கெல்லாம் ஆசாரியரான இயேசு வந்தார் என்பதே இப்பகுதி தரும் போதனை. இங்கே காணிக்கை கர்த்தருடைய ஆராதனையின் ஓர் அங்கமாக இருந்திருப்பதையும், அந்தக் காணிக்கை ஆசாரியன் முன் கர்த்தருக்கு வழங்கப்பட்டிருப்பதையும் கவனிக்கிறோம்.*

*பழைய ஏற்பாட்டில் இஸ்ரவேலர்கள் எப்படி ஆராதனை செய்ய வேண்டும்? அதில் காணப்பட வேண்டியவை எவை? என்பதையெல்லாம் கர்த்தர் மோசேக்கு அளித்த கட்டளைகளில் தெளிவாக விளக்கியிருக்கிறார். அந்தக் கட்டளைகள் விளக்கமாக யாத்திராகமத்திலும், லேவியராகமத்தி லும் கொடுக்கப்பட்டிருக்கின்றன. தன்னுடைய ஆலயத்தைக் கட்டுவதெப் படி? அந்த ஆலயத்தில் ஆராதனை செய்வதெப்படி? காணிக்கை கொடுப்ப தெப்படி? என்றெல்லாம் கர்த்தர் தெளிவாக அந்நூல்களில் விளக்கி யிருக்கிறார். கர்த்தர் இவ்வாறு வெளிப்படுத்தியிருந்த கட்டளைகளை மீறி எந்த இஸ்ரவேலனும் ஆராதனை செய்ய முடியாது. இந்தக் கட்டளைகளை மீறி அந்நிய அக்கினியை கர்த்தருக்கு முன் வழங்கியவர்களைக் கர்த்தர் அழித்திருப்பதைப் பழைய ஏற்பாட்டில் பார்க்கிறோம்.*

*யாத்திராகமத்திலும், லேவியராகமத்திலும் இருந்து நாம் நான்கு உண்மைகளைக் கற்றுக்கொள்கிறோம் (1) கர்த்தருடைய ஆராதனை அவருடைய ஆலயத்தைச் சார்ந்ததாக இருந்தது. அதாவது, அவருடைய*

*பிரசன்னமிருக்குமிடமான ஆலயத்திலேயே அவர் ஆராதிக்கப்படவேண்டு மென்பது அவருடைய கட்டளையாக இருந்தது. (2) அவருடைய ஊழியர் களான ஆசாரியர்களும், லேவியர்களுமே ஆராதனையை நடத்தும் அதிகாரத்தைக் கொண்டிருந்தனர். (3) சகல காணிக்கைகளும் ஆலயத்திற்கே கொண்டு வரப்பட்டன. (4) காணிக்கைகள் மூலமாக ஆலயத் தேவைகள் மட்டுமல்லாது லேவியர்களின் தேவைகளும் நிறைவேற்றப்பட்டன. இவற்றில் இருந்து ஆராதனையோடு தொடர்புடையதாக கர்த்தருடைய மக்கள் கொடுக்க வேண்டியிருந்த காணிக்கைகள் கர்த்தருடைய பிரசன்னம் இருந்த ஆலயத்திற்கே கொண்டுவரப்பட்டன என்பதைத் தெளிவாக அறிந்து கொள்கிறோம். இது கர்த்தருடைய ஏற்பாடு. இதை மீறி நடக்க பழைய ஏற்பாட்டில் எவருக்கும் உரிமை இருக்கவில்லை. மீறியவர்களைக் கர்த்தர் தண்டித்தார்.*

## புதிய ஏற்பாட்டில் காணிக்கை

*பழைய ஏற்பாட்டில் நாம் இதுவரை பார்த்துள்ள கர்த்தருடைய விதிமுறைகள் புதிய ஏற்பாட்டில் தொடர வேண்டுமா? தமிழ் கிறிஸ்தவர் களில் அநேகர் பழைய ஏற்பாட்டிற்கும் நமக்கும் இன்று தொடர்பில்லை என்று தவறாக எண்ணி வருகிறார்கள். இதற்குக் காரணம் தெளிவான வேத அறிவு இல்லாததுதான். வைரஸ் போல் தமிழினத்தில் பரவியுள்ள "டிஸ்பென்சேஷனலிசம்" பலரை இந்த நிலைக்குத் தள்ளியுள்ளது. பழைய ஏற்பாடும், புதிய ஏற்பாடும் சேர்ந்ததுதான் நம்மை ஆண்டு வரும் கர்த்தரின் வேதம். கர்த்தர் பழைய ஏற்பாட்டை இல்லாமலாக்கி விடவில்லை. இன்றும் நாம் பழைய ஏற்பாட்டைப் படிக்க வேண்டும். அதன் போதனைகளைக் கைக்கொள்ள வேண்டும். பழைய ஏற்பாட்டில் நாம் பின்பற்றத் தேவை யில்லாதது தகனப்பலிகளும், சர்வாங்கப் பலிகளுந்தான். இயேசு கிறிஸ்து தன்னையே பூரணப் பலியாக சிலுவையில் கொடுத்து கர்த்தரின் நியாயப் பிரமாணத்தை நிறைவேற்றியிருப்பதால் அப்பலிகளைக் கர்த்தரே அகற்றி யிருக்கிறார். அத்தோடு, இன்றைக்கு இஸ்ரவேல் கர்த்தரின் நாடாக அவரால் நேரடியாக ஆளப்படவில்லை. எருசலேம் ஆலயத்திலிருந்து அவருடைய பிரசன்னமும் என்றோ அகன்றுவிட்டது. இதை எசேக்கியல் தீர்க்கதரிசனத்தில் வாசிக்கிறோம். இன்று அந்த ஆலய ஆராதனையைக் கர்த்தர் நம்மிடம் எதிர்பார்க்கவில்லை. இவற்றைத் தவிர பழைய ஏற்பாட் டில் காணப்படும் பத்துக் கட்டளைகள் உட்பட ஏனைய அநேக போதனை களையும் நாம் இன்றும் தவறாது பின்பற்ற வேண்டும். கர்த்தர் புதிய ஏற்பாட்டிலிருந்து மட்டுமல்லாமல் பழைய ஏற்பாட்டின் மூலமும் நம்மோடு தொடர்ந்து பேசிக்கொண்டிருக்கிறார்.*

*பழைய ஏற்பாட்டில் கர்த்தர் ஏற்படுத்தியுள்ள காணிக்கை வழங்கும் முறை இன்றைக்கு எந்தவகையில் பொருந்தும்? பழைய ஏற்பாட்டில் இருவித காணிக்கை முறைகளைப் பார்க்கிறோம். (1) இஸ்ரவேலர்கள் கர்த்தருக்கு தசம பாகத்தை வழங்கினார்கள். இந்தத் தசம பாகம் லேவியர் களுக்காக வழங்கப்பட்டது. இது தவிர வேறு தசம பாகங்களையும் வருடாந்தரமாகவும், மூன்று வருடங்களுக்கு ஒரு முறையும் வேறு காரணங் களுக்காக ஆலயத்தில் வழங்கியிருக்கிறார்கள். (2) அடுத்ததாக, தாங்களே*

*தீர்மானித்து கர்த்தருக்காகக் காணிக்கை வழங்கினார்கள். இந்த இரு முறைகளில் பழைய ஏற்பாட்டில் காணிக்கை வழங்கப்பட்டிருக்கிறது. இதில் முக்கியமான அம்சம் என்னவென்றால் இவை கர்த்தருடைய ஆலயத்திலேயே வழங்கப்பட்டிருப்பதுதான்.*

*புதிய ஏற்பாட்டைப் பொறுத்தவரையில் தசம பாகம் வழங்கும் முறை இன்றும் தொடர வேண்டும். சிலர் இது இன்று அவசியமில்லை என்பார்கள். ஆனால், இதன் அவசியத்தைப் புதிய ஏற்பாட்டின் சில பகுதிகள் சுட்டிக் காட்டுகின்றன. (1) தசம பாகம் வழங்கும் முறை நியாயப்பிரமாணம் மோசேக்கு கொடுக்கப்படுவதற்கு முன்பே இருந்திருப்பதால் அது ஆராதனையின் ஒரு பகுதியாக படைப்பில் இருந்தே தொடர்ந்த முறையாக இருக்கிறது. ஆகவே, அது இன்றைக்கும் பொருந்தும். (2) ஆபிரகாம் தசம பாகம் வழங்கியது பற்றி எபிரெயர் நிருபத்தில் சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது. தசம பாகம் என்பது நமக்குச் சொந்தமான அத்தனை சொத்திலும் செலவழிப்பதற்கு முன்பாக பத்திலொன்றைக் கர்த்தருக்கு வழங்குவதாகும். கையில் சம்பளம் கிடைத்தவுடன் செலவுகளைக் கழித்துவிட்டு மிகுதி இருப்பதில் பத்தில் ஒன்றைக் கொடுப்பது திருடுவதற்கு சமமாகும். தசம பாகம் கர்த்தருக்கு சொந்தமானது. நமது காணிக்கைகளில் தசம பாகம் வெறும் ஆரம்பத் தொகை மட்டுமே. தசம பாகம் கொடுப்பது மட்டுமே காணிக்கையாகிவிடாது. காணிக்கைத் தொகை நமது ஆத்தும ஆழத்தில் இருந்து விசுவாசத்தின் அடிப்படையில் தீர்மானிக்கப்பட வேண்டியது. அது தியாகத்தோடு கொடுக்கப்பட வேண்டியது. தசம பாகம் மிக அவசியமானபோதும் அது நாம் கர்த்தருக்குக் கொடுக்க வேண்டிய காணிக்கைகளின் ஒரு பகுதி மட்டுமே என்பதை உணர்வது அவசியம்.*

*இன்றைக்கு நாம் தசம பாகம் மட்டுமல்லாமல் நாம் மனதில் விரும்பித் தீர்மானிக்கின்ற காணிக்கைகளையும்* (Free will offering) *கர்த்தருக்கு கொடுக்க வேண்டும். புதிய ஏற்பாட்டுப் போதனையின்படி, சுயமாக நமது மனதில் ஒரு தொகையைத் தீர்மானித்து சுதந்திரமாகவும், உற்சாகமாகவும் வாராவாரம் நாம் கர்த்தருக்கு காணிக்கையாக வழங்க வேண்டும். இதை 2 கொரிந்தியர் 9ம் அதிகாரம் மக்கெதோனியர் காணிக்கை கொடுத்த விதத்தை உதாரணம் காட்டி விளக்குகிறது. அவர்கள் விசனத்தினால் அல்லாமலும், கட்டாயத்தினால் அல்லாமலும், உற்சாகமாய் கர்த்தருக்கு காணிக்கை வழங்கியிருக்கிறார்கள். அதையே நாமும் செய்ய வேண்டும்.*

## காணிக்கை அளிக்க வேண்டிய இடம்

*இதுவரை கர்த்தருக்குக் கொடுக்க வேண்டிய காணிக்கை எது என்று பார்த்தோம். இனி அதை எங்கே கொடுப்பது என்று பார்ப்போம். இங்குதான் நாம் சிந்திக்க வேண்டிய அவசியமிருக்கிறது. பழைய ஏற்பாட்டில் காணிக்கைகளை ஆராதனையின் பகுதியாக ஆலயத்திற்குக் கொண்டுவர வேண்டியிருந்தது என்று பார்த்தோம். அதற்கு வெளியில் கொடுப்பது கர்த்தருக்கு கொடுத்ததாகாது. இதற்குக் காரணம், (1) கர்த்தர் ஆராதனையை ஏற்படுத்தி காணிக்கை வழங்குவதை அதன் ஒரு பகுதியாக்கினார். (2) ஆராதிக்கிறவர்கள் காணிக்கைகளைக் கர்த்தரின் பிரசன்னம் காணப்*

*படுகின்ற ஆலயத்திற்கே கொண்டு வரவேண்டும் என்ற விதி இருந்தது. (3) அந்தக் காணிக்கைகளை எங்கு எவ்வாறு பயன்படுத்த வேண்டும் என்பதையும் கர்த்தரே தீர்மானித்திருந்தார். பழைய ஏற்பாட்டில் காணப்படுகின்ற இந்த மூன்று வழிமுறைகளும் புதிய உடன்படிக்கை காலத்தில், புதிய உடன்படிக்கை ஆராதனைமுறையில் இருந்து அகற்றப்படவில்லை. ஆராதனை செய்யும் இடமும், ஆராதனை வழிமுறைகளுந்தான் மாற்றப்பட்டிருக்கின்றனவே தவிர மேலே நாம் பார்த்த மூன்று உண்மைகளும் இன்றும் பொருந்தும்.*

*முதலில் கர்த்தரின் பிரசன்னம் இன்று எங்கிருக்கிறது என்று பார்ப்போம். இரண்டு மூன்று விசுவாசிகள் கூடுகிற இடத்திலெல்லாம் அவர் இருக்கிறார் என்று வெகு சுலபமாக சிலர் பதிலளிப்பார்கள். ஆனால், மத்தேயு 18:20ல் இருந்து அவர்கள் இதற்கு ஆதாரம் காட்டினாலும் அந்தப் பகுதியில் தரப்பட்டுள்ள போதனையை அவர்கள் விளங்கிக்கொள்ளவில்லை. மத்தேயு 18:20, கர்த்தர் சிறப்பாக பிரசன்னமாக இருப்பது அவருடைய சபையில்தான் என்பதை விளக்குகிறது. இந்தப் பகுதியை முறையாக விளங்கிக்கொள்ளுவது அவசியம். இதில் இயேசு உள்ளூர் திருச்சபை அங்கத்தவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுப்பது எப்படி என்று விளக்குகிறார். 17ம் வசனத்தில் இரண்டு முறை "சபை" என்ற வார்த்தை உள்ளூர் திருச்சபையைக் குறித்துப் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. கர்த்தரின் பெயரில் சபைகூடி ஒழுங்கு நடவடிக்கை எடுக்கும்போது கர்த்தரே முன்வந்து அதை அங்கீகரிக்கிறார். இது சபையின் அதி உயர்ந்த விசேட தன்மையையும், அதன் அதிகாரத்தையும் விளக்குகிறது. "இரண்டு மூன்று பேர்" என்ற பதங்கள் சபையைக் குறிக்கின்றன. அதாவது, சபை சிறியதாக இருந்தாலும் பெரிதாக இருந்தாலும் கர்த்தரின் அதிகாரமுள்ள விசேட பிரசன்னம் அது கூடிவரும்போது இருக்கிறது என்பது இந்த வசனத்திற்குப் பொருள். பழைய ஏற்பாட்டில் கர்த்தரின் பிரசன்னம் எருசலேம் ஆலயத்தில் இருந்தது. இன்றைக்கு நாம் ஆராதிக்க ஆலயத்தையோ அல்லது விசேட கட்டங்களையோ கர்த்தர் கட்டச்சொல்லவில்லை. வேத அடிப்படையில் இரட்சிக்கப்பட்ட ஆத்துமாக்களை மட்டும் கொண்டு ஏற்படுத்தப்பட்டுள்ள முறையான சபைகளே இன்றைக்கு கர்த்தரின் பிரசன்னம் காணப்படும் ஆராதனை ஸ்தலங்கள். வேதம் சபையென்று குறிப்பிடுவது ஓரிடத்தில் ஆராதனைக்கு கூடிவரும் சபையாரையே. அவ்வாறு கூடிவருவதற்கு தம்மை ஒப்புக்கொடுத்த இரட்சிக்கப்பட்ட ஆத்துமாக்களின் மத்தியிலேயே கர்த்தரின் பிரசன்னம் இருக்கிறது.*

*விசுவாசத்திற்குரிய முக்கியமான செயல்களையெல்லாம் கர்த்தர் சபை கூடி வந்து செய்யும்படியே பணித்திருக்கிறார். உதாரணமாக தனி ஜெபங்கள் நமது விசுவாச வாழ்க்கைக்கு அவசியமானாலும், கர்த்தருக்குரிய ஆராதனையை சபைகூடிவந்தே கொடுக்க வேண்டுமென்று கர்த்தர் கட்டளையிட்டு சபையையும், ஓய்வு நாளையும் ஏற்படுத்தியிருக்கிறார். விசுவாசிகளைத் திருத்தி, பரிசுத்தப்படுத்த அவசியமான ஒழுங்கு நடவடிக்கையை எடுக்கும் அதிகாரத்தைக் கர்த்தர் சபைக்கே அளித்திருக்கிறார் (மத்தேயு 18, 1 கொரிந்தியர் 5). சபை கூடிவரும்போது மட்டுமே*

*திருவிருந்து அளிக்கப்பட வேண்டும் என்பதும் கர்த்தரின் கட்டளை (1 கொரிந்தியர் 11). சபை மட்டுமே திருமுழுக்கைக் கொடுக்கும் அதிகாரத்தை யும் கொண்டிருக்கிறது (மத்தேயு 18). கர்த்தர் ஊழியக்காரர்களை சபைக்கே அளிக்கிறார். சபையிலேயே அவர்களை இனங்காண முடியும் (எபேசியர் 4:11-13). ஊழியக்காரர்களை சபையில் மட்டுமே இனங்காண முடியும் என்பதால்தான் எபேசு சபைப் போதகராக இருந்த தீமோத்தேயுவுக்கு ஊழியக்காரர்களை இனங்கண்டுகொள்ள அவசியமான இலக்கணங்களை 1 தீமோத்தேயு 3லும், தீத்துவிலும் பவுல் விளக்கியிருக்கிறார். அந்த நிருபங் கள் சபையில் வாசிக்கப்படுவதற்காக சபைக்கு எழுதப்பட்ட நிருபங்கள். சபை மட்டுமே சுவிசேஷத்தை அறிவித்து சபை நிறுவும் பணியைச் செய்ய ஊழியர்களை அனுப்பும் அதிகாரமுள்ள கர்த்தரின் அமைப்பு (அப்போஸ். 13). இதிலிருந்து சபைகூடி வரும்போது கர்த்தரின் அதிகார பூர்வமான பிரசன்னம் அங்கு மட்டுமே காணப்படுவதற்கான காரணத்தைப் புரிந்து கொள்வது நமக்குக் கடினமாக இருக்காது. இத்தனைப் பெருமைகளைக் கொண்டிருக்கும் கர்த்தரின் சரீரமான சபை மட்டுமே இந்த உலகில் அவருடைய பிரசன்னத்தைக் கொண்டிருக்கும் தெய்வீக அமைப்பு. ஒரு சபை சிறியதோ, பெரியதோ அதுவல்ல முக்கியம். அது வேத இலக்கணங் களைக் கொண்டமைந்து, வேத அடிப்படையில் இயங்கி வருமானால் அது கர்த்தரின் பிரசன்னத்தைக் கொண்டிருக்கும் தெய்வீக அமைப்பு.*

*சபையே இவ்வாறு கர்த்தரின் பிரசன்னத்தைக் கொண்டிருப்பதால் தசம பாகம் மற்றும் காணிக்கைகள் அங்கேயே கொடுக்கப்பட வேண்டும். இதனாலேயே 1 கொரிந்தியர் 16ம் அதிகாரத்தில் பவுல் அப்போஸ்தலன் தர்மபணத்தைப் பற்றி கலாத்திய நாட்டுச் சபைகளுக்கு கொடுத்த ஆலோசனையைக் கொரிந்து சபையும் பின்பற்ற வேண்டும் என்கிறார். அவ்வாலோசனை என்ன? "நான் வந்திருக்கும்போது பணஞ்சேர்க்குதல் இராதபடிக்கு உங்களில் அவனவன் வாரத்தின் முதல்நாள்தோறும், தன்தன் வரவுக்குத் தக்கதாக எதையாகிலும் தன்னிடத்திலே சேர்த்து வைக்கக் கடவன்" என்கிறார் பவுல். இங்கே இரண்டு உண்மைகளை பவுல் விளக்குகிறார். முதலாவது, சபையைச் சார்ந்த ஒவ்வொரு அங்கத்தவரும் தன்னுடைய வருமானத்திற்கு ஏற்றமுறையில் ஒரு தொகையை காணிக்கை யாக சேர்த்து வைக்க வேண்டும். இரண்டாவதாக, வாரத்தின் முதல் நாளான ஓய்வு நாளில் சபைகூடிவரும்போது அந்தக் காணிக்கையை சபைக்குக் கொடுக்க வேண்டும். பவுல் கொரிந்துக்கு வருகிறபோது ஓய்வு நாளில் அவரும் சபையிலேயே ஆத்துமாக்களை சந்திக்கப் போகிறார், கர்த்தரை ஆராதிக்கப் போகிறார். அன்றைய தினமே ஆராதனையின் ஒரு பகுதியாக ஆத்துமாக்கள் காணிக்கைகளையும் கர்த்தருக்கு வழங்கு வார்கள். இதன் மூலம் ஆத்துமாக்கள் தசம பாகம் மற்றும் காணிக்கைகள் வழங்க வேண்டிய ஒரே இடம் உலகமெல்லாம் கர்த்தர் நிறுவியுள்ள உள்ளூர் திருச்சபைகள் என்பதை நாம் சந்தேகமில்லாமல் அறிந்துகொள்ள முடிகிறது.*

*அப்போஸ்தலர் நடபடிகளில் ஆதிசபை எவ்வாறாக நிறுவப்பட்டது என்பதை வாசிக்கிறோம். அங்கே அப்போஸ்தலர்களின் தலைமையில்*

சபைகள் அமைக்கப்பட்டு இயங்கி வந்ததைப் பார்க்கிறோம். அக்காலத்தில் கிறிஸ்துவை விசுவாசித்த அனைவரும் சபைகளிலேயே தங்களை இணைத் துக் கொண்டிருந்தார்கள். விசுவாசிகள் என்று தம்மை அழைத்துக் கொண்டு அந்த சபைகளுக்கு வெளியில் எவராவது இருந்திருந்தால் அவர்களுக்கும் அப்போஸ்தலர்களுக்கும் எந்தத் தொடர்பும் இருந்திருக் காது. புதிய ஏற்பாட்டு நிருபங்களும் சபைகளுக்கே எழுதப்பட்டிருந்தன. சபைகளில் தங்களை இணைத்துக் கொண்டிருந்தவர்களுக்கே அன்றைக்கு வேத வார்த்தைகள் கிடைத்தன. அத்தோடு விசுவாசிகள் சபைகளில் இருந்து சபைகளுக்கு காணிக்கைகளை அளித்து சபைகள் மூலமாகவே சகல ஊழியங்களிலும் ஈடுபட்டிருந்திருக்கிறார்கள். கர்த்தரின் திருச்சபைக் கும் காணிக்கைக்கும் இவ்வாறாக பிரிக்க முடியாத பெருந்தொடர் பிருப்பதை விசுவாசிகள் உணர்வது அவசியம்.

## இன்றைய ஊழியங்களின் நிலை

கர்த்தரின் வேத போதனைகளின்படி அவருடைய விசேட பிரசன்னத்தை நாம் காணமுடிகின்ற அவருடைய சரீரமான திருசபைக்கே தசம பாகத்தை யும், காணிக்கைகளையும் அளிக்க வேண்டும் என்று பார்த்தோம். அப்படி யிருக்க திருச்சபைகள் என்று அழைக்கப்படுகின்ற அனைத்து அமைப்பு களையும் மெய்த்திருச்சபைகள் என்று அழைக்க முடியுமா? என்று எவராது நிச்சயம் கேட்டுவிடலாம். உண்மையில் இன்று பெரும்பாலான பாரம்பரிய சபைகள் (சி. எஸ். ஐ, மெத்தடிஸ்டு, பிரெஸ்பிடீரியன், லூதரன், பாப்திஸ்து சபைகள்) கர்த்தரின் வேதத்தை நிராகரித்து பாரம்பரியத்துக்கும், பண்பாட் டுக்கும் இடம்கொடுத்து ஆத்தும ஈடேற்றத்துக்கு இடமில்லாத சாத்தானின் கூடாரங்களாக மாறிவிட்டன. இரட்சிப்புக்கு இன்று அங்கே வழி இல்லை. அவை சாதிப்பித்தும், சம்பிரதாயமும் தலைவிரித்தாடும் பிண ஊழியக் கூடங்களாக இருக்கின்றன. இத்தகைய பாரம்பரிய சபைகளில் தொடர்ந் திருப்பது திருமண வைபவத்துக்கு கட்டடத்தையும், மரண சடங்குகள் நடத்துவதற்கு ஒரு பிசப்பையோ, ரெவரண்டையோ மட்டுமே கிடைக்க வழி செய்யும். இந்த அமைப்புகளுக்கெல்லாம் தசம பாகத்தையும், காணிக்கைகளையும் கொடுப்பதால் இரட்சிக்கப்பட்ட ஆத்துமாக்கள் கர்த்த ரின் தண்டனையை மட்டுமே அநுபவிக்க முடியும். கர்த்தருக்குரிய பணத்தை அவருடைய வேதத்தை நிராகரித்து நடப்பவர்கள் கையில் கொடுப்பதை கர்த்தர் எப்போதுமே வெறுக்கிறார்.

சபை ஊழியங்களில் ஈடுபடாது தனி மனிதனை முதன்மைப்படுத்தி நடந்து வரும், தினகரனின் இயேசு அழைக்கிறார், மோகன் சி. லாசரஸ், சாம் ஜெபத்துரை, எமில் ஜெபசிங் (விஸ்வவானி) போன்றவர்களின் ஊழியங்களுக்கும் தமிழினத்தில் குறைவில்லை. இவர்கள் கிறிஸ்தவர்களிடம் பணம் பண்ணுவதில் முன்னணியில் இருக்கிறார்கள். இவர்கள் வாங்கும் பணம் கொஞ்ச நஞ்சமல்ல. இவர்களுடைய கூட்டங்களெல்லாம் பணம் சேர்ப்பதையே பெருநோக்கமாகக் கொண்டு நடத்தப்படுகின்றன. கர்த்தரின் பெயரை இவர்கள் கண்மூடித்தனமாகப் பயன்படுத்துவதால் கர்த்தருடைய ஊழியக்காரர்களைப் பற்றித் தவறாகப் பேசக்கூடாதென்ற பயத்தில் பணத்தை வாரி வழங்கிவிட்டு மனதைத் தேற்றிக்கொள்ளுகிற ஏமாளிகள்

நம்மத்தியில் அதிகம். இவர்கள் வாங்கும் பணத்தின் கணக்கு இவர்களுக்கே தெரியுமோ தெரியாது. இவர்கள் எவருக்கும் கணக்குக் கொடுப்பதேயில்லை. இவர்கள் யாருக்கும் கட்டுப்பட்டவர்களுமல்ல. இந்துக் கோயில்களுக்குக்கூட கணக்குப் பார்க்க தேவஸ்தான நிர்வாகிகள் இருக்கிறார்கள். இந்த இயேசு பக்தர்கள் எவரையும் தங்களுக்கு நிர்வாகிகளாக வைப்பதில்லை. இவர்கள் தங்களுடைய சொந்தக் குடும்பத்தை மட்டுமே பண விஷயத்தில் நம்பி நடந்துகொள்ளுவார்கள்.

தனி ஊழியங்களாக தனி மனிதர்களால் காளான்கள் போல் நாள்தோறும் முளைத்து பட்டிதொட்டியெல்லாம் இருந்து வரும் ஊழியங்களைப் பார்த்தால் இங்கே தனி மனிதனும் அவனுடைய குடும்பமும் மட்டுமே பேங்க் அக்கவுன்ட்டுக்கும், பணப்பெட்டிக்கும் பொறுப்பாக இருப்பார்கள். கொடுக்கப்படும் எந்தப் பைசாவுக்கும் இவர்களிடம் இருந்து எவருக்கும் கணக்குக் கிடைக்காது. கேட்டுவிட்டால், “கர்த்தருடைய பணத்துக்கு கணக்குக் கேட்கக் கூடாது. வலது கை கொடுப்பது இடது கைக்குக் தெரியக்கூடாதென்று” இனிப்பாக பேசி ஏமாற்றி வருகிறார்கள். இந்த சிற்றூழியங்களை நடத்துகிறவர்கள் தங்களுக்கு வருமானம் தரும் ஒரு வேலையாகவே கருதி அதை நடத்தி வருகிறார்கள். இவர்கள் கையில் போய்ச் சேரும் எந்தப் பணமும் ஆற்றில் போட்ட வெல்லத்தைப் போலத்தான் போய் முடியும்.

இவற்றையெல்லாம்விட நூற்றுக்கணக்கில் இருக்கும் ஸ்தாபனங்களுக்கும் குறைவில்லை. தமிழ் கிறிஸ்தவர்கள் தங்களை ஏமாற்றிக்கொண்டு, இவர்களிடமும் ஏமாந்து காணிக்கை கொடுத்துவரும் ஊழியங்கள் இப்படிப் பட்டவைதான். இவையெல்லாம் கர்த்தரின் ஊழியங்களா? இவர்கள் சம்பாதிக்கும் பணத்துக்கு எங்கே கணக்குக் காட்டி எவ்வளவு வருமானவரி கட்டுகிறார்கள்? வருமான வரி விலக்குப் பத்திரம் பெறக்கூட கணக்குக் காட்ட வேண்டும் என்று விதி இருக்கிறது. பணம் கொடுப்பவர்களுக்கு ஒரு ரசீதோ அல்லது வருடாந்தர கணக்கோ கொடுக்காதவர்களுக்கு பணம் கொடுக்கும்படி கர்த்தர் எங்கே சொல்லியிருக்கிறார். நாம் கொடுக்கிற பணம் அவருடைய வார்த்தையின் அடிப்படையில் நடக்கும் ஊழியத்துக்கு மட்டுமே போய்ச் சேர வேண்டுமென்று கர்த்தர் சொல்லியிருக்க கண்மூடித் தனமாக நாம் கண்டவர்களுக்கு பணத்தைக் கொடுப்பது எப்படிச் சரியாகும்? அது கர்த்தருக்குப் போகிறது என்று நம்மை நாமே சமாதானப் படுத்திக் கொள்வதை கர்த்தர் எப்படி விரும்புவார்?

## எது மெய்ச்சபை?

காணிக்கையை முறையாகக் கொடுக்க என்ன செய்ய வேண்டும்? என்று நீங்கள் கேட்கலாம். அதற்கு முதலில் நல்ல சபைகளை நாம் அடையாளங் கண்டு அந்த சபைகளுக்கு நம்மை ஒப்புக் கொடுக்க வேண்டும். அந்த சபைகளில் இருந்து ஆராதனை செய்து கர்த்தருக்கு காணிக்கை கொடுக்க வேண்டும். கர்த்தர் காணிக்கையைவிட முதலில் நாம் நல்ல உள்ளூர் சபைகளில் இருந்து ஆராதித்து வளர்வதையே விரும்புகிறார்; அதுவே அவரின் கட்டளையுமாகும். அப்படியானால் மெய்த்திருச்சபைகளை எப்படி அடையாளம் காணுவது என்று நீங்கள் கேட்கலாம். உங்கள்

கேள்விக்கு வேதம் தெளிவாக பதில் தருகிறது. ஆனால், அதைக் கேட்டு நடக்கும் இதயமற்றவர்களாகத்தான் நம்மில் பலர் தொடர்ந்தும் இருந்து வருகிறோம். வேத அறிவின்றியும், சிந்தித்து செயல்படும் திறனின்றும், மனித பயத்தால் வாழ்ந்தும் செய்ய வேண்டியதை செய்யத் தவறிவிடுகிறார்கள் அநேகர். எந்தக் காரியத்தையும் பொறுப்பேற்று செய்து முடிக்கவும் நம்மில் பலருக்கு இதயமில்லை இன்று. இனி நாம் விளக்கப்போவதையாவது சிலர் சிந்தித்துப் பார்த்து செயல்பட்டால் கர்த்தர் மனம் நிச்சயம் மகிழும். வேதம் இனங்காட்டும் மெய்திருச்சபைகளை எப்படிக் கண்டுபிடிப்பது? கீழ்வரும் அம்சங்கள் காணப்படுகிற சபைகள் மட்டுமே மெய்ச்சபைகளாக இருக்க முடியும் என்பது புதிய ஏற்பாடு தெளிவாக விளக்கும் சத்தியம்.

(1) அத்தகைய சபைகளில் வேத அதிகாரத்துக்கு உயர்வான இடங்கொடுக் கப்பட்டிருக்கும். அங்கே பிரசங்கங்களுக்கும், போதனைகளுக்கும் மட்டுமே உயர்ந்த இடம் இருக்கும். வெறும் உளரல்களுக்கும், தனிமனித சாட்சியங் களுக்கும், இசை நிகழ்ச்சிகளுக்கும் அங்கே இடமிருக்காது. ஆராதனை தேவ பயத்துடன் நடத்தப்படும். இரட்சிப்புக்குரிய சுவிசேஷத்தைப் பிரசங் கிப்பதும், ஆத்தும ஈடேற்றத்துக்கான சத்துள்ள பிரசங்கங்களையும், போதனைகளையும் அளிப்பதும் மட்டுமே இத்தகைய சபைகளின் குறிக் கோளாக இருக்கும். எந்தக் காரியத்திலும் இறுதி முடிவெடுக்க இச்சபைகள் வேதத்தையே நாடி வரும். வேதம் சொல்லுகிறபடி செய்வோம்; அது சொல் லாததைக் கனவிலும் எண்ணமாட்டோம் என்ற வைராக்கியத்தோடு செயல்படுகிறதாக இச்சபைகள் இருக்கும்.

(2) இச்சபைகள் இரட்சிக்கப்பட்டவர்களை மட்டுமே கொண்டமைந்த தெளிவான அங்கத்துவ அமைப்பைக் கொண்டிருக்கும். அவ்வாறு அமைக் கப்பட்ட அங்கத்துவமும், அச்சபை மூப்பர்களும் தாம் கட்டுப்பட்டு நடக்கக்கூடியதாக ஒரு விசுவாச அறிக்கையையும், சபை நிர்வாக விதி முறைகளை விளக்கும் சபை சட்ட விதிகளையும் கொண்டிருப்பார்கள். இந்தச் சபைகளில் இணையும் எந்த ஆத்துமாவும் இவற்றை விளங்கி ஏற்று இவற்றிற்கு கட்டுப்பட்டு நடக்கும்படியாக எதிர்பார்க்கப்படுவார்கள். இத்தகைய சபைகளில் இவற்றை மீறிப் போதகர்களோ அல்லது அங்கத்த வர்களோ நடக்க முடியாது.

(3) ஆத்தும ஆதாயமும், ஆத்தும ஈடேற்றமும் மட்டுமே இந்தச் சபைகளின் இறுதி இலட்சியமாக இருக்கும். ஆத்துமாக்களுக்கு நல்ல தெளிவான வேதபோதனைகள் மட்டுமல்லாது, போதகக் கண்காணிப்பும் தவறாது கிடைக்கும். போதகர்கள் ஆடுகளைவிட்டு தள்ளி நிற்காமல் அவர்களுக்கு அருகிலேயே இருப்பார்கள். எந்த ஆத்துமாவும் தேடிப்போய் தன் ஆத்தும தேவைகளை நிறைவேற்றிக்கொள்ளக்கூடிய வசதிகளை இந்த சபைப் போதகர்கள் ஏற்படுத்தித் தந்திருப்பார்கள்.

(4) வேதபூர்வமான சபை அமைப்பை இச்சபைகள் கொண்டிருக்கும். வேத அடிப்படையில் ஆராயப்பட்டு நியமிக்கப்பட்ட ஒன்றுக்கு மேற்பட்ட மூப்பர்களை இச்சபைகளில் காணலாம். அத்தோடு உதவிக்காரர்களும் இங்கிருப்பார்கள். ஒன்றுக்கு மேற்பட்ட மூப்பர்கள் இல்லாத நிலையில்

ஒரேயொரு போதகர் மட்டுமே இத்தகைய சபை ஒன்றில் பணிபுரிவாரானால் அவர் சபைப் பணவிடயங்களில் தனக்கு பெயர் கெட்டுவிடக்கூடாதென்பதற்காக உதவிக்காரர்களை அல்லது முதிர்ந்த சபை அங்கத்தவர்களில் சிலரைப் பணவிஷயங்களில் பொறுப்போடு நடக்க சபை அனுமதியுடன் நியமித்திருப்பார். அவருடைய பெயரில் நிச்சயம் சபை பேங்க் அக்கவுன்ட் இருக்காது. சபை ஆத்துமாக்களின் தசமபாகமும், காணிக்கைகளும் பொறுப்போடு அதற்குரிய பொறுப்பாளிகளால் சேர்க்கப்பட்டு சபை அங்கத்தவர் கூட்டங்களில் விபரமாக சல்லிக்காசு தவறாமல் கணக்குக் கொடுக்கப்படும். சபை மக்களுக்கும் அந்தக் கணக்கு விபரங்கள் தெரிவிக்கப்படும். போதகரின் சம்பளம் முதற்கொண்டு அங்கத்தவர்களுக்கு விபரங்கள் தெரியக்கூடிய விதத்தில் நிர்வாகம் அமைந்திருக்கும். யார், யார் அங்கே காணிக்கை கொடுக்கிறார்களோ அவர்களுக்குத் தெரியாத எந்தக் கணக்கு விபரமும் இருக்காது. பெரிய செலவுகள் எல்லாம் சபை அங்கத்தவர்கள் கூட்டங்களிலேயே முடிவு செய்யப்பட்டு சபை அதிகாரிகளான மூப்பர்களாலும், உதவிக்காரர்களாலும் ஊழியத்தில் பயன்படுத்தப்படும்.

இந்த நான்கு அடிப்படை இலக்கணங்களையும் ஒரு சபை கொண்டிராமல் இருந்தால் அதை சபையென்று அழைப்பதற்கு வேதம் நமக்கு அதிகாரம் தரவில்லை. ஒரு மெய்ச்சபை ஒருபோதும் இவ்வுலகில் பூரணமானதாகக் காணப்படாது. அதில் பல குறைபாடுகளும் காணப்படும். ஆனால், அவற்றில் நாம் மேலே பார்த்த நான்கு அம்சங்களையும் தெளிவாகக் காணக்கூடியதாக இருக்கும். இந்த இலக்கணங்களைக் கிறிஸ்துவே நமக்குத் தந்திருக்கிறார். வெளிப்படுத்தல் விசேஷத்தின் முதல் மூன்று அதிகாரங்களிலும் நாம் வாசிக்கின்ற ஏழு சபைகளும் சபைகள்தான். அவற்றில் குறைபாடுகள் இல்லாமலில்லை. ஆனால், இந்த நான்கு அம்சங்களும் அவற்றில் நிச்சயம் இருந்தன. இவை இல்லாமலிருந்திருந்தால் சபை அமைப்பை உருவாக்கி சபைகள் எப்படி இயங்க வேண்டும் என்று புதிய ஏற்பாட்டில் தெளிவாக விளக்கியிருக்கும் கர்த்தர் அவைகளை சபைகள் என்று அழைத்துப் பேசியிருக்க மாட்டார்.

இந்த நான்கு அடையாளங்களையும் காணமுடியாத சபைகளாக தங்களை அறிவித்துக்கொள்ளும் அமைப்புகளில் இரட்சிக்கப்பட்ட விசுவாசிகள் இணைந்து வாழ்ந்து தங்களுடைய ஆவிக்குரிய வாழ்க்கையை அழித்துக் கொள்ளக்கூடாது. இந்த நான்கு அம்சங்களும் இருக்கின்றனவா என்பதை ஆராய்ந்து பார்த்துவிட்டே எந்த அமைப்புகளிலும் இரட்சிப்படைந்த ஆத்துமாக்கள் இணைய வேண்டும். இந்த அம்சங்கள் காணப்படாத எந்த சபைகளுக்கும் எவரும் காணிக்கை கொடுப்பதை நிறுத்திக்கொள்ள வேண்டும். வேத அடிப்படையில் நடந்து வராத அமைப்புகளுக்கு பணம் கொடுப்பதால் நமது பாவம் மட்டுமே அதிகரிக்கும். வேத அடிப்படையில் நடந்து வராத அமைப்புகளுக்கு போய்ச் சேரும் பணம் கர்த்தரின் பணிகளுக்காக அவருடைய சித்தப்படி செலவழிக்கப்படுவதில்லை. அவர்கள் அப்பணத்தை விரயமாக்கி கர்த்தரின் பணிக்குத் தடையாகவே இருந்துவிடுகிறார்கள். எத்தனை சீ. எஸ். ஐ சபைகள் தினகரனின் ஊழியத்

துக்கு பணத்தை வாரிவழங்கி பல தவறுகளுக்கு உடன் போய்க்கொண்டிருக்கின்றன. எத்தனை ஊழியக்காரர்கள் சபை மக்களுக்குக் கணக்குக் காட்டாமல் காணிக்கைப் பணத்தை ஏப்பம்விட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

இதை வாசிக்கும் சிலர், தவறு அவர்களுடையதுதான், என் பணி கர்த்தருக்குக் கொடுக்க வேண்டியதைக் கொடுப்பது, அவர்கள் செய்யும் தவறுக்கு அவர்களே பொறுப்பாளி, நாங்களல்ல என்பார்கள். அதுதான் தவறு. நீங்கள் சிந்தித்து ஆராயாமல் இந்தத் தவறான அமைப்புகளுக்குக் காணிக்கை கொடுப்பதால் அதைக் கொடுக்கும் நீங்கள் கர்த்தருக்கு நிச்சயம் பதில் சொல்லித்தான் ஆக வேண்டும். கர்த்தருக்குக் கொடுக்க வேண்டியதை, பொறுப்பைத் தட்டிக்கழித்துவிட்டு தவறான அமைப்புக்குக் கொடுக்கும் உங்களைக் கர்த்தர் சும்மாவிட்டுவிடமாட்டார். இதைப் புரிந்து கொள்ளுங்கள். நீங்கள் இரட்சிக்கப்பட்டவராக இருந்தால் இந்த அமைப்புகளுக்கும், சபைகளுக்கும் காணிக்கை கொடுப்பதை நீங்கள் உடனடியாக நிறுத்திவிட்டு மெய்ச்சபைகளை நாடிப்போங்கள். மேலே நாம் பார்த்த நான்கு அம்சங்கள் இருக்கும் சபைகளைத் தேடிப்போய் உங்கள் ஆத்தும விருத்திக்கு வழிதேடிக் கொள்ளுங்கள்.

## கிறிஸ்தவ ஸ்தாபனங்களுக்கு காணிக்கை அனுப்பலாமா?

நல்ல சபைகளில் நாம் இணைந்து வாழ்கிறபோது, அந்த சபை நமது காணிக்கைகளைப் பயன்படுத்தி தனது தேவைகளை நிறைவேற்றிக் கொண்டு அதற்குமேலாக வேதபூர்வமாக நடந்து கணக்குக் காட்டி வரும் நியாயமான ஸ்தாபனங்களுக்கு உதவி செய்யலாம். அதாவது, சபை செய்ய வேண்டிய வேலைகளை செய்யாமல் வேறு நல்ல பணிகளைச் செய்யும் ஸ்தாபனங்களாக நாம் உதவும் ஸ்தாபனங்கள் இருக்க வேண்டும். உதாரணமாக வேதப் புத்தகத்தை வெளியிடுவது, விநியோகிப்பது மற்றும் பெற்றொர்களில்லாத குழந்தைகளைப் பராமரிப்பது போன்ற பணிகள். கண்களை மூடிக்கொண்டு எல்லோருக்கும் காணிக்கை அனுப்புவது பெரும்பாவம். மெய்ச் சபைகள் நல்ல போதகர்களையும், சபை அதிகாரிகளையும் கொண்டிருக்கும்போது அவர்கள் எந்த அமைப்பையும் தெளிவாக ஆராய்ந்து பார்த்தே காணிக்கைகளை அனுப்புவார்கள்.

இதைத் தவிர நாம் எந்த ஸ்தாபனங்களுக்கும் தனிப்பட்டவிதத்தில் பணம் அனுப்பக்கூடாது. கர்த்தர் தன்னுடைய பணிகளை நிறைவேற திருச்சபையைத் தான் ஏற்படுத்தியிருக்கிறாரே தவிர ஸ்தாபனங்களை அல்ல. நாம் சார்ந்திருக்கும் நல்ல சபைகளுக்கு மட்டுமே காணிக்கைகளைக் கொடுக்க வேண்டும். சிந்தித்து செயல்படாமல் பணம் அனுப்புவதால்தான் இன்று தான்தோன்றித்தனமாக நடக்கும் அநேக போலி ஊழியங்களை நாம் உருவாக்கிவிட்டிருக்கிறோம். இவர்களைக் கர்த்தர் உருவாக்கவில்லை. நம்முடைய அறியாமையும், முட்டாள்தனமான செயல்களுமே உருவாக்கிவிட்டிருக்கின்றன. எந்தவகையில் நமது நாட்டு அரசியல் மோசடிகளுக்கு நாமே காரணமாக இருக்கிறோமோ அதேபோல ஊழிய அவலங்களுக்கும் நாமே காரணமாக இருக்கிறோம். இரட்சிக்கப்பட்ட எல்லாத் தமிழ் கிறிஸ்தவர்களும் இந்தக் காரியத்தில் மனந்திரும்புவது என்று தீர்மானித்துவிட்டால் ஊழிய ஊழல்களுக்கு நிச்சயம் முடிவு கட்டிவிடலாம்.

# நமக்கெப்போது விமோசனம்?

தமிழினத்தில் இன்றைக்கு கிறிஸ்தவ ஊழியமும், திருச்சபை ஊழியமும், தரமற்றுக் காணப்படுவதற்கு தகுதியற்றவர்கள் ஊழியத்துக்குள் நுழைவதே பெருங்காரணம். எங்கு பார்த்தாலும் ஊழியம் செய்பவர்கள் நிறைந்து வழிந்தாலும் இருக்க வேண்டிய வேதத் தகுதிகள் இல்லாதவர்கள்தான் நம்மத்தியில் அதிகம். ஊழியத்துக்கு வருபவர்களை ஆராய்ந்து பார்த்து அங்கீகரிக்க கர்த்தர் ஏற்படுத்திய திருச்சபை தமிழினத்தில் வேத அடிப்படையில் இன்றும் ஒரு சிலவே காணப்படுகின்றன. ஸ்தாபனங்களும், தனிநபர் ஊழியங்களும், குடும்ப ஊழியங்களுந்தான் பல்கிப் பெருகி இருக்கின்றன. இந்த நிலையால் கிறிஸ்தவம் நம் நாட்டில் வேத அடிப்படையில் அமைந்து தலைதூக்கி நிற்க முடியாமல் மதிப்பிழந்து காணப்படுகின்றது. இது தமிழர்கள் வாழும் எல்லா நாடுகளிலும் நாம் காண்கின்ற நிலை.

கவலைக்குரிய இந்த நிலைமையால் சுவிசேஷம் வல்லமையோடு பிரசங்கிப்பட முடியாத நிலை உருவாகியிருக்கிறது. சுவிசேஷம் வல்லமையோடு பிரசங்கிக்கப்படாவிட்டால் ஆத்துமாக்கள் இரட்சிப்படைய வழி இல்லை. போலித்தனமான செயல்களால் ஆத்துமாக்களுக்கு இரட்சிப்பு வழங்கும் மனுஷத்தனமான செயல்களைத்தான் இன்று அன்றாடம் பார்க்க முடிகிறது. அதுமட்டுமல்லாமல் சத்தியத்தை சத்தியமாகப் பிரசங்கிக்கும் தகுதியுள்ளவர்களை விரல்விட்டு எண்ணிவிடக்கூடிய நிலையும் உள்ளது. இதனால் வேதவசனப்பஞ்சம் ஏற்பட்டு சத்தியத்தைக் கேட்க முடியாத நிலைமை ஏற்பட்டிருப்பதைப் பார்க்கிறோம். இதெல்லாம் ஆத்துமாக்களில் ஆத்தும ஈடேற்றத்துக்கு வழியில்லாத நிலைமையை ஏற்படுத்தி வைத்திருக்கின்றன. என்னுடைய ஊழியப் பயணங்களில் எங்கு போனாலும் தமிழர்கள் மத்தியில் மட்டுமல்லாது, இந்தியர்கள், கீழைத்தேய நாட்டவர்கள் மத்தியில் இன்றைக்குக் காணப்படும் நிலை இதுதான். கத்தோலிக்கத்துக்கும், கிறிஸ்தவத்துக்கும் இருக்கும் வேறுபாடுகூடத் தெரியாத நிலையிலும், திருச்சபை சீர்திருத்த வரலாறு பற்றி ஒன்றும் தெரியாத நிலையிலும் பல நூற்றாண்டுகள் பின்தங்கிய நிலையில் கீழைத்தேய கிறிஸ்தவத்தின் நிலைமை இன்று இருக்கின்றது.

கீழைத்தேய கிறிஸ்தவத்தைப் பிடித்திருக்கும் நோய் என்ன என்பதைக் கண்டுபிடித்துவிட்டால் மட்டும் நோய் தீர்ந்துவிடாது. இந்த நோய் பல நூற்றாண்டுகளாக இருந்து வருகிறது. கர்த்தரின் அளப்பரிய கிருபையே இன்றைக்கும் பல்வேறு குளறுபடிகளுக்கு மத்தியிலும் தெரிந்துகொள்ளப்பட்டவர்களைத் தொடர்ந்து காத்துப் பராமரித்து வருகிறது. இந்த நோய் தீர என்ன வழி என்று சிந்தித்துப் பார்க்க வேண்டியது அவசியம். நோயை அகற்ற மெய்விசுவாசிகள் நடவடிக்கை எடுக்க வேண்டியது அவசியம். கர்த்தரின் ஆலயத்து வாசல்கள் கட்டப்படாமல் இருப்பதால் அவருடைய

*மகிமைக்கு களங்கம் ஏற்பட்டிருக்கிறதென்று வருந்தி உணவோ, தூக்கமோ இல்லாமல் ஜெபித்து செய்ய வேண்டியதை நெகேமியா செய்யவில்லையா? "இதற்கும் எனக்கும் எந்த சம்பந்தமும் இல்லை. சாதாரண விசுவாசியான நான் அந்நிய நாட்டில் சிறை இருந்துகொண்டு என்ன செய்துவிடமுடியும்" என்று அவன் சும்மா இருந்துவிடவில்லை. நெகேமியா கட்டப்படாமலிருந்த அந்த ஆலய வாசல்களைக் கட்டி முடித்தான். அவன் விசுவாசி, செயல் வீரன். அவனைப்பற்றி வாசித்து மகிழுவதற்காக அவன் வரலாறு நமக்கு வேதத்தில் தரப்படவில்லை. அவனைப்போல வாழ நாமும் முயலவேண்டு மென்பதற்காகத் தான் அதைக் கர்த்தர் நமக்கு எழுத்தில் தந்திருக்கிறார். இதையேதான் தானியேல் தன் காலத்தில் செய்தான். தீர்க்கதரிசிகளும் தங்கள் காலத்தில் அதைத்தான் செய்தார்கள்.*

*நோய் இருக்கிறது என்பதும், அது என்ன நோய் என்பதும் நமக்குத் தெரியும். அதைத் தீர்த்துக்கொள்ள நாம் ஏதாவது செய்கிறோமா? முயற்சி தான் எடுத்திருக்கிறோமா? இந்தப் பத்திரிகையைப் பல வருடங்கள் வாசித் திருக்கிற சில ஊழியக்காரர்கள்கூட "இதெல்லாம் நமக்கெதற்கு, பேசாமல் வாங்குகிற காணிக்கைக்கு எதையாவது செய்துவிட்டு போய்க் கொண்டே இருப்போம்" என்றிருந்துவிடுகிறவர்களாக இருக்கிறார்கள். சத்தியம் பெரிது என்று ஆரம்பத்தில் சவால்விட்டு, உயிரையே அதற்காகக் கொடுப்போம் என்று பேசிய சிலரைக் கூட நான் பார்த்திருக்கிறேன். நோயைத் தீர்க்க முயற்சி எடுக்கும்போது தனக்கும் கைவலிக்கும் என்று உணர்ந்தவுடன் அவர்கள் இன்றைக்கு என் கண்ணில்கூடப்படுவதில்லை. நாக்கு நுனியோடு அவர்களுடைய சத்திய வாஞ்சை நின்றுபோய்விட்டது கவலை தரும் விஷயம்தான். சத்தியம் மட்டும் வேண்டும் என்று ஆரம்பத்தில் பக்கத்தில் நின்ற சில போதகர்கள், அந்தச் சத்தியம் அவர்கள் தண்ணீர்விட்டு வளர்த்துவிட்டிருக்கிற பாரம்பரியப் பேய், பண்பாட்டுப் பிசாசையெல்லாம் தொலைத்துவிடப் போகிறது என்று அறிந்தவுடன் கட்சி மாறிப் புதுப்பல் லவி பாட ஆரம்பித்துவிட்டார்கள். நோய் இருக்கிறது என்று தெரிந்தும் அதைத் தீர்க்கப் புறப்பட்டால் தங்களை ஆத்மீக அறுவைச் சிகிச்சைக்கு உட்படுத்திக்கொள்ள வேண்டுமே என்ற பயத்தில், சுய நலத்தால் இயேசு வைக் காட்டிக் கொடுக்கப் பலரும் இன்று தயாராக இருக்கிறார்கள். இதனால் நோயும் தொடர்கிறது, வளர்கிறது. இதற்கு மருந்து என்ன? நாம் செய்ய வேண்டியது என்ன?*

## (1) போதகர்களுக்கு ஒரு வார்த்தை

*திருச்சபை ஊழியத்தில் ஈடுபட்டு போதகர்களாக இருக்கிறவர்கள் அதைச் செய்வதற்கான தகுதி தங்களிடம் இருக்கிறதா என்பதை ஆராய்ந்து பார்க்க வேண்டும். எப்படியாவது அதற்குள் நாம் நுழைந்திருக்கலாம். இருந்தாலும் அதைத் தொடர்ந்து செய்து கர்த்தரின் ஆசீர்வாதத்தை அடையவேண்டுமானால் போதகர்கள் தங்களை ஆராய்ந்து பார்ப்பது அவசியம். இதற்கு அதிகமான மனத்தாழ்மை அவசியம். ஒரு தொழிலாக மட்டும் கருதி ஊழியத்தை செய்து வருகிறவர்களுக்கு நான் சொல்லுவது ஒன்றும் புரியப்போவதில்லை. மனத்தாழ்மையுள்ளவர்கள் எப்படியோ இதைச் செய்ய வந்துவிட்டோம், இனியாவது திருந்திவிடுவோம் என்ற*

*தீர்மானத்தை எடுத்து தங்களுடைய தகுதிகளை 1 தீமோத்தேயு 3, தீத்து பகுதிகள் அடிப்படையில் ஆராய்ந்து பார்ப்பது அவசியம். அவிசுவாசி களான மனைவிகளைக் கொண்டிருப்பவர்கள உடனடியாக ஊழியத்தை விட்டுவிடுவது நல்லது. மனைவி இரட்சிப்பைப் பெற்றுக்கொள்ள தேவையானவற்றை செய்வது ஊழியத்தைவிட முக்கியமானது. சீ. எஸ். ஐ, மெத்தடிஸ்டு போன்ற பாரம்பரிய சபைகளில் இருந்து உங்கள் மனைவிகள் வந்திருக்கலாம். அதற்காக அவர்கள் விசுவாசிகள் என்று கூறிவிட முடியாது. இரட்சிப்புக்குரிய அநுபவம் இல்லாதவர்களை விசுவாசிகளாகக் கருத முடியாது. வேதமே வாசிக்காத, ஜெபிக்காத, ஆத்தும வளர்ச்சியைக் காண முடியாத மனைவிகளைக் கொண்டிருக்கும் போதகர்களின் ஊழியம் வளராது; வாழாது.*

*அடுத்ததாக, உங்கள் சொந்த ஆத்மீகத் தகுதிகளை ஆராய்ந்து பாருங்கள். ஆத்துமவிருத்தியில் நீங்கள் எங்கே இருக்கிறீர்கள் என்பது மிக முக்கியம். அதன் வளர்ச்சிக்கு நீங்கள் தேவையானதைச் செய்ய வேண்டும். உங்கள் பிள்ளைகள் உங்களுக்குக் கட்டுப்பட்டு வாழ்கிறார்களா? அவர்களுக்கு உங்களுடைய விசுவாசத்தின் அருமை தெரிகிறதா? அவர்களுடைய இரட் சிப்புக்காக ஜெபிக்கிறீர்களா? உங்களுக்கு வேத வசனத்தைப் பிரித்துப் போதிக்கும் தகுதி இருக்கிறதா? வேத வசனப் பிரசங்கமே ஆத்துமாக்களின் ஆத்துமவிருத்திக்கு உதவ முடியும். வேதத்தில் இருந்து தெளிவான பிரசங் கத்தைக் கொடுக்க முடியாதவர்கள் இந்த ஊழியத்தைச் செய்ய முடியாது. வசனத்தைப் படித்துப் பிரசங்கிக்கும் திறமையைப் பெற்றுக்கொள்ள தேவை யானதைச் செய்யுங்கள். அதில் அக்கறைகாட்டாத மனிதன் கர்த்தரின் ஊழியனாக இருக்க முடியாது. வெறும் ஜெபக்கூட்டங்களை நடத்தியும், வீடு வீடாகப் போயும் ஆத்துமாக்களை வளர்க்க முடியாது. ஓய்வு நாளில் நல்ல பிரசங்கங்களை அளித்து, வேதப்பாடங்களைத் தயாரித்து நல்ல முறையில் விளக்கியுமே ஆத்துமாக்களை வசனத்தில் வளர்க்க முடியும். அந்தப் பணியில் கருத்தாக இருக்கிறீர்களா? அந்தப் பணிக்காக பவுல் தன் சரீரத்தை ஒடுக்கிக் கீழ்ப்படுத்தினார். (1 கொரி. 9:26). பிழைப்புக்கடுத்த அலுவல்களில் சிக்கிக் கொள்ள மறுத்தார் (2 தீமோ. 2:4) நீங்கள் செய்ய வேண்டிய வேலையைச் செய்யாமல் வேறு எவரையாவது ஓய்வு நாளில் பிரசங்கம் செய்யவைத்துவிட்டு வேறு வேலைகளில் ஈடுபடுகிறீர்களா? உழைத்துப் படித்து, ஆத்தும பாரத்துடன் ஊழியம் செய்யாதவர்கள் நல்ல ஊழியர்களாக இருக்க முடியாது. ஊழியம் மிகவும் கேடான நிலையில் இன்றிருப்பதற்கு ஊழியத்தில் ஈடுபட்டிருப்பவர்கள் மேலே பார்த்த தகுதி களைக் கொண்டிருக்காததே முக்கிய காரணம். ஏதோ ஒரு உதவாக்கறை பைபிள் கல்லூரியில் எதையோ படித்துவிட்டு, அரைப் பைசாவுக்கும் உதவாத ஒரு டிகிரியையும் வாங்கிக்கொண்டுவிட்டதால் தங்களைப் பெரிய போதகர்களாக நினைத்துக் கொண்டிருக்கும் வேத அறிவில்லாத மனிதர் களே இன்று ஊழியத்தில் அதிகம். இவர்களோடு பத்தோடு பதினொன்றாக நீங்கள் இருந்துவிடுவதால் நம்மினத்தைப் பிடித்திருக்கும் நோய்க்கு விடுதலை கிடைக்காது. இப்படிப்பட்ட போலி வாழ்க்கை வாழ்ந்து உங்களையும், வீட்டையும், ஆத்துமாக்களையும் நீங்கள் சீரழிப்பதைவிட*

வேறு ஏதாவது நியாயமான கைவேலை செய்து சம்பாதிப்பது மேல்.

## (2) போதக ஊழியத்துக்கு தயார் செய்து கொண்டிருப்பவர்களுக்கு ஒரு வார்த்தை

வெறும் குருட்டார்வத்தாலும், உணர்ச்சி மீறலாலும் ஊழியத்துக்குள் நுழையப் பார்க்காதீர்கள். அதற்கான தகுதிகள் உங்களுக்கு நிச்சயம் இருக்க வேண்டும். அந்தத் தகுதிகளைக் கர்த்தர் உங்களுக்கு காட்டுகின்ற ஒரே இடம் திருச்சபை மட்டுமே. அதாவது, வேதபூர்வமாக இயங்கி வரும் மெய்த்திருச்சபை மட்டுமே. அப்படியான திருச்சபைகள் இல்லையே என்பீர்கள். முதலில் அது எங்கிருந்தாலும் தேடிக்கண்டுபிடித்து அதில் இணையப் பாருங்கள். உங்களுடைய அவசரத்துக்காக கர்த்தர் தன்னுடைய திட்டங்களை மாற்றிக்கொள்ள மாட்டார். நல்ல சபையில் இருந்து வளர்ந்து வராமல் ஊழியத்தை நினைத்துப் பார்க்கக்கூடாது. அங்கேயே உங்களுக்குத் தகுதி இருக்கிறதா, இல்லையா என்பதைக் கர்த்தர் உணர்த்துவார்.

அடுத்ததாக, நல்ல கல்வி அறிவும், பொது அறிவும் இருக்கிறதா என்று உங்களை ஆராய்ந்து பாருங்கள். இவை இரண்டும் இல்லாத ஊழியக் காரர்களுக்கு நம்மத்தியில் குறைவில்லை. அத்தகையவர்களால் ஒருவருக்கும் எந்தப் பயனும் இல்லை. கல்வி அறிவில்லாதவர்கள் எப்படி எழுத்தில் இருக்கும் வேதத்தை விளங்கிப் படித்து மற்றவர்களுக்கு விளக்க முடியும்? வேதம் என்ன தினத்தந்தி பத்திரிக்கையா? ஆட்டோ ரிக்சோ ஓட்டுகிறவனும் அறிவில்லாமல் படித்து முடித்துவிட. அதை எழுதப் படிக்கத் தெரிந்த எவரும் வாசித்துப் புரிந்துகொள்ள முடிந்தாலும், அதிலுள்ள அநேக சத்தியங்களை விளங்கிக் கொண்டு, அவற்றைத் தொகுத்து சிறுவர்களும் புரிந்துகொள்ளக்கூடிய முறையில் எளிமையான மொழியில் விளக்கிப் போதிக்க கல்வி அறிவில்லாமல் எவரால் முடியும்? வேதத்தைப் போதிக்க கல்வி அறிவு தேவையில்லை என்கிறவர்கள் மூளையைச் சலவைக்கு அனுப்ப வேண்டும். ஆகவே, முதலில் உலகத்தில் படிப்பைப் பெற்றுக் கொள்ளப் பாருங்கள். ஆத்மீக ஊழியத்துக்கும், கல்லூரிப் படிப்புக்கும் சம்பந்தமில்லை என்ற கனவுலகில் வாழாதீர்கள். இந்துக் கோயில் சந்நியாசி யாக இருக்க மட்டுந்தான் அது தேவையில்லை. கர்த்தரின் ஊழியத்துக்கு அது மிக மிக அவசியம். கல்லூரிப் படிப்பு உங்களுக்கு பெரிய ஆசீர் வாதத்தைப் பின்னால் கொண்டுவரும். முக்கியமாக வேதத்தின் மூல மொழிகளில் பரிச்சயமடைய அது நிச்சயம் உதவும். படிக்காதவர்கள் போதக ஊழியத்துக்கு வருவது என்னைப் பொறுத்தவரையில் ஆட்டோ ஓட்டத் தெரியாதவன் ஆட்டோ ஓட்டப் புறப்பட்டது போலத்தான். அந்த ஆட்டோவில் போகிறவன் பாடு திண்டாட்டந்தான்.

இது தவிர பொது அறிவும், சமுதாய இங்கிதங்களும் தெரிந்திருக்க வேண்டும். பொது அறிவு, கல்வியோடு சம்பந்தப்பட்டது. இன்று அநேக போதகர்களுக்கு பொது அறிவு இல்லாத காரணம் அவர்களுக்கு கல்வி அறிவில்லாததுதான். கல்வி அறிவு மனிதனுக்கு கல்லூரிப் பட்டத்தை மட்டுமல்லாமல், சமுதாய இங்கிதங்களையும் கற்றுக்கொடுக்கிறது. சமுதாய இங்கிதங்கள் தெரியாத ஊழியக்காரர்கள் தொகை நம்மத்தியில் இன்றைக்கு

அதிகம்.

அத்தோடு அன்றாடம் கர்த்தர் கொடுத்திருக்கின்ற நேரத்தைக் கவன மாகப் பயன்படுத்தி உழைக்கப் பலருக்கும் தெரிவதில்லை. இன்றைக்குக் கைநிறைய மாத சம்பளம் வாங்கிக்கொண்டு அதற்குரிய வேலையை செய்யாதவர்களை ஊழியத்தில் அதிகமாகவே பார்க்கலாம். இந்தத் தவறு களையெல்லாம் தவிர்த்துக்கொள்ள வேண்டுமானால் கல்லூரிப் படிப்பு முடிந்தவுடன் ஒரு வேலையைத் தேடிக்கொண்டு சமுதாயத்தில் வேலை செய்து வாழ்ந்து பழக வேண்டியது ஊழியத்துக்கு வருமுன் அவசியம். கைநீட்டி சம்பளம் வாங்கிக்கொண்டு வேலை செய்கிறவனுக்குத்தான் வேலையின் மதிப்புத் தெரியும். நேரந்தவறாமல் வேலைக்குப் போவது, வேலையை சரியாக முடித்துக்கொடுப்பது போன்ற அநுபவங்களையெல் லாம் அங்கே பெற்றுக் கொள்ளலாம். சமுதாயத்தில் இருந்தல்லாமல் வேறு எங்கே இதைப்பெற முடியும். ஒரு சாதாரண கிராமத்து விவசாயிக்குக் கூட எப்போது நிலத்தைப் பண்படுத்த வேண்டும், விதைக்க வேண்டும், அறுவடை செய்ய வேண்டும் என்பதெல்லாம் சுத்தமாகத் தெரியும். அதை யெல்லாம் செய்ய வேண்டிய காலத்தில் செய்து துன்பங்களுக்கு மத்தியில் அவன் பயிரை நட்டு பயன் அடைகிறான். அவனுக்கு இருக்கும் அநுபவத் தையும், உழைப்பையும்கூட இன்றைய தமிழ் ஊழியக்காரர்களில் நாம் பார்க்க முடியவில்லை. அதற்கெல்லாம் காரணம் அவர்கள் படித்து வேலை செய்து வாழ்க்கையில் அநுபவத்தை அடையாததுதான். ஊழியத்தை எண்ணிப்பார்க்கின்ற இளைஞர்கள் இதையெல்லாம் சிந்தித்துப் பார்த்து பின்னால் வரப்போகும் வாழ்க்கைக்கு தங்களை இப்போதே திருச்சபையில் வாழ்ந்து தயார் செய்து கொள்ள வேண்டும்.

இதெல்லாம் நடந்துவிட்டால் நம்மினத்தில் கிறிஸ்தவம் வேதபூர்வமாக அமைந்துவிடுமா? என்று நீங்கள் கேட்கலாம். இதுவரை நான் முன் வைத்துள்ள ஆலோசனைப்படி போதகர்களும், ஊழியத்துக்கு வரத் தங்களைத் தயார் செய்து கொண்டிருப்பவர்களும் நடக்க ஆரம்பித்தால் அதுவே நல்ல எதிர்காலத்துக்கு முன்னடையாளமாக அமையும். இதைக் கூட செய்ய இருதயமில்லாதவர்களை நாம் கொண்டிருந்தால் இன்னும் பல நூற்றாண்டுகள் போனாலும் நம்மினத்துக்கு விமோசனம் ஏற்படப் போவதில்லை. திருச்சபை மூலமே கர்த்தரின் ஆசீர்வாதம் நமக்கு வர முடியும். அந்தத் திருச்சபை ஊழியத்தை நடத்த வேண்டியவர்கள் வேத அடிப்படையில் நடக்காமல் உலகவழிப்படிப் போனால் பரிசுத்த ஆவியான வரின் கிரியைக்கு நம்மினத்து சபைகளில் இடமிருக்காது. இத்தனைக் காலம் குருடர்களாக நாம் வாழ்ந்திருக்கலாம். உலகம் எங்கேயோ போயிருக்க நாம் இருட்டில் இருந்திருக்கலாம். இனியும் தொடர்ந்து இருட்டில் வாழ வேண்டுமா என்பதை நாம் எண்ணிப்பார்க்க வேண்டும். விசுவாசிகளே! இந்தப் பணியில் உங்களுக்கும் பங்கிருக்கிறது. தரமற்ற போதகர்களையும், ஊழியக்காரர்களையும் ஊக்குவிக்காதீர்கள். அவர்கள் தவறுகளுக்கு உடன் போகாதீர்கள். உடலை வருத்தி உழைத்து நேர்மையாக வாழ்ந்து ஊழியம் செய்கிறவர்களுக்கு கீழிருந்து மட்டுமே ஆத்துமப் பயனடையுங்கள்.

# வாழ்க்கையில் தீர்மானம் எடுப்பது . . . !

வாழ்க்கையில் எந்தவொரு விஷயத்திலும் தீர்மானங்கள் எடுப்பதில் ஆண்மையுள்ளவர்களாக நடந்துகொள்ள வேண்டியது விசுவாசிகளின் கடமை. கர்த்தரின் சித்தப்படி நாம் எந்தவொரு விஷயத்திலும் தீர்மானம் எடுக்க வேண்டும். தீர்மானம் எடுப்பதென்பது இலகுவான காரியம் என்று நான் சொல்லவரவில்லை. அது சில வேளைகளில் சிக்கலானதாக இருந்தாலுங்கூட வாழ்க்கையில் எந்தவொரு விஷயத்தையும் கர்த்தரின் சித்தப்படி செய்வதற்காக சரியான தீர்மானங்களை எடுப்பது அவசியம். சரியான தீர்மானங்களை எடுக்காவிட்டால் நமது வாழ்க்கையில் பல தவறுகளை நாம் செய்துவிடுவோம்; அத்தோடு கர்த்தரின் வழிப்படி நடக்காமல் போய்விடுவோம்; அதன் காரணமாக ஆத்மீகம் நம் வாழ்க்கையில் குறைந்து உலகரீதியில் சமுதாயத்துக்குப் பயந்து வாழ ஆரம்பித்துவிடுவோம். விசுவாசிகள் மத்தியில் இந்த விஷயத்தில் தவறு செய்கிற மூன்றுவித மனிதர்களைப் பார்க்கலாம்:

1. விசுவாசிகளாக இருந்தும் வேதபூர்வமாக தீர்மானங்கள் எடுக்கத் தெரியாமல் அசட்டையாக நடந்துகொள்கிறவர்கள். இவர்கள் வாழ்க்கையில் தவறுகளை அடிக்கடி செய்து அதனால் துன்பப்பட்டு முறையான பரிசுத்த வாழ்க்கை வாழ முடியாமல் தொடர்ந்து அவதிப்படுகிறவர்கள்.

2. விசுவாசிகளாக இருந்தும் கலாச்சாரத்திற்கும், பண்பாட்டிற்கும் அடிமைப்பட்டு வேதரீதியில் தீர்மானங்கள் எடுக்காமல் உலக ரீதியில் நடந்து பெயர் கிறிஸ்தவர்கள்போல் வாழ்கிறவர்கள். இவர்கள் வாழ்க்கையிலும் பரிசுத்தத்தின் வலிமையை (Power of Godliness) பார்க்க முடியாது.

3. விசுவாசிகளாக இருந்தும் உணர்ச்சித்தூண்டுகளுக்கு தம்மை அடிமைப்படுத்தி, தங்களுடைய உள்ளத்தில் ஆழமாக உணர்கின்ற எண்ணங்களைக் (Deep emotional impressions) கர்த்தரின் வழிநடத்தல்களாகவும், அவருடைய சித்தமாகவும் தவறாகக் கருதி வாழ்கிறவர்கள். இவர்கள் தாங்கள் விசுவாசிகளாக இருப்பதால் தங்ளுடைய இருதயத்தில் கிறிஸ்து தன்னுடைய சித்தங்களை ஆழமாக உணர வைக்கிறார் என்று கனவு காண்கிறார்கள். ஏதாவதொரு விஷயத்தில் கர்த்தரின் சித்தம் என்ன என்பதை அறிந்து கொள்ள இவர்கள் தங்களுடைய உள்ளத்தில் அதைக் குறித்து ஏற்படுகிற ஆழமான உணர்ச்சிகளை மட்டுமே நம்பி இருக்கிறார்கள்; அதைக் கர்த்தருடைய கிரியையாகவும் எண்ணி வாழ்கிறார்கள். சிலர் இந்த ஆழமான உணர்ச்சிகளை இருதயத்தில் ஏற்படுத்துகிறவர் பரிசுத்த ஆவியானவர் என்று தவறாக எண்ணி அந்த உணர்ச்சிகளுக்கு அடிமையாகிறார்கள். இத்தகைய எண்ணங்கள் கர்த்தர் மனிதனைப் படைத்திருக்கின்ற விதத்தை அறியாத

*தாலும், பரிசுத்த ஆவியானவரைப் பற்றிய வேதபூர்வமான எண்ணங்களைக் கொண்டிராததாலும் ஏற்படுவதன் விளைவு. பரிசுத்த ஆவியானவர் மனிதனை ஒரு இயந்திரமாகப் பயன்படுத்துவதில்லை. மனிதன் செய்ய வேண்டிய அனைத்தையும் அவன் தானே செய்ய வேண்டுமே தவிர ஆவியானவர் அதை அவனுக்காக செய்யமாட்டார். சிலர் எனக்கு அடிக் கடி கடிதம் எழுதி ஆவியானவர் தங்களுக்கு பல காரியங்களை வாழ்க்கை யில் செய்யும்படி தரிசனம் கொடுத்திருக்கிறார் என்பார்கள். ஒருவர் நியூசிலாந்துக்கு வந்து என்னோடு இணைந்து ஊழியம் செய்ய வேண்டும் என்று எழுதினார். இன்னொருவர் உலகம் முழுவதும் ஊழியக்காரர்களை அனுப்புவதற்காக இறையியல் கல்லூரி நடத்தும்படி ஆவியானவர் தனக்கு தரிசனம் கொடுத்ததாகவும் பணம் மட்டும் இருந்தால் அதைச் செய்து விடுவேன் என்று எழுதினார். இந்த இரு உதாரணங்களையும் ஆராய்வது அவசியம். இவர்கள் சொல்லும் விஷயங்களில் உள்ள தவறுகளை ஆராய் ந்து பார்ப்போம்:*

*1. இவர்கள் இருவருமே தவறான இறையியல் நம்பிக்கைகளை வளர்த்துக் கொண்டிருப்பதால் ஆவியானவரின் கிரியைகளைப் பற்றி வேதம் போதிப் பதை அறிந்துகொள்ளவில்லை.*

*2. இவர்கள் இருவரும் சிந்தித்து எதையும் ஆராயும் வழக்கத்தைப் பின்பற்று பவர்களாகத் தெரியவில்லை. ஏனெனில், தாங்கள் செய்ய விரும்பும் காரியத்தை செய்வதற்கான தகுதிகளோ, அநுபவமோ, வசதியோ தங்களுக் கிருக்கிறதா என்று ஒரு முறைகூட இவர்கள் எண்ணிப்பார்க்கவில்லை. நியூசிலாந்துக்கு வந்து ஊழியம் செய்ய நினைக்கிற மனிதன் முதலில் நியூசிலாந்திலிருப்பவர்களைப்போல ஆங்கிலத்தில் அவர்களுடைய தொனி யில் சரளமாகப் பேசத் தெரியுமா என்று எண்ணிப் பார்க்க வேண்டும். அத்தோடு அந்தக் கலாச்சாரத்தைப் பற்றிய அறிவும் அநுபவமும் தேவை. இவையில்லாமல் அந்நாட்டு மக்கள் மத்தியில் எப்படி ஊழியம் செய்ய முடியும்? இறையியல் கல்லூரி நடத்த நினைக்கிற மனிதன் தனக்கு அதைச் செய்ய எந்தத் தகுதி இருக்கிறது என்று எண்ணிப்பார்க்க வேண்டும். இஞ்சினியர் படிப்பு படிக்காமல் எந்த அவிசுவாசியும் இந்த உலகத்தில் தான் இஞ்சினியராக வரப்போகிறேன் என்று சொன்னதில்லை. விசுவாசி களை மட்டும் ஆவியானவர் இஞ்சினியர் படிப்பு இல்லாமல் இஞ்சினிய ராக வர அனுமதிக்கிறாரா? உலகம் ஒழுங்காக நடக்க ஒரு நியதியை ஏற்படுத்தி வைத்துள்ள கர்த்தர் விசுவாசிகளுக்காக மட்டும் அதை மாற்றி அமைப்பாரா? விசுவாசியோ, அவிசுவாசியோ யாராக இருந்தாலும் அவர்கள் செய்யப்போகிற எதுவும் விசுவாசத்துக்குரிய காரியமாக இருந் தாலும், உலக காரியமாக இருந்தாலும் கர்த்தர் ஏற்படுத்தியுள்ள காரண காரிய நியதிகளை மீறி அவற்றை ஒருபோதும் செய்ய முடியாது.*

*3. இவர்கள் தங்களுடைய தகுதிகளையும், தாலந்துகளையும் சோதித்துப் பார்த்து தங்களுடைய தகுதிகள், தாலந்துகள், பலவீனங்களைப் பற்றிய முறையான அறிவைக் கொண்டிருக்கவில்லை. தன்னைப் பற்றி ஒன்றுமே தெரியாதவன் என்னைப் பொறுத்தவரையில் மூளை சரியில்லாதவன் மட்டுமே.*

*4. இவர்கள் இறையாண்மையுள்ள கர்த்தரின் கிரியைகளைப் பற்றியும், கிறிஸ்தவத்தைப் பற்றியும் வேதபூர்வமான சிந்தனைகளைக் கொண்டிருக்க வில்லை. இதுவரை பார்த்தவையே இவர்களுடைய தவறான நோக்கங் களுக்குக் காரணமாக அமைந்தன.*

## சந்தர்ப்ப சூழ்நிலைகள் காட்டும் வழி

*வாழ்க்கையில் தீர்மானம் எடுப்பதற்கு நாம் சந்தர்ப்ப சூழ்நிலைகளில் மட்டும் எப்போதும் தங்கியிருக்கக்கூடாது. சந்தர்ப்ப சூழ்நிலைகளில் எது கர்த்தருடைய வழிகாட்டல், எது அவருக்கு முரணானது என்பதை இலகு வாக தீர்மானித்துவிட முடியாது. சந்தர்ப்ப சூழ்நிலைகளால் உந்தப்பட்டு இங்கும் அங்கும் தள்ளப்பட்டு காற்றில் சுழலும் இலை போல் நாம் இருந்து விடக்கூடாது. வேதத்தில் தெளிவாக விளக்கப்பட்டிருக்கும் போதனை களையே வாழ்க்கையில் எந்தத் தீர்மானங்களை எடுப்பதற்கும் நாம் நம்பி யிருக்க வேண்டும்.*

*என் வாழ்க்கையில் நடந்த ஒரு சம்பவத்தைக் கூற விரும்புகிறேன். என் வாழ்க்கையைப் பற்றி எழுதுகிற முதல் தடவை இதுதான் என்று நினைக்கிறேன். நான் விசுவாசியாக வளர்ந்து வந்துகொண்டிருந்த காலத்தில் என்னுடைய சபைப் போதகர் ஒருமுறை என்னைப் பார்த்து, ஊழியத்தில் ஈடுபடுவதைப் பற்றி நீங்கள் ஏன் சிந்தித்துப் பார்க்கக் கூடாது என்று கேட்டார். அந்தக் கேள்வி எனக்கு மகிழ்ச்சி அளித்தபோதும் நான் உடனடி யாக ஊழிய ஆர்வத்தில் எங்கும் அலைய ஆரம்பிக்கவில்லை. அப்போது நான் என்னுடைய விவசாயப் பொருளியல் பட்டப்படிப்பை முடித்துக் கொண்டு வேலை தேட ஆரம்பித்திருந்தேன். வேலைக்கு விண்ணப்பித்து சில வேலைகளுக்கு இன்டர்வியூ வந்து பல முறை இன்டர்வியூக்குப் போயும் சரியான வேலைகள் வந்து அமையவில்லை. என்னுடைய தந்தை வசதியுள்ளவராக இருந்ததால் எனக்கு உடனடியாக வேலை கிடைக்க வேண்டிய அவசியமும் இருக்கவில்லை. இருந்தாலும் கர்த்தர் வேலைகள் கிடைக்காதிருக்கும்படி செய்கிறார் என்று அதை ஊழியத்திற்கான அழைப் பாக தவறாக எண்ண நான் விரும்பவில்லை. அந்தத் தடைகள் மட்டும் சரியான வழிகாட்டல்கள் அல்ல என்பதில் எனக்குத் தெளிவு இருந்தது. போதகர் மறுபடியும் ஒருநாள் என்னிடம் ஊழியத்தைப் பற்றிய என்னு டைய எண்ணத்தைக் கேட்டார். உடனே நான், "அப்படி நான் ஊழியத் துக்கு போக வேண்டிய அளவுக்கு என்னிடம் எதைப் பார்த்தீர்கள்' என்று அவரைக் கேட்டேன். அவருடைய விளக்கங்கள் வேத அடிப்படையில் அமைந்திருந்தனவா என்று பரிசோதிக்க அவருடைய பதில்கள் உதவும் என்று நினைத்தேன். அவர் கொடுத்த விளக்கங்கள் ஓரளவுக்கு எனக்கு ஏற்புடையதாக இருந்தன. அதுவும் சபை மூப்பர்களின் சிந்தனையும் அதுதான் என்று அவர் கூறினார். இருந்த போதும் இது பற்றித் தீர்மானம் எடுக்க இவை மட்டும் போதாது என்று எண்ணிய நான் தொடர்ந்து வேதத்தை ஆரய்ந்து ஊழிய அழைப்பு பற்றிப் படித்தேன். என்னுடைய வாழ்க்கை, எனக்கிருந்த தகுதிகள் பற்றி ஆராய்ந்து பார்த்தேன். வேதம் எதிர்பார்த்த பதில்களை என்னால் தரமுடிந்தபோதுதான் நான் போதக ஊழியத்துக்கு தயார் செய்துகொள்ளப் பின்னால் தீர்மானித்தேன். பல*

*சந்தர்ப்ப சூழ்நிலைகள் வாழ்க்கையில் குறுக்குவழி காட்டியபோதும் சந்தர்ப்ப சூழ்நிலைகளை மட்டுமே வைத்து நான் போதகப் பயிற்சிக்கான தீர்மானத்தை எடுக்கவில்லை. அதுமட்டுமல்லாமல் இதைச் சபைக் கூட்டத்தில் சபை அங்கத்தவர்கள் முன்பு கொண்டுவந்து அவர்களும் ஊழியத்துக்கான தகுதிகள் எனக்கிருக்கிறதா என்பதைப் பார்க்கும்படிச் செய்து இதெல்லாம் நடந்து முடிந்தபின்பே ஊழியத்துக்குத் தயாராவதற்கான பயிற்சிகளுக்கு என்னை ஒப்புக்கொடுத்தேன். இந்த வேத வழிமுறைகள் எந்தளவுக்கு உதவியிருக்கின்றன என்பதை இப்போதும் நினைத்துப் பார்த்துக் கர்த்தருக்கு நன்றி சொல்கிறேன்.*

*சந்தர்ப்ப சூழ்நிலைகளும் வாழ்க்கையில் தீர்மானம் எடுக்கும் விஷயத்தில் பங்கு வகித்தபோதும் அவை மட்டுமே தீர்மானம் எடுப்பதற்கு போதுமானதல்ல. பல வருடங்களுக்கு முன் ஒரு முறை திருச்சி பஸ் ஸ்டான்டில் இரவு பஸ்ஸுக்காக காத்திருந்தபோது ரேடியோவில் தினகரன் அலறி ஊழியத்துக்கு வருமாறும், உடனடியாக தீர்மானம் எடுக்குமாறும் பேசியதைக் கேட்டேன். அந்தக் குரலின் வசியத்தால் ஈர்க்கப்பட்டு, தன்னைப் பற்றி ஆராய்ந்து பார்க்காமல், தனது தகுதிகள், வாழ்க்கையில் இப்போது இருக்கும் நிலை, சபை எல்லாவற்றையும் ஆராய்ந்து பார்க்காமல், அந்த வானொலி அழைப்பைக் கர்த்தரின் சித்தமாகவும், கட்டளையாகவும் ஏற்றுக்கொண்டால் அது எத்தனை முட்டாள்தனம்.*

*கர்த்தர் யோனாவுக்கு கட்டளையிட்டு நினிவே மக்களுக்கு சுவிசேஷம் அறிவிக்கும்படிக் கூறினார். யோனாவுக்கு அது பிடித்தமானதாக இருக்கவில்லை. அவன் கப்பலேறி தர்ஷீக்குப் போகத் தீர்மானித்தான். யோப்பாவில் கப்பல் கிடைத்தது. கப்பல் பிரயாணத்துக்கு வசதியான காற்றும் இருந்தது. பிரயாணமும் சுமுகமாகப் போய் முடிந்தது. இப்படித் தர்ஷீக்குப் போவதற்கான பிரயாணத்துக்கு சந்தர்ப்பம் நல்லபடியாக அமைந்ததை வைத்து யோனா தர்ஷீக்குப் போனதுதான் சரியான தீர்மானம் என்று கூற முடியுமா? யோனா ஏற்கனவே கர்த்தர் கொடுத்திருந்த கட்டளையை மீறிவிட்டான். அவன் எடுத்த தீர்மானம் தவறு.*

*வாழ்க்கையில் கர்த்தரின் வழிகாட்டலைத் தேட நாம் சந்தர்ப்ப சூழ்நிலைகள் எப்படி அமைகின்றன என்று மட்டும் பார்த்துக்கொண்டிருப்பது வெறும் சோம்பேரித்தனத்திற்கான அறிகுறி. ரோமர் 1:13ல் பவுல், "நான் உங்களிடம் வரத் தீர்மானித்திருக்கிறேன். ஆனால், இதுவரை அது முடியாமல் போனது" என்கிறார். தன்னுடைய திட்டம் நிறைவேறாமல் போனபோது முதல் தடையையே முடிவான தடையாக பவுல் ஏற்றுக்கொள்ளவில்லை. அதற்காக மீண்டும் மீண்டும் முயற்சிகள் எடுத்திருக்கிறார் பவுல். ஒரு கதவு மூடப்படுகின்றது என்பதற்காக அதுவே முடிவான கர்த்தரின் சித்தம் என்று எடுத்துக் கொள்வதும் தங்களுடைய தீர்மானம் தவறு என்று எண்ணுவதும் சரியல்ல. அந்தத் திட்டம் அந்த நேரத்திற்குத் தகுந்ததாக இல்லாமல் இருக்கலாம். தகுந்த நேரம் வரும்போது திட்டம் நிறைவேறக் கூடும். ஆகவே, தொடர்ந்து ஜெபிப்பதையும் திட்டமிடுவதையும் நாம் கைவிட்டுவிடக்கூடாது. சந்தர்ப்ப சூழ்நிலைகளைக் காரணம் காட்டி நாம்*

*தைரியத்துடன் எடுக்கவேண்டிய தீர்மானங்களை எடுப்பதில் இருந்து தப்பிக்கொள்ளப் பார்ப்பது முதுகெலும்பில்லாதவர்கள் செய்கிற வேலை.*

*விசுவாசியான ஒருவன் தன் சபையில் விசுவாசியான ஒரு பெண்ணைத் திருமணம் செய்துகொள்ள ஆசைப்படுகிறான் என்று வைத்துக்கொள்ளு வோம். சிறிது காலம் சென்றபின் வீட்டிலுள்ளவர்கள் அதற்குப் பெருந்தடை யாக இருப்பதைப் பார்க்கிறான். வீட்டிலுள்ளவர்களைப் பகைத்துக் கொள்ள அவனுக்கு சம்மதமில்லை. ஆகவே, அந்தத் தடையைக் கர்த்தரின் வழிகாட்டலாகக் கருதி அந்தப் பெண்ணைத் திருமணம் செய்து கொள்ளும் ஆசையை அவன் விட்டுவிடுவானானால் அவன் ஆண்மையுள்ளவனே அல்ல. பெற்றோரின் தடையை மட்டும் கர்த்தரின் சித்தமாகப் பார்ப்பது அடிமுட்டாள்தனம். பெற்றோரின் வார்த்தைகளுக்கு மதிப்புத் தர வேண்டி யது அவசியந்தான். அதற்காக வாழ்நாளெல்லாம் நாம் வாழ வேண்டிய வளைப் பற்றிய இறுதி முடிவெடுப்பது பெற்றோராக இருந்தால் அது நாம் ஆணாயிருப்பதற்கான அறிகுறியே அல்ல. பெற்றோருக்குப் பிடிக்க வில்லை என்றால் அவர்கள் அதற்கான வேதபூர்வமான காரணங்களைக் காட்டுவது அவசியம். வேதபூரணமான காரணங்களை அவர்களால் காட்ட முடியவில்லை என்றால் அவர்களுக்குப் பிடிக்காமல் போனாலும் நாம் கர்த்தரின் வார்த்தைக்கு மட்டுமே கட்டுப்பட வேண்டும். கர்த்தரின் வார்த்தைக்கு எதிராக இருந்தால் மட்டுமே நாம் நமக்கு விருப்பமான பெண்ணாக இருந்தாலும் திருமணத்துக்கு ஒத்துக்கொள்ளக் கூடாது.*

*இன்னொரு உதாரணத்தைப் பார்ப்போம். நெகேமியா 2:13-15 வரையுள்ள வசனங்களில் எருசலேமுக்கு வந்த நெகேமியா ஆலயம் எந்த நிலைமை யில் இருக்கிறது என்பதை ஆராய இரவு நேரத்தில் தனியே அதைப் பார்வையிடப் போனான் என்று வாசிக்கிறோம். அவன் பார்த்தறிந்த விபரங்களெல்லாம் எதிர்மறையானதாகவே இருந்தன. ஆலய வாசல்கள் மிகவும் மோசமான நிலைமையிலேயே இருந்தன. இதை வைத்து செய்ய வந்த வேலையை நிறைவேற்றமுடியாது. இந்த அடையாளங்கள் மூலம் ஆலயத்தைக் கட்ட இது நல்ல சந்தர்ப்பம் இல்லை என்று கர்த்தர் காட்டு கிறார் என்று தீர்மானித்து அவன் திரும்பிப் போகவில்லை. 17ம் வசனத்தில் அவன் தன்னோடு வந்தவர்களுக்கு ஆலயம் இருக்கும் நிலைமையை விபரித்து அதைக் கட்டிமுடிக்கத்தான் வேண்டும் என்று உறுதியாகச் சொல்வதை வாசிக்கிறோம். ஆரம்பத்தில் அவன் வேதத்தை ஆராய்ந்து பார்த்து ஆலய வாசல்களைக் கட்ட எடுத்த முடிவே சரியானது. அந்த முடிவை கர்த்தரே நேரில் வந்து நிறைவேற்றாதே என்று சொன்னால் தவிர நெகேமியா செய்யாமல் இருக்கப்போவதில்லை. சந்தர்ப்ப சூழ்நிலை களுக்கும், தன்னோடிருந்தவர்களின் உணர்ச்சி மாற்றங்களுக்கும் அவன் ஒருபோதும் இடங்கொடுக்கவில்லை. தீர்மானங்களை எடுப்பதில் நெகேமியாவில் நாம் ஆண்மையின் அடையாளத்தைப் பார்க்கிறோம்.*

### மன சமாதானம்

*என் சபையில் ஒரு சகோதரி ஒருவன் மேல் ஆசைப்பட்டு திருமணம் செய்துகொள்ள விரும்பினாள். அவனோ இன்னும் விசுவாசியாக தன்னை*

*அறிவித்து சபையில் ஞானஸ்நானம் எடுக்கவில்லை. இதை நான் விளக்கி பொறுத்திருக்கும்படி அவளுக்கு ஆலோசனை சொன்னேன். அவள் என் வார்த்தையைக் கேட்கவில்லை. திருமண நாளையும் குறித்துவிட்டு கர்த்தர் இந்த விஷயத்தில் எனக்கு மனசமாதானத்தைத் தந்திருக்கிறார் என்றாள். இப்படிப் பேசுகிற அநேகரை நாம் அன்றாடம் சந்திக்கிறோம். இது மெய் யான மன சமாதானமல்ல. தன்னுடைய உள்ளுணர்வுகளை நியாயப் படுத்திக் கொள்ளுகிற சுயநலத்தின் அறிகுறி. கர்த்தரின் தெளிவான வார்த்தைகளை நாம் மீறுகிறபோது கிறிஸ்துவின் மெய்யான சமாதானம் நம்முடைய உள்ளத்தில் ஏற்பட முடியாது. சரீரரீதியாக ஏற்படும் சுயநலத் தின் அடிப்படையிலான உணர்வுகளை நாம் கர்த்தர் தரும் சமாதானமாக தவறாக எண்ணிவிடக்கூடாது. அவை செய்யக்கூடாததைச் செய்ய சரீர இச்சை நம்மில் ஏற்படுத்தும் உணர்வுகள். கர்த்தருடைய வார்த்தைக்கு எதிரான எந்தக் காரியத்தை நாம் செய்கிறபோதும் நமக்கு தேவ சமாதானம் கிடைக்காது.*

*வாழ்க்கையில் கர்த்தரை மகிமைப்படுத்தும்படி விசுவாசிகள் எவ்வாறு தீர்மானங்களை எடுப்பது?*

**1. எதையும் சிந்தித்து ஆராய வேண்டும் (Think, Use your mind)**

*மனதைப் பயன்படுத்தத் தயங்குகிறவர்கள் நம்மத்தியில் அதிகம். மனதைப் பயன்படுத்த திறமையற்ற பலர் இருப்பதற்குக் காரணம் அவர்கள் வளர்ந்த வாழ்க்கை முறையாகவும் இருக்கலாம். கலாச்சாரமும் காரணமாக இருக்கலாம். தமிழினத்தில் அநேகமானோருடைய வாழ்க்கையில் தீர்மானம் எடுப்பது அவர்களைச் சுற்றி இருப்பவர்கள்தான். பிறந்ததில் இருந்து அந்த முறையிலேயே எல்லோரும் வளர்ந்து வருகிறார்கள். இருபது வயதுக்கு மேலும் பெற்றோர்தான் இன்றும் அநேக இளைஞர்களுக்கு சாப்பாட்டில் இருந்து ஆலோசனை சொல்லி வருகிறார்கள். இதெல்லாம் பலரை சுயமாக சிந்தித்து எதைப்பற்றியும் தீர்மானம் எடுக்க முடியாதபடி செய்து வைத்திருக் கிறது. மனதைப் பயன்படுத்தி எதையும் சிந்தித்து ஆராயாத விசுவாசி நல்ல விசுவாசியாக வாழ்க்கையில் ஒருபோதும் உயர முடியாது. மனதைப் பயன்படுத்தாதவன் செத்த பிணத்துக்குத்தான் ஒப்பானவன்.*

*அதுமட்டுமல்லாமல் பலர் நிமிடத்துக்கு நிமிடம் மாறிக்கொண்டிருக்கும் உணர்ச்சிகளின் வழிநடத்தலின்படியே நடந்து வருவார்கள். உணர்ச்சிகளின் வழிநடத்தலின்படி வாழ்கிறவன் சிந்திக்க மறுக்கிறவன் மட்டுமல்ல, சுய கட்டுப்பாடும் இல்லாதவன். அவனை நம்புவதால் ஒருவருக்கும் நன்மை யில்லை. அடிக்கடி மாறுகிற நமது உணர்ச்சிகளை நாம்தான் கட்டுப்படுத்தி ஆளவேண்டுமே தவிர அவை நம்மை ஆள அனுமதிக்கக்கூடாது. ஆண்மை யுள்ளவர்கள் உணர்ச்சிகளுக்கு அடிமைப்பட மாட்டார்கள். நெகேமியா தன் வாழ்க்கையில் பல பிரச்சனைகளை எதிர்கொண்டபோது உணர்ச்சி களுக்கு அடிமைப்பட்டு காரியமாற்றவில்லை. மனதைப் பயன்படுத்தினான்; தீர ஆராய்ந்தான்; சத்தியத்தை நினைவுகூர்ந்தான்; எடுக்க வேண்டிய தீர்மானங்களை எடுத்தான்; நிறைவேற்றினான். அவனும் பயமுறுத்தல்களை எதிர்நோக்க வேண்டியிருந்தது, எதிர்ப்புகளை சந்திக்க வேண்டியிருந்தது.*

எதிர்காலத்தைப் பற்றிய கவலைகள் அவனுக்கு இல்லாமலிருக்கவில்லை. உணர்ச்சிகளோடு பிறந்த மனிதனாகிய அவனும் நம்மைப் போல அத்தனை உணர்ச்சிகளையும் அடைந்து அவற்றோடு போராடி, அவற்றைக் கட்டுப் படுத்தி வாழ வேண்டியிருந்தது. கர்த்தர் தனக்கு சிந்திப்பதற்கு மனதைத் தந்திருக்கிறார் என்று உணர்ந்து விசுவாசி தன் வாழ்க்கையில் ஒவ்வொரு காரியத்தைப் பற்றியும் சிந்தித்து ஆராய்ந்து பார்க்கும் வழக்கத்தை ஏற்படுத் திக்கொள்ள வேண்டும். இந்தச் சிந்தனை விஷயமில்லாத சிந்தனையாக இருக்கக்கூடாது. காரண காரியங்களோடு ஆராய்கிற சிந்தனையாக இருக்க வேண்டும்.

### 2. வேதத்தை ஆராய்ந்து பார்க்க வேண்டும்

விசுவாசிகள் எதைக் குறித்து சிந்தித்தாலும் வேதம் அதுபற்றி என்ன சொல்லுகிறது என்று எண்ணிப்பார்க்காமல் ஒரு தீர்மானத்துக்கு வரக் கூடாது. வேத சிந்தனைகளை நாம் வளர்த்துக் கொள்கிறபோது கர்த்தரின் வழிகளை அறிந்துகொள்ளுவது சுலபமாகிறது. வேத அறிவு இங்கே எத்தனை முக்கியம் என்பதை உணர முடிகிறதல்லவா! வேதத்தில் மட்டுமே கர்த்தருடைய சித்தத்தின் மொத்தவடிவத்தையும் பார்க்கிறோம். விசுவாசி களான நாம் வாழ்வதற்கு அவசியமான அத்தனையையும் கர்த்தர் வேதத் திலேயே தந்திருக்கிறார். வேதத்தைத் தொடர்ந்து வாசித்து எடுக்க வேண்டிய தீர்மானங்கள் அதன்படி அமைந்திருக்கின்றனவா என்று ஆராய்ந்து பார்த்து நடந்து கொள்ள வேண்டும். நாம் வேதபூர்வமான சபைகளில் இருந்தால் சபைப் போதகர்களும் இதில் நமக்கு உதவி செய்ய முடியும். அவர்கள் வேத வழிகளை நமக்கு விளக்கிச் சொல்லுவார்கள். போதகர்கள் சொன்னாலுங்கூட அவற்றை வேதத்தில் நாம் பார்க்கக் கூடிய தாக இருக்க வேண்டும். கர்த்தரின் சித்தப்படி எந்தத் தீர்மானங்களும் அமைய வேண்டும்

### 3. அதைக் குறித்து நன்றாக ஜெபிக்க வேண்டும்

ஒரு காரியத்தை செய்வதற்கு முன்னும், அதை செய்வதற்கான நட வடிக்கைகளில் ஈடுபடும்போதும், அதைச் செய்யும் போதும் ஜெபம் செய்ய வேண்டியது அவசியம். ஜெபத்தின் மூலம் நாம் கர்த்தரில் தங்கி நிற்கிறோம்; அவரோடு பேசுகிறோம்; அவருடைய துணையை நாடி வருகிறோம்; அவருடைய வழிநடத்தல்களுக்காக காத்திருக்கிறோம். இடைவிடாமல் ஜெபம் செய்யும்படி வேதம் சொல்லுகிறது.

### 4. தீர்க்கமாக ஒரு தீர்மானத்தை எடுத்தல் வேண்டும்

ஒரு விஷயத்தை ஆராய்ந்து அதுபற்றி காரண காரியங்களுடன் ஆழமாக சிந்தித்துப் பார்த்து, ஜெபம் செய்து வருகிறபோது கர்த்தர் நம்மைத் தம்முடைய வார்த்தையின்படி ஆவியின் துணையோடு வழிநடத்தி செய்ய வேண்டிய காரியம் பற்றிய ஆலோசனைகளை வழங்குவார். ஒரு விஷயத் தைக் குறித்து சிந்தித்திருக்கிறோம், வேத அடிப்படையில் ஆராய்ந்திருக் கிறோம், ஜெபத்தில் கர்த்தரை நாடி இருந்திருக்கிறோம். அதற்குப் பிறகு அதுபற்றி தீர்மானம் எடுக்காமல் இருப்பது தவறு. கர்த்தர் நமக்காகத் தீர்மானம் எடுக்கப்போவதில்லை. கிளி ஜோசியம் பார்க்கிறவர்கள் போல்

மற்றவர்கள் நமக்காக தீர்மானம் எடுக்கும்படி எதிர்பார்ப்பதும் ஆண்மைக் குறைவான செயல். செய்ய வேண்டிய அனைத்து ஆரம்ப நடவடிக்கை களையும் சரியாக செய்யும்போது கர்த்தரின் வழி தெறியவரும். எடுக்க வேண்டிய தீர்மானம் நமக்கு எளிதில் புலப்படும். அதில் மன சமாதானம் ஏற்படும். அது தெளிவாக புத்திக்குத் தெரியும். அதுதான் செய்ய வேண்டி யது என்று கர்த்தர் உணர்த்தியபிறகு அதைச் செய்ய நாம் முடிவெடுக்க வேண்டும். செய்ய வேண்டியதைக் கர்த்தர் வார்த்தையில் சுட்டிக்காட்டு கிறார். அதைச் செய்ய நாம்தான் உறுதியாக முடிவெடுக்க வேண்டும்.

நம்மில் பலருக்கு பண்பாட்டைப் பற்றிப் பயம், பாரம்பரியத்தைப் பற்றிப் பயம், சமுதாயத்தைப் பற்றிப் பயம். மொத்தத்தில் நாம் பயப்படாதவைகளே இல்லை. எப்போதுமே நம்மை நாலுபேர் சுற்றியிருந்து பார்த்துக்கொண் டிருக்கிறார்கள் என்ற எண்ணத்திலேயே சாகும்வரை வாழ்ந்து செத்து மடிகிறோம். இந்தப் பயத்தால் விசுவாசிகளில் பலர் வாழ்க்கையில் தீர்மானங்களை, அவை வேதபூர்வமானவையாக இருந்தாலும் எடுக்கத் தவறி வருகிறார்கள். இந்தப் பேய்ப்பயமெல்லாம் மெய்விசுவாசிக்கு இருக்காது. கிறிஸ்துவின் அன்பை ருசி பார்த்த நாளிலேயே இதையெல்லாம் அவன் களைந்து போட்டிருப்பான். நாம் பயப்பட வேண்டியது ஒன்றே ஒன்றுதான். அது நமக்கு வெளியில் இருக்கவில்லை. நமக்குள்ளே இருக்கும் நமது இருதயம் மட்டுந்தான். அதை சில வேளைகளில் பாவம் பயன்படுத்தி விடலாம். அதற்கு மட்டுந்தான் நாம் பயப்பட வேண்டும். கர்த்தருக்கு எதிராகப் பாவம் செய்யப் பயப்பட வேண்டும். வேறு எதற்கும் பயப்படக் கூடாது. விசுவாசியின் அகராதியில் பயம் என்ற வார்த்தைக்கு இடமில்லை.

**5. எடுத்த தீர்மானத்தை செயல்படுத்த வேண்டும்.**

தீர்மானம் எடுக்க தயங்குவதும் (Indecisiveness), தீர்மானம் எடுப்பதைத் தள்ளிப்போடுவதும் (Procrestination) ஆண்மைக்கு அழகல்ல. இவ்வளவு தூரம் சிந்தித்து, வேதத்தை ஆராய்ந்து பார்த்து, நல்ல ஆலோசனைகளைப் பெற்று கர்த்தரின் சித்தத்தை உணர்ந்து தீர்மானத்தை எடுத்தபிறகு அதை உடனடியாக செயற்படுத்தாமல் தள்ளிப்போடுவதும், அதை நிறைவேற்றத் தயங்குவதும் ஆண்மையுள்ள செயல்களல்ல. மனதில் எதைச் செய்ய வேண்டும் என்று கர்த்தரின் வழிகாட்டுதல் மூலம் அறிந்துகொள்ளுகிற போது அதை உடனடியாக நிறைவேற்றுவது இந்தச் செயல்முறையின் கடைசிப்படி. நெகேமியாவுக்கு எதைச் செய்ய வேண்டும் என்று தெரிந் திருந்தது. அதைத்தீர்மானித்த பிறகு அதன்படி அவன் நடந்துகொண்டான். தீர்மானத்தை தள்ளிப்போடாமல் உடனடியாக நிறைவேற்றினான்.

ஒரு போதகர் தன்னுடைய நண்பரொருவருக்கு ஒரு விஷயத்தைப் பற்றி ஆலோசனை தந்து அதை இ-மெயிலில் அனுப்பினார். அனுப்பிய இ-மெயில் போக மறுத்தது. உடனே அவர் இதன் மூலம் கர்த்தர் நமக்கு ஏதோ சொல்லுகிறாரோ என்று நினைத்தார். பிசாசு சோதிக்கிறதோ என்ற எண்ணமும் தோன்றியது. மீண்டும் மீண்டும் பல முறை அதை அனுப்பப் பார்த்தும் அவரால் அதை அனுப்ப முடியவில்லை. மறுபடியும் தான் எழுதியதை சில தடவைகள் படித்துப் பார்த்தார். தான் எழுதியது நியாய

*மானது, அதில் எழுத வேண்டியவையெல்லாம் அடங்கியிருந்தன, அதற்கு மேல் செய்வதற்கு ஒன்றுமில்லை என்பதை அவர் உணர்ந்தார். அதற்குப் பிறகு அதை எப்படியாவது ஒரு கரித்துண்டைப் பயன்படுத்தியாவது பேப்பரில் எழுதிக் கழுதை மேல் ஏறிப் போய்ச் சேர வேண்டிய இடத்துக்குப் போய் கொடுக்க வேண்டியவரிடம் கொடுத்தே தீருவேன் என்று அவர் தீர்மானம் எடுத்தார். பல தடவைகள் மீண்டும் மீண்டும் இ-மெயிலை அனுப்ப முயற்சி செய்து பத்தாவது தடவை அதை அவரால் அனுப்ப முடிந்தது. அவர் சந்தர்ப்ப சூழ்நிலைகளுக்கு இடம்கொடுத்து மனதைத் தளர விட்டு செய்யத் தீர்மானித்ததை செய்யாமல் இருக்கவில்லை. இதுவே ஆண்மையுள்ளவர்கள் செய்கிற காரியம். செய்ய வேண்டியது இதுதான் என்ற உறுதியான தீர்மானத்துக்கு வந்தவுடன் அதை உயிரைக் கொடுத்தாவது செய்கிறவனே மெய்விசுவாசி. அவன்தான் ஆண்மகன்.*


## திருமறைத்தீபம் பத்திரிகையின் ஆசிரியர்

## போதகர் ஆர். பாலின்

# - அருளுரைகள் -

**இப்போது ஒலி, ஒளி நாடாக்களில் (Audio, VCD) கிடைக்கும். மேலும் அநேக பயனுள்ள செய்திகளுக்கும் எழுதிப் பெற்றுக் கொள்ள வேண்டிய முகவரி:**

**இவாஞ்செலிக்கள் பாப்திஸ்து சபை**
***57 / 2 டீ. பி. கே. மெயின் வீதி***
**பைகாரா**
***மதுரை 625004***
***தொலைபேசி எண்: 0452 6505810***

# உழைக்கப் பிறந்தவன் நீ!

உழைப்பைப் பற்றியும் அதற்குரிய ஒழுக்கத்தைப் பற்றியும் தமிழ் கிறிஸ்தவ உலகம் அறியாமல் இருக்கிறது. முக்கியமாக கர்த்தருடைய ஊழியத்தில் ஈடுபட்டிருக்கிற பெரும்பாலான போதகர்களும், உதவிக்காரர்களும், ஊழியக்காகர்களும் உழைப்பைப் பற்றிய வேதபூர்வமான போதனைகளை அறியாதிருப்பதோடு கர்த்தரை உழைப்பின் மூலம் மகிமைப்படுத்தாமலிருந்து வருவது மிகவும் கவலைக்குரிய விஷயம். அநேகர், ஊழியக்காரர்கள் தங்களுடைய கைகளைப் பயன்படுத்தி வேலை செய்வது ஊழியத்துக்கு இழுக்குத் தேடித்தரும் என்று தவறாக எண்ணி வாழுகிறார்கள். ஊழியக்காரன் என்றால் அவனுக்கு எங்கேயாவது இருந்து பணம் வர வேண்டுமே தவிர அவன் உழைத்து சம்பாதிப்பது தவறு என்று வேதம் சொல்வதாக அறியாமையால் அநேகர் எண்ணிவருகிறார்கள். வேதம் எல்லோரையுமே உழைக்கும்படி எதிர்பார்க்கிறது. சபை பணம் கொடுக்க முடியாத நிலையில் இருந்தால் எல்லா ஊழியக்காரர்களுமே உழைத்து சம்பாதித்து தங்களையும், குடும்பங்களையும் கவனித்துக்கொள்ள வேண்டும். பவுல் தெசலோனிக்கேயரைப் பார்த்து, "நாங்கள் உங்களிடத்திலே ஒழுங்கற்று நடவாமலும், ஒருவனிடத்திலும் இலவசமாய் சாப்பிடாமலும் உங்களில் ஒருவனுக்கும் பாரமாயிராதபடிக்கு இரவும் பகலும் பிரயாசத்தோடும் வருத்தத்தோடும் வேலை செய்து சாப்பிட்டோம்" என்கிறார் (2 தெசலோ. 3:7, 8). அப்போஸ்தலனாகிய பவுலின் இந்த வார்த்தைகளுக்கு வேறு என்ன பொருள் கொடுக்க முடியும். திருச்சபை தனக்கு பணம் அனுப்பமுடியாதிருந்த நிலைமையில் பவுல் தன் கைகளைப் பயன்படுத்தி உழைத்திருப்பதோடு, தன்னோடிருந்தவர்களுக்கும் உதவி செய்திருக்கிறார். பவுல் ஊர் ஊராகப் பணம் கேட்டு அலையவில்லை. இன்றைக்கு ஊழியத்தில் அக்கறை காட்டுகிற வாலிபர்களும்கூட ஒரு தொழிலைத் தேடி உழைத்து அநுபவம் பெறாமல் ஊழியத்துக்குள் நுழைந்துவிட்டால் எங்கோயிருந்து பணம் வரும் என்று கனவு காண்கிறார்கள். இந்தத தவறான எண்ணங்களும், அவற்றால் ஏற்படும் பாரதூரமான விளைவுகளும் நம்மத்தியில் தொடராமலிருப்பதற்காகவே உழைப்பைப் பற்றிய இந்த ஆக்கத்தை எழுத முனைந்தேன்.

அறியாமையை எப்போதுமே எதற்கும் ஒரு காரணமாக கர்த்தர் ஏற்றுக்கொள்ளுவதில்லை. அறியாமை, கர்த்தரை மகிமைப்படுத்த நமக்குத் தடையாக இருக்குமானால் அதைப்போக்கிக் கொண்டு கர்த்தருடைய கட்டளைகளை நம் வாழ்க்கையில் நிறைவேற்ற வேண்டும் என்று கர்த்தர் எதிர்பார்க்கிறார். உழைப்பைப் பற்றி நாம் ஆராயப் போகும் வேத போதனைகளை நாம் பின்பற்றி கர்த்தரை உழைப்பின் மூலம் மகிமைப்படுத்துவோம்.

## கர்த்தரும் உழைப்பும்

*வேதம் கர்த்தர் இந்த உலகத்தை எப்படிப் படைத்தார் என்று காட்டுவதோடு ஆதியாகமம் ஆரம்பமாவதைப் பார்க்கிறோம். ஒன்றுமில் லாததில் இருந்து கர்த்தர் அனைத்தையும் படைத்தார் என்று ஆதியாகமம் முதல் அதிகாரத்தில் வாசிக்கிறோம். ஆதி. 1:31, “கர்த்தர் தான் படைத்த எல்லாவற்றையும் பார்த்தார், அது மிகவும் நன்றாயிருந்தது” என்று விளக்கு கிறது. ஆதியாகமம் இரண்டாம் அதிகாரம் கர்த்தர் ஆதாமையும், ஏவாளை யும் படைத்தவிதத்தை விளக்குகிறது. அவர்களைப் படைத்த கர்த்தர் அவர் களை உழைக்கும்படியாகக் கட்டளையிட்டிருந்தார் (ஆதி. 2:15). இவற்றில் இருந்து நாம் சில முக்கிய உண்மைகளைக் கற்றுக்கொள்ளுகிறோம்.*

*(1) நம்மைப் படைத்த இறையாண்மையுள்ள கர்த்தர் உழைக்கும் கர்த்தராக இருக்கிறார். வெறும் மூச்சைவிட்டு அவரால் எதையும் படைத்திருக்க முடியும். அவர் மனதில் நினைத்த மாத்திரத்திலேயே சகலமும் உருவாகி யிருக்க முடியும். ஆனால், கர்த்தர் அப்படிச் செய்யவில்லை. அவர் சிரத்தை யோடு காரியமாற்றியிருக்கிறார். அவர் உலகத்தைப் படைத்தவிதத்தில் இருந்து தன்னை உழைக்கின்ற தேவனாகக் காட்டிக்கொள்ளுகிறார். ஆதி. 2:9, “அவர் சகலவித விருட்சங்களையும் முளைக்கப் பண்ணினார்” என்கிறது. இதில் கர்த்தரின் கைவண்ணத்தைக் காண முடிகிறது. மனித னைக் கூட அவர் நிலத்தில் இருந்த மண்ணை எடுத்து உருவாக்கி அவனுக்கு ஜீவனைக் கொடுத்து, அதன் பிறகு ஏவாளை அவனுடைய விலா எலும்பை எடுத்து உருவாக்கினார் என்று வாசிக்கிறோம். இச்செயல்கள் மூலம் கர்த்தர் தன்னை சிரத்தையுள்ள ஒரு உழைப்பாளி யாகக் காட்டிக்கொள்ளுகிறார். அவ்வாறாக ஆதியில் உழைத்த தேவன் இன்றைக்கும் உழைக்கும் தேவனாக இருந்து தான் படைத்த அனைத் தையும் பராமரித்து வருகிறார். உழைப்பு அவரோடு என்றுமிருந்தது.*

*(2) அடுத்ததாக படைப்பில் கர்த்தர் மூன்று காரியங்களை ஏற்படுத்தி யிருக்கிறார் என்பதை அறிந்துகொள்ள முடிகிறது. அவர் உழைப்பையும், ஓய்வு நாளையும், திருமணத்தையும் ஏற்படுத்தினார். அவர் தன்னை உழைக்கும் தேவனாக படைப்பில் அறிவித்துக்கொண்டது மனிதன் தன்னைப் போல உழைக்கும் மனிதனாக இருக்க வேண்டும் என்பதற்காகத் தான். அதேபோல கர்த்தர் படைப்பில் ஆறு நாட்கள் நன்றாக சிரத்தை யோடு உழைத்து, ஏழாவது நாள் ஓய்வு எடுத்தார் என்று வாசிக்கிறோம். அதையும் அவர் மனிதனின் நன்மையைக் கருதிச் செய்தார். மனிதன் தன்னைப் பார்த்துப் பழக வேண்டும் என்று செய்தார். ஆறு நாட்கள் கர்த்தர் உழைத்திருந்த உண்மையை அவருடைய ஏழாம் நாள் ஓய்வு வெளிப்படுத்துகிறது. வாரத்தின் ஆறு நாட்களைக் கர்த்தர் ஓய்விற்காகப் படைக்கவில்லை. மனிதன் உழைப்பதற்காகப் படைத்தார். உயர்வான, கடுமையான, நேர்மையான உழைப்பிற்குப் பிறகே அவன் ஓய்வு எடுக்க வேண்டுமென்பதைக் கர்த்தர் காட்டித் தந்திருக்கிறார். படைப்பில் கர்த்தரால் ஏற்படுத்தப்பட்டுள்ள மூன்று நியமங்களும் மனிதனால் உலகம் இருக்கும்வரை பின்பற்றப்பட வேண்டும். அதில் உழைப்பும் ஒன்று.*

*(3) மனிதனைப் படைத்த கர்த்தர் அவனைத் தோட்டத்தைப் பண்படுத்தவும், அதைக் காக்கவும் வைத்தார் என்று ஆதி. 2:15ல் வாசிக்கிறோம். அவற்றில் இருந்து அவன் உணவைப் பெற்றுக்கொள்ளவும் செய்தார். அத்தோடு அவர் படைத்த ஜீவராசிகளுக்கு அவனைப் பெயரிடும்படியாகவும் பணித்தார். இதையெல்லாம் செய்ததன் மூலம் கர்த்தர் மனிதனை உழைக்கும்படிச் செய்ததைப் பார்க்கிறோம். அவன் தன்னுடைய கைகளைப் பயன்படுத்தி நிலத்தை ஆதியில் பண்படுத்த வேண்டியிருந்தது. அவன் தோட்டத்தை சிரத்தையோடு பயிரிட்டு, தண்ணீர் பாய்ச்சி வளர்க்க வேண்டியிருந்தது. அவன் தகுந்த காலத்தில் பயிர்களை உணவுக்காக அறுவடை செய்ய வேண்டியிருந்தது. ஆதியில் சகலமும் பூரணமான நிலைமையில் இருந்தபோதும், கர்த்தர் மனிதனை ஒன்றும் செய்யத் தேவை யில்லாதவனாக இருக்கும்படியாகப் படைக்கவில்லை என்பதை இங்கே புரிந்துகொள்ள முடிகிறது அல்லவா. எல்லாம் பூரணமாக இருந்த நிலைமையில் அவன் தன்னைப்போல உழைப்பவனாக இருக்க வேண்டும் என்பது கர்த்தரின் சித்தமாக இருந்தது. அவனை உழைக்கும் மனிதனாக அவன் உருவாக்கிப் பயிற்சியளித்தார்.*

*கர்த்தர் அவனை சிந்தித்து செயலாற்றும் மனிதனாகப் படைத்திருந்தார். அவன் எல்லாவற்றையும், சிந்தித்து, ஆராய்ந்து முடிவெடுத்து செய்ய வேண்டியிருந்தது. அவன் ஜீவராசிகளுக்கு அந்தவகையிலேயே பெயரிட வேண்டியிருந்தது. கர்த்தர் தான் படைத்த மனிதனை சோம்பேரியாக இருக்கப் படைக்கவில்லை. அவர் படைத்த மனிதன் நல்ல, திறமையான உழைப்பாளி. அவன் சிந்திக்கத் தெரியாத முட்டாளாக இருக்கவில்லை. தனக்கான துணையை அவன் ஜீவராசிகளின் மத்தியில் தேடிக்கொள்ளும் படி அவர் செய்தபோது முட்டாளாக இருந்து கண்ணில்பட்டதொன்றை அவன் உடனடியாகத் துணையாக்கிக் கொள்ளவில்லை. அவன் சிந்தித்துப் பார்த்து ஜீவராசிகளில் தனக்கு சரியான துணை இருக்க முடியாது என்று கண்டுகொண்டான். அவன் அதைத் தெரிந்துகொள்ள அனைத்து ஜீவராசிகளையும் ஆராய்ந்து பார்க்க வேண்டியிருந்தது. அதில் நாம் அவனுடைய உழைப்பைப் பார்க்கிறோம். இறுதியில் கர்த்தர் அவனுக்குத் தகுந்த துணையைக் கொடுத்தபோது ஏவாளை அவன் ஆராய்ந்து பார்த்து தனக்கு அவள்தான் தகுந்த துணை என்பதைக் கண்டுகொண்டான். இதெல்லாம் கர்த்தரின் மனிதன் எத்தனை நல்ல திறமையான உழைப்பாளியாக இருந்தான் என்பதை விளக்குகின்றனவல்லவா.*

## பாவத்தின் பின் உழைப்பு

*சகலமும் பூரணமாக இருந்த நிலையில் மனிதன் உழைக்க வேண்டியிருந்தது என்று பார்த்தோம். மனிதன் பாவம் செய்தபின் என்ன நடந்தது என்பதையும் நாம் ஆராய்வது அவசியம். ஆதாமும், ஏவாளும் பாவம் செய்து ஏதேன் தோட்டத்தில் இருந்து விரட்டப்பட்டவுடன் உழைப்புக்கு அத்தோடு முடிவெற்படவில்லை. பாவம் மனிதனில் பல மாற்றங்களைக் கொண்டுவந்திருந்தபோதும், படைப்பின் நியமமாக இருந்த உழைப்பு அவனோடு தொடர்ந்தது. உண்மையில் பாவம் உழைப்பைக்*

*கடுமையானதாக்கியது என்பதை அறிந்துகொள்ளுகிறோம். கர்த்தர் ஆதாமைப் பார்த்து சொன்ன வார்த்தைகளைக் கவனியுங்கள்: "பூமி உன் நிமித்தம் சபிக்கப்பட்டிருக்கும்; நீ உயிரோடிருக்கும் நாளெல்லாம் வருத்தத்தோடே அதன் பலனைப் புசிப்பாய். . . . நீ பூமிக்குத் திரும்புமட்டும் உன் முகத்தின் வேர்வையால் ஆகாரம் புசிப்பாய்." (ஆதி. 3:17-19).*

*ஆரம்பத்தில் படைப்பு பூரணமாக இருந்த காலத்தில் ஆதாமும், ஏவாளும் கஷ்டங்கள் எதுவுமில்லாமல் உழைக்கும் வசதி இருந்தது. அவர்களுடைய பாவம் அனைத்தையும் பாழாக்கியது. துன்பத்தை அறிமுகப்படுத்தியது. அவர்களுடைய பாவத்திற்குத் தண்டனையாக கர்த்தர் அவர்கள் இனி துன்பப்பட்டு உழைத்து பலனடைய வேண்டிய நிலைமையை உண்டாக்கினார். மனிதன் உழைக்கும்போது பாவத்தின் காரணமாக நிலம் அவனுக்கு உதவாது. அதுவும் பாவத்தால் பாழாகியிருப்பதால் நல்ல விளைச்சளை எப்போதும் தராது. மனிதன் வியர்வை சிந்தி பாடுபட வேண்டிய நிலை உருவாகியது. தகுந்த நேரத்தில் மழை பொழியாது, இயற்கை நாசத்தில் அவன் பாடுபட்டு பயிரிட்டதும் அழிய நேரிடும். இதெல்லாம் மனிதன் செய்த பாவத்தினால் ஏற்பட்ட விளைவுகள். இன்றும் எல்லா மனிதர்களும் உழைக்க வேண்டியிருந்த போதும் அவர்கள் கடுமையாக உழைத்தே எதையும் அடைய நேரிடும்.*

*ஆதாம் ஏதேனில் இருந்து விரட்டப்பட்ட பிறகு தன்னுடைய பிள்ளைகளுக்கு உழைக்கக் கற்றுத்தந்திருந்ததை ஆதி. 4ல் வாசிக்கிறோம். ஆபேல் ஆடு மேய்க்கும் தொழிலைச் செய்தான். காயின் நிலத்தைப் பயிரிடுகிறவனாக இருந்தான். இது பாவத்திற்குப் பின்பும் உலகத்தில் உழைப்பு தொடர்ந்ததை விளக்குகிறது. காயினின் பாவத்தின் காரணமாக மனிதன் மேலும் கடுமையாக உழைத்தே பலனடைய வேண்டியிருக்கும் என்பதைக் கர்த்தர் ஆதி. 4:11, 12ல் விளக்குகிறார். அதற்குப் பிறகு நோவாவின் காலத்தில் உழைப்பைப் பற்றிய மேலும் விளக்கங்கள் நமக்குக் கிடைக்கின்றன. மனிதனின் பாவங்கள் உலகத்தில் அதிகரித்ததால் கர்த்தர் உலகத்தை அழிக்கத் தீர்மானம் எடுத்தார். நேர்மையானவனாக நோவா மட்டுமே உலகத்தில் இருந்தான். நாற்பது நாட்கள் மழை இடைவிடாமல் பொழிந்து அதன் மூலம் உலகத்தை அழிக்கப் போகிறேன் என்றும் அதிலிருந்து தப்பிக்கொள்ள ஒரு படகைக் கட்டி அதில் தன் குடும்பத்தோடு இருந்துகொள்ளுமாறு கர்த்தர் நோவாவுக்கு கட்டளையிட்டார். கர்த்தரின் பிள்ளையாக இருந்த நோவா எத்தனை உழைப்பாளி என்பதை அவன் படகைக் கட்டியவிதத்தில் இருந்து தெரிந்துகொள்ளுகிறோம். அவன் பல வருடங்களாக தனியாக குடும்பத்தோடு உழைத்து அந்தப் படகை கர்த்தர் விதித்திருந்தவிதமாகக் கட்ட வேண்டியிருந்தது. அவனுடைய பிள்ளைகள் அந்தப் படகோடு சேர்ந்து வளர்ந்திருக்கிறார்கள். பல இடையூறுகளுக்கு மத்தியிலும் மனந்தளராமல் அந்தப் படகைக் கட்டி முடிக்க உழைத்திருக்கிறான் நோவா. ஒரு சோம்பேரியால் அதைச் செய்திருக்க முடியாது. இன்றைக்கு ஊழியப்பணிபுரிகிற எந்த மனிதன் நோவாவைப்போல பிரதிபலன் எதிர்பார்க்காது கர்த்தருடைய பணியை உழைத்துச் செய்துவருகிறான்? ஜெபம் செய்கிறேன் என்று நேரத்தை வீணாக்கி,*

ஒப்புக்கு சிலபேரை வீட்டில் போய்ப் பார்த்துவிட்டு ஆத்துமாக்களை ஏமாற்றி கைநிறைய வாங்கிக்கொண்டு சும்மா இருப்பதே அநேகமானோருக்கு தொழிலாக இருக்கிறது. உழைக்கும் தன்மையே உதிரத்தில் இல்லாத பெருச்சாளிகளைத்தான் இன்று ஊழியம் சுமக்க வேண்டிய நிலைமை இருக்கிறது.

கர்த்தர் உலகத்தைத் தண்ணீரால் அழித்தபிறகு நோவாவும் அவனோடிருந்தவர்களும் மட்டுமே உயிர்வாழ்ந்தார்கள். கர்த்தர் அவர்களை ஆசீர்வதித்தார். அவர்கள் உலகில் பல்கிப் பெருகும்படி ஆசீர்வதித்தார். அதன்பிறகு ஆதி. 9:20ல் “நோவா பயிரிடுகிறவனாகி திராட்சைத் தோட்டத்தை நாட்டினான்” என்று வாசிக்கிறோம். நோவாவின் பணி முடிந்த பிறகு அவன் மறுபடியும் உழைத்து வாழ்வதைத் தொழிலாகக் கொண்டான் என்று பார்க்கிறோம். தன்னுடைய பிள்ளைகளையும் உழைப்பவர்களாக வளர்த்தான் என்று பார்க்கிறோம். அதற்குப் பிறகு ஆபிரகாமை உழைப்புக்கு அடையாளமாகப் பார்க்கிறோம். அவனும், சாராளும் மந்தை மேய்க்கிறவர்களாக இருந்து பெரும் சொத்துக்கு அதிபதியாக இருந்தார்கள். அவர்களுடைய நேர்மையான உழைப்பு அவர்களைக் கர்த்தருக்கு முன்பு உயர்த்தியது. பாவமுள்ள உலகத்தில் வாழ்ந்த நோவாவும், ஆபிரகாமும் கர்த்தரின் பிள்ளைகள். கர்த்தரின் பிள்ளைகளின் நேர்மையான உழைப்பைக் கர்த்தர் ஆசீர்வதித்தார். அத்தோடு கர்த்தரின் பிள்ளைகள் பணம் பண்ணுவதை நோக்கமாகக் கொண்டு உழைக்கவில்லை. உழைப்பதே மனிதன் மனிதனாக வாழ வழி என்பதை உணர்ந்திருந்ததால் உழைத்தார்கள். பணத்துக்காக ஆபிரகாம் வாழாததால்தான் தன்னுடைய நல்ல நிலங்களையெல்லாம் லோத்துக்கு கொடுத்தான். நேர்மையாக கர்த்தரை நம்பி உழைக்கிறவனுக்கு மோசமான நிலமும் பலன் கொடுக்கும் என்பதை ஆபிரகாமின் வாழ்க்கையில் இருந்து தெரிந்துகொள்ளுகிறோம். இவ்வாறாக மனித குலத்தில் உழைப்பு தொடர்ந்தது. மனிதனாகப் பிறந்தவன் உழைப்பதைத் தன்னுடைய ஆண்மையின் இலக்கணமாக எந்த சமுதாயத்திலும் கொண்டிருந்திருக்கிறான் என்பதை வேத வரலாறு நமக்குத் தெளிவாக சுட்டிக்காட்டுகிறது.

## பத்துக் கட்டளையும் உழைப்பும்

இஸ்ரவேல் ஒரு நாடாக உருவாகுவதற்கு முன்பு கர்த்தர் தந்த பத்துக் கட்டளைகள் மனிதன் உழைக்க வேண்டும் என்று கட்டளையிடுகிறது. நான்காம் கட்டளையில் உழைப்பை ஓய்வு நாளோடு சம்பந்தப்படுத்தி விளக்குகிறார் கர்த்தர் (யாத்தி. 20:9-11). வாரத்தின் ஆறு நாட்கள் வேலையும், ஓய்வுநாளும் ஒன்றோடொன்று தொடர்புடையவை. வாரத்தின் ஆறு நாட்களில் மனிதன் சரீரத்தை வருத்தி உழைக்க வேண்டும் என்பது கர்த்தரின் கட்டளை. அந்த நியாயமான உழைப்பின் மூலம் அவன் தன்னையும், தன்னுடைய குடும்பத்தாரையும் போஷிக்க வேண்டும். அந்த ஆறு நாட்களில் அவன் சோம்பேரித்தனமாக இருக்கக்கூடாது. பணத்தை மட்டும் நோக்கமாக வைத்து மனிதன் அந்த ஆறுநாட்களிலும் உழைப்பில் ஈடுபடக் கூடாது. உழைப்பது தன் வாழ்க்கையில் கர்த்தர் எதிர்பார்க்கும்

*ஒன்று என்ற எண்ணத்தோடும், உழைப்பதற்காகத்தான் படைக்கப்பட்டிருக் கிறோம் என்ற எண்ணத்தோடும் அவன் உழைக்க வேண்டும். தன்னுடைய வீட்டாரும், தனக்குக் கீழுள்ளவர்களும்கூட உழைக்கும்படி அவன் பார்த்துக் கொள்ள வேண்டும். உழைப்பின் மூலம் மட்டுமே எவரும் தங்களுக்கான பலன்களை அடைய வேண்டும் என்பது கர்த்தரின் நியதி. சோம்பேரித்தனத்தையும், உழைக்காமல் இலகுவாக பணத்தை அடை வதையும், சூதாடுவது போன்ற நியாயமற்ற வழிகளில் போவதையும், மற்றவர் உழைப்பில் வாழ்வதையும், பெறுகிற பணத்திற்கு ஏற்ற உழைப்பைக் கொடுக்காமல் இருப்பதையும், நமக்கு ஊதியம் தருகிறவர்களுக்கு கொடுக்க வேண்டிய உழைப்பைக் கொடுக்காமல் இருப்பதையும் கர்த்தர் வெறுக் கிறார்; தன்னை அவமதிக்கும் செயல்களாகக் கருதுகிறார். ஆத்துமாக் கள் தரும் காணிக்கைகளை அள்ளி வாங்கிக்கொண்டு உழைத்துத் தயாரிக் காமல் அறைகுறைப் போதனைகளைக் கொடுக்கும் அதிகப் பிரசங்கிகள் எந்தளவுக்கு கொடுமைக்காரர்கள் என்பதை இதிலிருந்து தெரிந்துகொள்ள லாம்.*

*நான்காம் கட்டளை ஓய்வுநாளைப் பற்றியும் விளக்குகிறது. வாரத்தின் ஆறு நாட்களிலும் வேலை செய்வது எந்தளவுக்கு முக்கியமோ அந்தளவுக்கு வாரத்தின் முதலாம் நாளில் ஓய்வு எடுக்க வேண்டும். இங்கே ஓய்வெடுப்பது என்பது தூங்குவதையும், பீச்சிலோ, பார்க்கிலோ காற்று வாங்கப் போவதையும், அல்லது விடுமுறையில் உல்லாசமாக இருப்பதற்கு எங்காவது போவதையும் குறிப்பிடவில்லை. இந்த ஓய்வு ஆத்மீக ஓய்வைக் குறிக்கிறது. முதல் நான்கு கட்டளைகளுமே கர்த்தரை நாம் எப்படி ஆராதிக்க வேண்டும் என்பதைப் பற்றிப் போதிப்பதைக் கவனியுங்கள். வாரத்தின் முதல் நாளில் நாம், நாம் சார்ந்துள்ள சபை ஆராதனைகளில் கலந்து கொண்டும், மிகுதி நேரங்களில் ஆவிக்குரிய காரியங்களைச் செய்வதையுமே இங்கே கர்த்தர் வலியுறுத்துகிறார். இந்த நாளில் நாம் வாரத்தின் ஏனைய ஆறுநாட்களிலும் செய்கின்ற வேலைகளை செய்யக் கர்த்தர் அனுமதிக்க வில்லை. ஆத்மீக ஓய்விலும் உழைப்பிருப்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். ஆனால், இது வேறுவகையான உழைப்பு. ஆவிக்குரிய உழைப்பு. ஆவிக்குரிய ஓய்வை நாம் வாரத்தின் முதல் நாளில் எடுத்துவிட்டு ஏனைய ஆறு நாட்களிலும் நேர்மையாக, உடலை வருத்தி கர்த்தருக்காக உழைக்க வேண்டும் என்பதே நான்காம் கட்டளை தரும் போதனை. இது மனித வர்க்கம் முழுவதற்கும் கொடுக்கப்பட்டிருக்கிற கர்த்தரின் கட்டளை. மனித வர்க்கத்தின் நலத்திற்காகவே படைத்தவர் தன்னுடைய அளப்பரிய ஞானத்தின் மூலம் இத்தகைய ஏற்பாட்டைச் செய்து வைத்திருக்கிறார்.*

## இஸ்ரவேலும் உழைப்பும்

*தன்னுடைய சித்தத்தை தான் படைத்த இந்த உலகில் நிறைவேற்றிக் கொள்ள கர்த்தர் இஸ்ரவேலைத் தெரிந்தெடுத்து அதற்கு இராஜாவாக இருப்பதன் மூலம் ஏனைய நாடுகளுக்கும் தன்னை அறிவிப்பதை நோக்கமாகக் கொண்டிருந்தார். தான் தெரிந்துகொண்ட இஸ்ரவேல் நாடு தன்னை மகிமைப்படுத்தும்படியாக நீதியாக நடந்துகொள்ள அவர்*

*அந்நாட்டிற்கு நீதிச்சட்டங்களை ஏற்படுத்திக் கொடுத்தார். ஆலய வழிபாட்டுக்குரிய சட்டங்கள் மட்டுமல்லாமல் தேச மக்களின் வாழ்க்கைக் குரிய சமுதாய ஒழுங்குக் கட்டுப்பாடுகளையும் ஏற்படுத்தினார்.*

*நிலத்தைப் பண்படுத்திப் பயிரிட்டும், மந்தையை மேய்த்தும் மனிதன் உழைப்போடு சம்பந்தப்பட்டதாக பணம், ஊதியம், பொருள் என்பவற்றை அனுபவிக்க ஆரம்பிப்பதால் கர்த்தர் அவற்றிற்குரிய நீதியொழுக்க சட்டங்களையும் ஏற்படுத்தினார். யாத்திராகமம் 21, 22ல் அவற்றை நாம் வாசிக்கிறோம். பாவத்தின் வீழ்ச்சியால் பாதிக்கப்பட்டிருக்கும் உழைப்பைக் கர்த்தர் பரிசுத்தமானதாகப் பார்க்கிறார். அதைப் பரிசுத்தத்தோடு செய்யும் படிக் கட்டளையிட்டார். ஆகவேதான், உழைப்பிலும் அதோடு தொடர்பு டைய காரியங்களிலும் பரிசுத்தமற்ற செயல்களை அவர் அனுமதிக்க வில்லை. நமது உழைப்பில் மட்டுமன்றி நமக்காக உழைப்பவர்களையும் நாம் நியாயமாக நடத்த பத்துக்கட்டளைகள் வலியுறுத்துகின்றன. நமது வேலையாட்கள், மிருகங்களைக்கூட நாம் நியாயமாக நடத்த வேண்டும். உழைக்கிறவன் ஊதியத்தைப் பெறத்தகுதியுள்ளவனாகிறான். மிருகங்களும் அந்தத் தகுதியை அடைகின்றன. (2 தீமோத். 5:17; உபாகமம் 25:4; இதையும் கவனிப்பது அவசியம், லூக்கா 10:7).*

*அத்தோடு வறுமையை அநுபவிக்கிறவர்களுக்கான வசதிகளை செய்து கொடுக்க வேண்டியதும் உழைக்கிறவர்களின் கடமையாகும். (யாத்திராக மம் 23:3-12). ஆறுநாட்களில் உழைப்பின் அவசியத்தை மறுபடியும் யாத்திராகமம் 23:10-12 வசனங்கள் வலியுறுத்துகின்றன. நமது உழைப்பின் மூலம் வறியவர்களின் துன்பம் போக்கப்பட வேண்டுமென்பதை 23:10-11 வரையுள்ள வசனங்கள் அறிவுறுத்துவதைக் காண்கிறோம். கர்த்தருடைய வழிமுறைகளைப் பின்பற்றி உழைத்தால் உணவுப் பற்றாக்குறை ஏற்படாது என்பதையும், வறுமைக்கு இடமில்லை என்பதையும் லேவியராகமம் விளக்குகின்றது. (லேவியர் 25:18-22). பாவமே இன்றைக்கு உழைப்பைப் பாதித்து மனிதர்கள் மத்தியில் சுரண்டலை ஏற்படுத்தியிருக்கிறது. அதைக் கர்த்தர் அடியோடு வெறுக்கிறார். (எரேமியா 22:14; யாக்கோபு 5:4).*

*கர்த்தருடைய கட்டளைகளை உள்ளது உள்ளபடி பின்பற்றுவதன் மூலம் மட்டுமே அவருடைய ஆசீர்வாதங்களை உழைப்பின் மூலம் அடைய முடையும். அதாவது, நமது உழைப்பு கர்த்தருடைய வார்த்தையின்படி நியாயபூர்வமானதாகவும், கர்த்தருக்குரியதாகவும், அவரை மகிமைப்படுத்து வதாகவும் அமைந்தால் மட்டுமே அவருடைய ஆசீர்வாதத்தைப் பெற்று, உழைப்பால் உயரவும் முடியும் என்பதை உபாகமம் 28:1-15 வரையுள்ள வசனங்கள் விளக்குகின்றன. இஸ்ரவேலர்கள் கர்த்தருடைய வார்த்தையின் படி உழைக்கும்படி எதிர்பார்க்கப்பட்டார்கள். கர்த்தர் இஸ்ரவேலர்களுக்கு தந்த உழைப்பைப்பற்றிய ஒழுங்குக் கட்டுப்பாடுகள் என்றும் பொருந்தும். அவை பழைய ஏற்பாட்டு மக்களுக்கு மட்டும் கொடுக்கப்படவில்லை. இன்றைக்கு “புரொஸ்பரிட்டி”* (Prosperity) *போதனைகளை வழங்கி உழைக்காமலேயே பணக்காரர்களாக முடியும் என்று ஆத்துமாக்களை அநியாய வழியில் நடத்த முயலும் கெரிஸ்மெட்டிக் இயக்கம் வேதத்தை*

*சரியாக வாசிப்ப தில்லை. ஆத்துமாக்களுக்கு வேதம் தெரியாதென்ற தைரியத்தில் அவர் களுக்குப் பொய்யைச் சொல்லி அது தன்னை வளர்த்துக் கொள்ளுகிறது. பெரிய ஊழியக்காரர்கள் என்ற பெயரில் திரியும் அநேக கெரிஸ்மெட்டிக் சுவிசேஷகர்கள் பணத்தில் இன்று புரளுவதற்குக் காரணம் உழைக்காமல் ஆத்துமாக்களை ஏய்த்துப் பணம் பெறுவதால்தான்.*

*அதுமட்டுமல்லாமல் இஸ்ரவேலில் ஆண்கள் மட்டுமல்லாமல் பெண் களும் உழைக்கிறவர்களாக இருந்தனர். ஆண் செய்கிற வேலையை அவர்கள் செய்யும்படிக் கர்த்தர் எதிர்பார்க்கவில்லை. ஆனால், பெண்கள் தங்களுக்குரிய பணியைக் கர்த்தருக்காக செய்யவேண்டியிருந்தது. நீதிமொழிகள் 31ல் நாம் வாசிக்கும் பெண் விசுவாசிகளாகிய பெண்களுக்கு நல்ல உதாரணம். அவள் சோம்பேரியாக வாழவில்லை. அவளுடைய திறமைகளைப் பயன்படுத்தி கணவனுக்கு நல்ல பெயர் பெற்றுத்தரும் அளவுக்கு அவள் உழைத்திருக்கிறாள்.*

## ஆத்மீக ஆராதனையும் உழைப்பும்

*ஏற்கனவே ஓய்வு நாளில் ஆத்மீக உழைப்பின் அவசியத்தைக் கவனித்தோம். ஆத்மீகக் காரியங்களில் ஆவிக்குரிய உழைப்பிருப்பதை உணர வேண்டியது அவசியம். யாத்திராகமத்திலும், லேவியராகமத்திலும் கர்த்தர் தன்னுடைய ஆராதனைக்குரிய சடங்குகளைப்பற்றியும், ஆலயக் கட்டுமானத்திற்கான விபரங்களையும் தந்திருக்கிறார். இவை ஆத்மீக ஆராதனையில் காணப்பட வேண்டிய மூன்று உண்மைகளை விளக்கு கின்றன. (1) ஒழுங்கு - ஆராதனையில் கர்த்தரின் வார்த்தையின்படியிலான ஒழுங்கு இருக்க வேண்டும். கர்த்தர் ஒழுங்கின் தேவனாக இருக்கிறார். ஆராதனையில் ஒழுங்கிருக்க வேண்டுமானால் சிந்தித்து செயலாற்றாமல் ஒழுங்கைக் கொண்டுவர முடியாது. (2) உழைப்பு - ஆத்மீக ஆராதனை என்பது வெறுமனே வானத்தை பார்த்துக்கொண்டு சும்மா இருப்பதோ அல்லது கண்களை மூடிக்கொண்டு சிந்திக்காமல் இருப்பதோ அல்ல; ஆத்மீக ஆராதனையில் உழைப்பு அதிகம் இருக்கிறது. சரீர உழைப்பு, உணர்ச்சி வெளிப்பாடு, அறிவுபூர்வமான சிந்தனை ஆகிய மூன்றிற்கும் அதிக உழைப்பு உண்டு. இது பழைய ஏற்பாட்டிற்கும் புதிய ஏற்பாட்டிற்கும் பொருந்தும். இதையெல்லாம் சிந்தித்து உழைக்காமல் செய்ய முடியாது. (3) பரிசுத்தம் - கர்த்தரின் வார்த்தையின்படி அனைத்தையும் செய்து கர்த்தரின் மகிமைக்காக ஆராதித்தல்.*

*இதையே புதிய ஏற்பாட்டிலும் பார்க்கிறோம். ஓய்வு நாளில் நாம் பரிசுத்த ஆத்மீக உழைப்பில் ஈடுபடுகிறோம். அறிவுபூர்வமான ஆத்மீகப் பிரசங் கத்தைச் செய்தல், பிரசங்கத்தைக் கவனமாக அறிவுபூர்வமாகக் கேட்டு சிந்தித்து ஆராய்ந்து அதன்படி நடக்க முயலுதல், சங்கீதங்களையும், பாடல்களையும் உணர்ச்சியோடும், ஆனந்தத்தோடும் பாடுதல், ஜெபித்தல், வேத வாசிப்பு, திருவிருந்தில் பங்கு பெறுதல், ஆத்மீகப் பரிசோதனையில் ஈடுபடுதல், ஐக்கியத்தில் வருதல், ஆத்மீக சம்பாஷனையில் ஈடுபடுதல், சுவிசேஷத்தை அறிவித்தல், கருணைக்கிடமான காரியங்களைச் செய்தல் இவையனைத்தையும் உழைப்பில்லாமல் செய்ய முடியாது. உழைப்பில்லாத*

*ஆத்மீக ஆராதனையைக் கர்த்தரின் வேதத்தில் நாம் காண முடியாது. (லூக்கா 10:27).*

## இயேசு கிறிஸ்துவும், உழைப்பும்

*இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கையை, அவர் பிறந்ததில் இருந்து ஒன்று விடாமல் அவருடைய அன்றாட நடவடிக்கைகள் அனைத்தையும் தொகுத் தளிப்பது புதிய ஏற்பாட்டின் நோக்கமல்ல. இருந்தாலும் முதல் நான்கு சுவிசேஷ நூல்களும் இயேசு கிறிஸ்து உழைப்புக்குத் தன் வாழ்க்கையில் அளித்த இடத்தைக் குறிப்பாக உணர்த்தாமலில்லை. வேதம் லூக்கா 2:40; 52 ஆகிய வசனங்களில் இயேசுவின் வளர்ச்சி பற்றிக் குறிப்பிடுகிறது. அத்தோடு அவருடைய ஞானத்தைப் பற்றி லூக்கா 2:46, 47ல் வாசிக்கிறோம். சிறு வயதிலிருந்தே இயேசு பழைய ஏற்பாட்டு நூல்களைத் திறமையாகக் கற்று வளர்ந்தார். அவர் தேவனாக இருந்தபோதும் தன்னுடைய முழுமை யான மானுடத் தன்மையின்படி கற்று வளர வேண்டியிருந்தது. அவர் தன்னுடைய தந்தையின் தொழிலான தச்சு வேலையை, அவருக்கு உதவியாக இருந்து செய்து வந்திருக்கிறார். இயேசு எல்லாவற்றிலும் கர்த்தருக்குப் பூரணமாகக் கீழ்ப்படிந்தார் என்று வாசிக்கிறோம். அவ் வார்த்தைகளின்படி அவர் தன்னுடைய பெற்றோருக்கு (லூக்கா 2:51) கீழ்ப்படிந்து எல்லாக் கிரியைகளையும் தன் வாழ்க்கையில் செய்து வளர வேண்டியிருந்தது. தனது முப்பதாம் வயதில் அவர் ஊழியத்தை ஆரம்பிக் கும்வரை தனது கைகளைப் பயன்படுத்தி உழைத்துப் பெற்றோருக்கு உதவி செய்து, தேவ வார்த்தைகளைக் கற்றுப் பொறுப்புணர்வோடு சமுதாயத்தில் நடந்து வந்திருந்தார். மற்றவர்களுக்குப் போதித்த அனைத்தையும் தன்னு டைய வாழ்க்கையில் பின்பற்றியிருந்தார்.*

*அவருடைய வேத ஞானத்தைக் கண்டு ஆச்சரியப்படுகின்ற நாம் அவர் எந்தளவுக்கு அவற்றை உழைத்துக் கற்று வளர்ந்திருந்தார் என்பதை எண்ணிப் பார்ப்பதில்லை. பரிசேயர்களும், சதுசேயர்களும் வேறு பலரும் அவரை அன்றாடம் சோதித்துக் குறைகண்டு கவிழ்க்கப் பார்த்தார்கள் (லூக்கா 10:25). வேத ஞானத்தை இயேசு தம்மில் வளர்த்துக்கொண்டதோடு சிந்தித்து அறிவுபூர்வமாக வாதிடக் கற்றுக்கொள்ளாமலிருந்திருந்தால் அவரால் அவர்களை வென்றிருக்க முடியாது. இவையெல்லாம் அவர் தேவனாக இருந்ததால் இலகுவாக அவரிடம் காணப்பட்டன என்றால் அது அவருடைய மானுடத்தைக் குறைவுபடுத்தி தெய்வீகத்தை மாசுபடுத்தி விடும். ஆறுநாள் வேலையை வலியுறுத்தும் பத்துக் கட்டளையை அந்தக் கட்டளைக்கே தேவனாகிய இயேசு கடைப்பிடிக்காமல் இருந்திருக்க முடியாது. வாரத்தில் ஆறுநாட்களில் அவர் சகலவிதத்திலும் உழைத்தார். அவர் கர்த்தரின் கட்டளைகள் அனைத்தையும் பூரணமாகத் தன் வாழ்வில் கைக்கொண்டிருந்தார். ஏழாம் நாளிலும் அவர் ஆராதனையில் முழுமை யாகப் பங்குகொண்டு ஆலயத்தில் வழிபட்டுப் போதனை செய்தார்.*

*அவருடைய ஊழிய உழைப்பைப் பற்றி வேதம் தெளிவாக விளக்குகிறது. நாடு, நகரங்கள், கிராமங்கள் என்று அவர் திட்டமிட்டு பிரயாணம் செய்து மக்களிடத்தில் சுவிசேஷத்தை அறிவித்தார் (லூக்கா 4:43; யோவான் 4:34).*

*அவருடைய ஊழியத்தில் ஒழுங்கையும், கடுமையான உழைப்பையும், பார்க்க முடிகிறது. அவருடைய உழைப்புக்கு மத்தியில் நேர்மையையும் பார்க்கிறோம். அவருடைய ஆத்மீக உழைப்பைக் கவனிக்காமல் இருந்துவிட முடியாது. வேதப் படிப்பு, உழைப்பின் திறத்தைக் காட்டும் பிரசங்கங்கள் (மலைப்பிரசங்கம்), வாதங்கள் போன்றவற்றோடு அவருடைய ஜெப உழைப்பைக் கவனிப்பதும் அவசியம். அவர் உழைத்து ஜெபித்தார். தன்னுடைய சரீரத்தையும், மனதையும் கட்டுப்படுத்தி நீண்ட நேரம் ஜெபத்தில் ஈடுபட்டார் (லூக்கா 5:16). தன்னோடு இணைந்து உழைத்து ஜெபிக்கத் தவறியதற்காக தன்னுடைய சீடர்களையும் கடிந்து கொண்டார் (லூக்கா 22:44-46).*

*அவர் சுவிசேஷத்தை அறிவித்துப் போதித்தது மட்டுமல்லாமல் தன்னுடைய சீடர்களுக்கு மூன்று வருடங்கள் கடுமையான பயிற்சி அளித்து வளர்த்தார். அதில் அவருடைய உழைப்பையும் அவருடைய சீடர்களின் உழைப்பையும் கண்கிறோம். அவர் எழுபது பேரை சுவிசேஷ ஊழியத்துக்கு அனுப்பினார். அவர்களுக்குப் பயிற்சியளிக்காமல் அவர் அனுப்பியிருக்க முடியாது. அவர் ஊழியக்காரர்களின் அவசியத்தை உணர்ந்து அவர்களுக்காக ஜெபிக்கும்படிக் கூறினார் (லூக்கா 10:2). ஆனால், ஊழியக்காரர்கள் வேண்டும் என்பதற்காக அவர் ஊழியக்காரர்களின் தரத்தைக் குறைத்துவிடவில்லை. பயிற்சியளிப்பதில் கவனக்குறைவாக இருந்துவிடவில்லை. ஊழியம் தானே வளரும் என்று சும்மா இருந்து விடவும் இல்லை. இயேசுவின் வாழ்க்கையில் மட்டும் நாம் உழைப்பின் அவசியத்தைப் பார்ப்பதில்லை; அவருடைய போதனைகளிலும் பார்க்கிறோம்.*

## அப்போஸ்தலர்களும், உழைப்பும்

*இயேசு கிறிஸ்துவின் சீடர்களான அப்போஸ்தலர்கள் இயேசுவைப் பின்பற்றுவதற்கு முன்பு பல தொழில்களை வாழ்க்கையில் செய்திருக்கின்றனர். இயேசுவோடிருந்தபோது அவர்கள் அவரிடம் உழைக்கக் கற்றுக் கொண்டதோடு கடுமையாக உழைத்தனர். ஊழியத்தைச் செய்த நேரத்தைத் தவிர ஏனைய நேரங்களில் அவர்கள் நிச்சயம் வேலைகளைச் செய்திருக்கின்றனர். அவர்கள் என்ன வேலை செய்தார்கள் என்பதை வேதம் நமக்கு விளக்கவில்லை என்பதால் அவர்கள் வேலை செய்யாமல் சாப்பிட்டார்கள், வாழ்ந்தார்கள் என்று நாம் முடிவு கட்டுவது தவறு. இயேசுவும், அவருடைய அப்போஸ்தலர்களும் ஊழியம் செய்த நேரந்தவிர்த்த ஏனைய நேரங்களில் தங்களுடைய உணவுக்காகவும், ஏனைய தேவைகளுக்காகவும் உழைத்திருக்கின்றனர். உழைக்காதவன் உணவருந்தத் தகுதியில்லாதவன் என்று போதித்துள்ள அவர்கள் தாங்களே அவ்வார்த்தைகளுக்கு எதிராக நடந்திருக்க முடியாது.*

*அப்போஸ்தலனாகிய பவுல் தனக்குத் தெரிந்த கூடாரம் செய்யும் தொழிலைச் செய்து ஊழியத்தைக் கவனித்துக் கொள்ளத் தவறவில்லை. அப்போஸ்தலனாக இருப்பதால் கரங்களைப் பயன்படுத்தி உழைப்பது தனக்கு மதிப்பளிக்காது என்று எண்ணிப் பவுல் பணம் கேட்டு ஒருபோதும் அலையவில்லை. உழைத்துத் தன்னையும். தன்னோடிருந்தவர்களையும்*

*கவனித்துக் கொண்டார். கொரிந்தியர்கள் தனக்குக் கொடுக்க வேண்டியதைக் கொடுக்க மனதில்லாதிருந்தபோது பவுல் அவர்கள் திருந்தவேண்டுமென்பதற்காகத் தானே கைவருந்தி உழைத்து ஊழியத்தைச் செய்திருக்கிறார். கொரிந்தியர்களிடம் பணம் வாங்குவதைத் தவிர்த்திருக்கிறார். இதன் மூலம் பணத்துக்காக ஊழியம் செய்கிறவர்களல்ல அப்போஸ்தலர்கள் என்று நிரூபித்திருக்கிறார் பவுல்.*

## புதிய ஏற்பாடும் உழைப்பும்

*புதிய ஏற்பாட்டு நூல்கள் உழைப்பைப் பற்றிய அநேக போதனைகளைக் கட்டளைகளாகவும், உதாரணங்களின் மூலமும் தருகின்றது. பவுல் அப்போஸ்தலன் தன்னுடைய நிருபங்களில் உழைப்பின் அவசியத்தை வலியுறுத்தியிருக்கிறார். 1 தெசலோ. 4:12ல், "நாங்கள் உங்களுக்குக் கட்டளையிட்டப்படியே . . . உங்கள் சொந்த அலுவல்களைப் பார்க்கவும், உங்கள் சொந்தக் கைகளினாலே வேலைசெய்யவும் வேண்டுமென்று உங்களுக்குப் புத்திசொல்லுகிறோம்" என்கிறார் பவுல். விசுவாசிகள் தங்களுடைய நேரத்தை வீண்பேச்சுப் பேசி செலவழிக்காமல் கைகளைப் பயன்படுத்தி உழைக்க வேண்டுமென்று பவுல் விளக்குகிறார்.*

*இதேபோல 2 தெசலோ. 3ம் அதிகாரத்திலும் உழைப்பின் அவசியத்தைப் பவுல் வலியுறுத்தியிருக்கிறார். அதற்கு தாங்கள் வாழ்ந்த வாழ்க்கையையே உதாரணமாகக் காட்டுகிறார். "இன்னவிதமாய் எங்களைப் பின்பற்ற வேண்டுமென்று அறிந்திருக்கிறீர்களே; நாங்கள் உங்களுக்குள் ஒழுங்கற்று நடவாமலும், ஒருவனிடத்திலும் இலவசமாய் சாப்பிடாமலும், உங்களில் ஒருவனுக்கும் பாரமாயிராதபடிக்கு இரவும் பகலும் பிரயாசத்தோடும் வருத்தத்தோடும் வேலை செய்து சாப்பிட்டோம்." (2 தெசலோ. 3:7-8). இன்றைக்கு எத்தனைப் போதகர்கள் இந்த வார்த்தைகளைக் கவனித்துப் படித்திருக்கிறார்கள்? ஊழியம் செய்ய ஆரம்பித்துவிட்டால் கைகளைப் பயன்படுத்தி உழைப்பது அவமானம் என்று கருதும் அரைவேட்காடுகளைத் தான் நாம் தொடர்ந்து நம்மத்தியில் பார்க்கிறோம். பவுல் அப்படி நினைக்கவில்லை. இலவசமாய் ஒருவனிடத்திலும் கைநீட்டி எதையும் வாங்குவது பத்துக்கட்டளைகளுக்கு எதிரானது என்று தெரிந்து வைத்திருந்த பவுல் அதற்கு ஒருபோதும் தன் வாழ்க்கையில் இடங்கொடுக்கவில்லை. மாதக் கடைசியில் 'ஹவுஸ் விசிட்டிங்' என்று வீடு வீடாய்ப்போய் ஆத்துமாக்களிடம் கைநீட்டி வசூல் செய்து வயிற்றை நிரப்பிவரும் வசூல் மன்னர்களே இன்று தமிழினத்து ஊழியக்காரர்களாக இருக்கிறார்கள். இவர்களுக்கும் பவுலுக்கும் வெகுதூரம்.*

*எவருக்கும் பாரமாய் இருக்கவும் பவுல் ஒரு போதும் விரும்பவில்லை. அதற்கு வாழ்க்கையில் இடமும் கொடுக்கவில்லை. அதைத் தவிர்ப்பதற்காக பவுல் இரவும், பகலும் பிரயாசத்தோடும், வருத்தத்தோடும் வேலை செய்து சாப்பிட்டிருக்கிறார். 1 தெசலோ. 3:9ல், சொல்லுவதைக் கவனமாகக் கவனியுங்கள். இதில் பவுலின் மெய்யான போதக உள்ளத்தை அடையாளம் காணமுடிகிறது. "உங்கள் மேல் பாரத்தை வைப்பதற்கான அதிகாரம் எங்களுக்கு இல்லையென்பதினாலே அப்படிச் செய்யாமல், நீங்கள் எங்களைப்*

*பின்பற்றும்படிக்கு நாங்கள் உங்களுக்கு மாதிரியாயிருக்க வேண்டுமென்றே அப்படிச் செய்தோம்." அப்போஸ்தலனாகிய பவுலால் அதிகாரத்தோடு சபை தன் தேவைகளை நிறைவேற்ற வேண்டும் என்று கேட்டிருக்க முடியும். அதற்கான அதிகாரம் பவுலுக்கு இருந்தது. அத்தோடு, அதற்கான வேத போதனைகளும் இருந்தன. இருந்தாலும் பண விஷயத்தில் தன்னையும் தன்னைச் சார்ந்த ஊழியக்காரர்களையும் எவரும் தவறாகக் கருதிவிடக் கூடாது என்பதற்காகவும், உழைப்பதற்கு எவருமே தயங்கக் கூடாது என்பதை ஆத்துமாக்கள் புரிந்துகொள்ள வேண்டுமென்தற்காகவும், அதாவது அவர்கள் பின்பற்றும்படியான உதாரண புருஷர்களாக தாங்கள் இருக்க வேண்டுமென்பதற்காகவும் பவுலும், அவரைச் சார்ந்தவர்களும் வேலை செய்து சாப்பிட்டார்கள். இதுவல்லவா போதக ஊழியத்துக்கு இலக்கணம்! இதை இன்று எங்கே நாம் பார்க்கிறோம். வேதம் சொல்லுவது ஒன்று; ஊழியக்காரர்கள் என்ற பெயரில் நம்மத்தியில் இன்று நடந்து வருவது இன்னொன்று. பவுல் இங்கே 'வேலை' என்று விளக்குவது 'ஊழியப் பணியை' அல்ல; தனக்கு வருமானத்தைத் தரக்கூடிய, தான் கைகளைப் பயன்படுத்தி செய்த உழைப்பையே அவர் வேலை என்று விளக்குகிறார். இதற்கு மேலும் வேலை செய்வதை அவமானமாய்க் கருதி வாழும் சோம்பேரிப் போதகர்களுக்கும், ஊழியக்காரர்களுக்கும் நாம் புத்தி சொல்ல முடியாது.*

*பவுல் அத்தோடு நிறுத்திவிடவில்லை. 10ம் வசனத்தில் ஒரே போடாக, "ஒருவன் வேலை செய்ய மனதில்லாதிருந்தால் அவன் சாப்பிடவும் கூடாதென்று நாங்கள் உங்களிடத்தில் இருந்தபோது உங்களுக்குக் கட்டளையிட்டோமே" என்கிறார். தெசலோனிக்கேய சபையில் சிலர் வேலை செய்ய மனமில்லாமல் இருந்திருக்கிறார்கள் (11ம் வசனம்). அவர்கள் நேரத்தை வீணடித்து ஒழுங்கில்லாமல் திரிந்திருக்கிறார்கள். பவுல் அபபடிப்பட்டவர்கள் திருந்தாவிட்டால் அவர்களோடு சேராதீர்கள் என்று 14ம் வசனத்தில் சொல்லுகிறார். அப்படிப்பட்டவர்களைத் திருத்தும்படி 15ம் வசனத்தில் சொல்லுகிறார். விசுவாசிகள் எல்லோரும் தங்களையும், குடும்பத்தையும் காப்பாற்ற ஒரு நல்ல வேலையைத் தேடி உழைத்து வாழ வேண்டியது அவசியம். அப்படிச் செய்யாதவர்கள் விசுவாசிகளாக இருக்க முடியாது. நம்மில் எவருமே சோம்பேரிகளாக இருக்கக்கூடாது. உழைக்காமல் இருக்கிற சோம்பேரி எப்பொழுதுமே வீண் வேலைகளில் ஈடுபடுவான். அவன் வாழ்க்கையில் ஒழுங்கு இருக்காது. பவுல் இரண்டு முறை இந்தப் பகுதியில் 'ஒழுங்கு' என்ற வார்த்தையை 7ம் வசனத்திலும், 11ம் வசனத்திலும் பயன்படுத்தியிருக்கிறார். உழைத்துச் சாப்பிடாதவன் வாழ்க்கையில் ஒரு போதும் ஒழுங்குக்கு இடமிருக்காது. ஒழுங்கு என்பதை ஆங்கிலத்தில்* Disciplined life *என்று சொல்லுவோம். வேலையும், உழைப்பும் நமக்கு வருமானத்தை மட்டும் தராமல் வாழ்க்கையில் ஒழுங்கை வளர்த்துக்கொள்ள உதவும். நேரத்துக்கு தூங்குவதும், நேரத்துக்கு எழுவதும், வேலைக்குப் போவதும், வேலை நேரத்தில் வேலையை மட்டும் செய்வதுமாக அநேக ஒழுங்கை வாழ்க்கையில் கற்றுக்கொள்கிறோம். வேலை செய்ய எவராவது தயங்கினால் அவர்களுக்கு ஒழுங்காயிருக்க விருப்பமில்லை என்றுதான் அர்த்தம்.*

*சபையில் சம்பளம் வாங்கிக்கொண்டு வாரத்தில் ஐந்து நாட்களையும் ஊழியம் என்ற பெயரில் எதையோ செய்து ஒப்பேத்திவிட்டு ஒருவருக்கும் புரியாத பிரசங்கங்களைச் சனிக்கிழமை இரவு தயாரித்து ஓய்வு நாளில் உளறித்தள்ளிவிட்டுக் காலத்தைப போக்கிக் கொண்டிருக்கும் அநேக போலிப் பிரசங்கிகளை பவுல் இந்தப் பகுதியின் மூலம் கடுமையாக சாடு கிறர். அப்படிப்பட்டவர்களை சபை ஒழுங்கு நடவடிக்கை எடுத்துத் திருத்த வேண்டுமென்கிறார். ஒழுங்கில்லாத விசுவாசிக்கு மட்டுமல்ல ஒழுங்கு நடவடிக்கை, ஒழுங்கில்லாமல் நடக்கும் போதகர்களுக்குந்தான்.*

*இதுவரை உழைப்பின் அவசியத்தையும் வேதம் அதுபற்றி என்ன சொல்லுகிறது என்பதையும் விபரமாகப் பார்த்திருக்கிறோம். இதிலிருந்து நாம் படிக்க வேண்டிய பாடங்கள் என்ன என்பதை இனிப் பார்ப்போம்,*

*1. உழைக்காமலிருப்பது மனிதத் தன்மையையே இழந்ததற்கு ஒப்பானதாகும். (பிரசங்கி 3:13; 5:18-20; நீதி 14:23). - கர்த்தர் தான் படைத்த மனிதனை உழைப்பவனாக, உழைக்கும் நோக்கத்திற்காகப் படைத்திருப்பதால் அதைச் செய்யாதவன் மனிதனாகவே இருக்க முடியாது. ஒருவன் உண்மையில் மனிதன் என்றால் அவன் உழைப்பை உயர்வாகக் கருதுபவனாக இருக்க வேண்டும்.*

*2. உழைப்புக்கேற்ற ஊதியம் தரப்பட வேண்டும்; ஆனால் ஊதியத்திற்காக மட்டும் உழைக்கக்கூடாது. - உழைப்பின் அருமை தெரியாதவர்கள்தான் உழைப்பது வருமானத்துக்காக மட்டும் என்று எண்ணுவார்கள். பணத்துக் காக மட்டும் உழைப்பவர்கள் மனிதர்களே அல்ல. நாம் உழைப்பதற்காகவே படைக்கப்பட்டவர்கள் என்ற எண்ணம் நமக்கு இருக்க வேண்டும். பணம் கிடைக்கிறதோ இல்லையோ எந்த வேலையையும் நேர்மையுடன் கர்த்தருக்காக செய்ய வேண்டியது நமது கடமை. அதையே கர்த்தர் நம்மிடம் எதிர்பார்க்கிறார்.*

*3. உழைத்த ஊதியத்திலேயே நாமும் நம் குடும்பமும் வாழ வேண்டும். - நாம் சரீரத்தைப் பயன்படுத்தி உழைத்த ஊதியத்திலேயே குடும்பம் நடத்தப் பழக வேண்டும். அதையே நம் குழந்தைகளும் பின்பற்ற அவர்களுக்கு உதவ வேண்டும். இலகுவாகவும், உழைக்காமலும் கிடைக்கும் பணம் நல்லதல்ல. அவ்வாறு வரும் வருமானமும் நன்மைக்கானதல்ல. நம் உழைப்பின் மூலம் கிடைத்தவையே நமக்குச் சொந்தமானவை.*

*4. உழைக்கத் தயங்குகிறவர்கள் ஊழியத்திற்கு தகுதியற்றவர்கள். - உழைக் காதவன் உணவருந்தத் தகுதியில்லாதவன் என்று பவுல் கூறியிருக்கிறார். உழைக்க மறுக்கிறவனும், சரியாக உழைக்காதவனும் ஊதியம் பெறத் தகுதியற்றவன். போதகர்களைப் பற்றி புவுல் எழுதுகிறபோது நன்றாகப் படித்து உழைத்துப் பிரசங்கித்து, ஆத்துமாக்களைக் கர்த்தரைப் போல கவனிக்கிறவர்களுக்கே இரு மடங்கு பலன் கொடுக்க வேண்டும் என்று எழுதுகிறார். இதிலிருந்து ஊழியத்திலும்கூட நன்றாக கர்த்தரின் மகிமைக்காக உழைக்கிறவர்களையே நாம் மதிக்க வேண்டும் என்பது தெரிகிறது.*

*5. உழைப்பில்லாமல் ஊழியம் உயராது; ஊதியத்தை நம்பி ஊழியம் செய்யக்கூடாது. - உழைப்பில்லாத ஊழியம் இல்லை. சரியான உழைப்பில் லாமல் எந்த ஊழியமும் உயரமுடியாது. இரவும் பகலும் கண்ணிரோடு உழைத்திருக்கிறார் பவுல் (அப்போஸ். 20). அப்போஸ்தலர்கள் அனைவரும் அவ்வாறு உழைத்தவர்கள்தான். அவ்வாறு உழைப்பது அவசியமாக இருப்பது மட்டுமல்லாமல் ஊதியத்தை அடிப்படையாக வைத்து நாம் எந்த ஊழியத்தையும் செய்யக்கூடாது. அப்படிச் செய்கிற மனிதன் ஊழியத்துக்கே தகுதியில்லாதவன். பணத்தின் பக்கமே ஊழியக்காரர்கள் போகக்கூடாது என்று வேதம் போதிக்கிறது. அதனால்தான் திருச்சபை களில் பண விஷயத்தைப் பார்க்க உதவிக்காரர்களைக் கர்த்தர் நியமிக்கும் படி வேதத்தில் விளக்கியிருக்கிறார். பண இச்சையுள்ளவன் போதக ஊழியத்துக்கு தகுதியற்றவன் என்பதை 1 தீமோத்தேயு 3ம், தீத்தும் போதகர் களுக்கான இலக்கணத்தை விவரிக்கும் பகுதியில் விளக்கமாகக் கூறுகின்றன. பணத்திற்காக ஊழியம் செய்கிறவன் பிசாசின் ஊழியன். (1 தீமோ. 5:8, 2 தெச. 3:10; 2 தெச. 3:7-12; நீதி 21:25; ரோமர் 12:1-2).*


# சீர்திருத்த கிறிஸ்தவ சத்தியங்களை விளக்கும் நூல்கள்

- சீர்திருத்த விசுவாசம்
- திருச்சபை சீர்திருத்தம்
- பரிசுத்த வேதாகமம்
- தீர்மானத்தின் மூலம் மறுபிறப்பு (ஜேம்ஸ் அடம்ஸ்)
- கிறிஸ்தவன் யார் (அல்பர்ட். என். மார்டின்)
- ஏன் பிரசங்கம்!
- சுவிசேஷக் கோட்பாடும்,
  புதிய சுவிசேஷக் கோட்பாடும்,
- ஆதிசபையின் அற்புத வரங்கள் (ஜனவரி 2006)
- வில்லியம் கேரி (ஜனவரி 2006)
- பத்துக் கட்டளைகள் (ஜூன் 2006)
- சார்ள்ஸ் ஹெடன் ஸ்பர்ஜன் (ஜூன் 2006)

இந்நூல்களைப் பெற்றுக்கொள்ள கீழ்வரும் முகவரிகளுக்கு எழுதுங்கள்.

இவாஞ்சேலிக்கள் பாப்திஸ்து சபை
57/2 டி. பி. கே மெயின் வீதி பைகாரா, மதுரை 625004, தமிழ்நாடு

கிருபை இலக்கிய சேவை
19. இராஜசிங்க வீதி, கொழும்பு 6
ஸ்ரீ லங்கா

# என்ன தொழில் செய்வது, எப்படிச் செய்வது?

உழைப்பதன் அவசியத்தைப் பற்றி இந்த இதழில் இதற்கு முந்திய ஆக்கத்தில் பார்த்திருக்கிறோம். ஆனால், நாம் எப்படிப்பட்ட தொழிலைச் செய்ய வேண்டும்? அதை எப்படித் தேடிக்கொள் வது? அதை எப்படிச் செய்வது? என்றெல்லாம் என்னைப் பல வாலிபர்கள் கேட்டிருக்கிறார்கள். வாலிபர்கள் மட்டுமல்லாமல் அந்த வயதை மீறியவர்களுக்கும் இது பற்றி ஆலோசனைகள் கொடுத்திருக்கிறேன். நம்மினத்தில் பெரியவர்கள் பெரும்பாலும் நாம் இதைச் செய்ய வேண்டும், அதைச் செய்ய வேண்டும் என்று எதிர்பார்ப்பார்களே தவிர எதையும் சொல்லிக் கொடுத்து வளர்ப்பது குறைவு. காரணம் கேட்டால், "எவன் சொல்லிக் கொடுத்து நான் படித்தேன், அதுபோல் நீயே எதையும் செய்யத் தெரிந்து கொள்ள வேண்டும்" என்று இடக்காக பதில் சொல்லுவார்கள். இதற்கெல்லாம் காரணம், அவர்களை வளர்த்தவர்கள் அவர்களுக்கு எதை யும் சொல்லிக் கொடுத்து வளர்க்காததுதான். இதுதான் நம்மினத்தில் வளர்ப்பு முறை. இதையே சபைகளிலும் பார்க்கிறோம். எந்தப் போதகருமே எவருக்கும் எதையும் சொல்லிக் கொடுத்து வழிகாட்டி வளர்ப்பதில்லை; காரணம் அவர்கள் எவரிடத்திலும் இருந்து எதையும் கற்றுக்கொள்ளாதது தான். இக்காரணங்களால் வாலிபர்களுக்கு நம்மினத்தில் தலைவலி அதிகம்தான். இனி தொழில் சம்பந்தமாக நாம் பின்பற்ற வேண்டிய சில வேத விதிமுறை களைப் பார்ப்போம். இதுபற்றிக்கூட வேதம் விளக்குகிறதா என்று ஆச்சரியப்படாதீர்கள். வேதம் நாம் வாழ வேண்டிய வழிமுறைகள் பற்றி சகல ஆலோசனைகளையும் தரும் கர்த்தரின் வார்த்தை.

**1. தொழிலுக்காக நம்மைத் தயார் செய்து கொள்ளவேண்டும்.**

எந்தத் தொழிலைச் செய்ய விரும்பினாலும் அந்தத் தொழிலுக்கான தகுதிகளை நாம் அடையாமல் தொழில் கிடைக்கும் என்று நினைக்கக் கூடாது. ஒன்றுக்காக ஆசைப்படுவதில் தப்பில்லை; ஆனால், அதை அடையும் தகுதியும் நமக்கிருக்க வேண்டும். ஊர்க்குருவி பருந்தாக முடி யாது. தகுதியில்லாதவர்களுக்கு எவரும் எந்த வேலையையும் கொடுக்க மாட்டார்கள். தகுதியில்லாதவர்கள் நிரம்பி வழியும் ஒரே தொழில் இன்றை க்கு ஊழியம்தான். ஏனென்றால், ஊழியக்காரரின் தகுதிகளை ஆராய்ந்து பார்த்து அனுமதிக்கும் எந்த அமைப்பும் இல்லை. கர்த்தர் அப்படி ஓர் அமைப்பை ஏற்படுத்தி வைத்திருந்தாலும் அதற்கு மதிப்புக்கொடுத்து எதை யும் செய்கிறவர்கள் நம்மத்தியில் குறைவு.

வேலைக்கான தகுதிகளைப் பெற்றுக்கொள்ள எவரும் நன்றாகப் படிப்பது அவசியம். படிக்காமல் ஒரு நல்ல வேலையும் கிடைக்காது. படிப்பு

எல்லாவற்றுக்கும் அவசியம். படிக்க வேண்டும் என்று நான் சொல்லுவது கல்லூரிப் படிப்பை மட்டுமல்ல. சூளை வைத்து செங்கல் செய்யத் தெரிந்து கொள்ளக்கூட, அதை எப்படிச் செய்வது என்பதைப் படித்துத்தான் தெரிந்துகொள்ள வேண்டும். அதை எவரிடமாவது கற்றுக்கொள்ள வேண்டும். ஆகவே, கற்றுக்கொள்ளுகிற மனப்பான்மை எல்லோருக்கும் தேவை. அது இல்லாமல் ஒரு தொழிலையும் செய்ய முடியாது. எதையும் கற்றுக் கொள்ளுகிறபோது பொறுமையாக அதைக் கற்றுக்கொள்ள வேண்டும். பொறுமையில்லாமல் கற்றுக்கொள்ள முடியாது.

கல்லூரிக்கும்போகும் வசதியுள்ளவர்கள் கல்லூரிப்படிப்பில் கவனமாக இருக்க வேண்டும். எந்தப் படிப்புப் படித்தால் எந்தத் தொழிலைச் செய்யலாம் என்றெல்லாம் ஆராய்ந்து பார்த்து, தெரிவுசெய்த படிப்பை வெற்றிகரமாக நிறைவேற்றப் பார்க்க வேண்டும். படிப்பில் கவனத்தைச் செலுத்தாமல் மூன்று வருட டிகிரியை ஆறுவருசத்தில் முடிக்கப் பார்ப்பது ஆண் மகனுக்கு அழகல்ல. இதையே சரியாக முடிக்கத் தெரியாமல் எந்த வேலையைப் பின்னால் உருப்படியாகச் செய்ய முடியும்? படிக்கின்ற படிப்பை நல்ல மார்க்குகள் வாங்கி நிறைவேற்ற வேண்டும். வெறும் பாஸ் மார்க் வாங்குவது அக்கறையோடு நாம் படிக்கவில்லை என்பதற்குத்தான் அடையாளம். எடுத்துக்கொண்ட படிப்பை நல்ல மார்க் வாங்கி முடித்தால் எந்த வேலைக்கும் அப்ளிகேஷன் போடமுடியும்.

படிப்பில் நல்ல மார்க் வாங்குவது மட்டுமல்லாமல் நாம் செய்யப்போகிற தொழிலுக்கான சகல தகுதிகளையும் வளர்த்துக்கொள்ள வேண்டும். நமது சரீர, மனவளர்ச்சியும் முக்கியம். பொது அறிவும் அவசியம். வாழ்க்கையில் ஒழுங்கைக் கற்றுக்கொண்டு ஒழுங்கைக் கடைப்பிடிக்கவும் வேண்டும். முடிந்தால் படிப்பு முடிந்த கையோடு செய்ய விரும்பும் தொழிலுக்கான செய்முறைப் பயிற்சியையும் (Practical training) முடிக்கப் பார்க்கலாம். இதெல்லாம் நல்ல தொழில்களைத் தேடிக்கொள்ள அவசியம்.

**2. விசுவாசிகள் கர்த்தருடைய வேதம் அனுமதிக்காத தொழில்களில் ஈடுபடக் கூடாது.**

கர்த்தருடைய குணாதிசயங்கள் வெறுக்கும் தொழில்களையும், பத்துக் கட்டளைகளுக்கு முரணான தொழில்களையும் செய்யக்கூடாது. சூதுவாதுள்ள தொழில்களைத் தவிர்த்துக்கொள்ள வேண்டும். நமது விசுவாசத்திற்கு சாட்சி இல்லாத எந்தத் தொழில்களிலும் ஈடுபடக்கூடாது. ‘பாரில்’ (Bar) வேலை செய்வது நல்ல சாட்சியாக இருப்பதற்குத் தடையாகும். இதையெல்லாம் முன்யோசனையோடு சிந்தித்து ஆராய்ந்து வேலைகளைச் தேடிக்கொள்ள வேண்டும். உலகத்தில் அவிசுவாசிகள் மத்தியில் வேலை செய்வதையும், அவர்களிடம் வேலைக்கமர்வதையும் தவிர்க்க முடியாது. அதற்காக, அவர்கள் வழியில் போக வேண்டிய அவசியமில்லை. தானியேல் அவிசுவாசிகள் மத்தியில் வாழ்ந்து பல போராட்டங்களுக்கிடையில் அவர்களுக்குக் கீழ் வேலை செய்து கர்த்தரை மகிமைப்படுத்தியிருக்கிறான். அதேபோல்தான் அவனுடைய நண்பர்களும் வாழ்ந்து காட்டினார்கள். நெகேமியாவும் அவனோடிருந்தவர்களும் அந்த முறையில் நற்சாட்சியுடன்

*வாழ்ந்து தேசத்து ராஜாவின் அங்கீகரிப்பை அடையவில்லையா? அத்தோடு விசுவாசிகள் ஓய்வு நாளில் வேலை செய்வதையும் தவிர்த்துக் கொள்ள வேண்டும். மருத்துவத் தொழில், அத்தியாவசிய தொழில்களில் ஈடுபட்டிருப்பவர்கள் தவிர ஏனையோர் ஓய்வு நாளில் வேலைக்குப் போய் ஆத்மீக வாழ்க்கையை இழந்துவிடக்கூடாது. பணம் வரும் போகும்; ஆத்மீக வாழ்க்கையை இழப்பதற்கு எடுக்கும் நடவடிக்கைகள் நம்மைப் பேராபத்தில் கொண்டுபோய்விட்டுவிடும். குடும்பத்தைவிட்டு விலகிப் பலமாதங்கள், வருடங்களாகப் பிரிந்திருக்க வைக்கும் தொழில்களில் ஈடுபடுவதும் தவறு. குடும்ப வாழ்க்கையை அழித்துக் கொண்டு பணம் பண்ணும்படிக் கர்த்தர் நம்மைக் கேட்கவில்லை. பணத்தையும், வாழ்க்கை வசதிகளையும் அதிகரித்துக்கொள்வதற்காக இப்படிக் குடும்பத்தை விட்டுப்பிரிந்து வாழ்ந்து வேலை செய்து மனைவியையும், பிள்ளைகளையும் இழந்தவர்கள் அநேகர். விசுவாசிகள் இத்தகைய முட்டாள்த்தனத்தில் ஈடுபடக்கூடாது. சில போலிப் போதகர்கள் இத்தகைய நடவடிக்கைகளை ஆதரிக்கிறார்கள். ஏனெனில், பணத்திற்காக ஒருவன் குடும்பத்தைவிட்டு விலகிப்போய் சம்பாதித்து ஊழியத்துக்கு அதிகப் பணம் கொடுப்பான் என்ற நப்பாசையில்தான். இது கொடூரமான செயல்.*

**3. எல்லா நற்தொழில்களும், ஊழியம் உட்பட கர்த்தருக்கு முன் பரிசுத்தமானவை.**

*சிலர் ஊழியத்தைப் பரிசுத்தமானதாகவும் அதன் மூலம் மட்டும்தான் கர்த்தரை மகிமைப்படுத்த முடியும் என்று தவறாக எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். இப்படி ஒரு மாயையை தமிழினத்துக் கிறிஸ்தவத்தில் பார்க்கலாம். இதனால்தான் அநேக ஊழியக்காரர்கள் தங்களுடைய குடும்பத்தில் ஒருவரையாவது ஊழியத்துக்கு அர்ப்பணிக்கும் செயலைச் செய்கிறார்கள். முக்கியமாக, தங்களுடைய மகனை அதற்குப் பிரதிஷ்டை செய்துவிடுவார்கள். இப்படித் தகப்பன் வழி ஊழியம் செய்யும் அநேக மகன்களைத் தமிழினத்து ஊழியப்பணியில் பார்க்க முடியும். பழைய ஏற்பாட்டை உதாரணம் காட்டி இந்தப் பணி நடந்து வருகிறது. ஆனால், திருச்சபை ஊழியத்தைப் பற்றி அதிக விளக்கங் கொடுக்கும் புதிய ஏற்பாட்டில் இந்த வழிமுறைக்கு இடமில்லை. எந்த ஊழியக்காரனாக இருந்தாலும் 1 தீமோத்தேயு 3ம், தீத்தும் எதிர்பார்க்கின்ற அதற்கான தகுதிகளைக் கொண்டிருந்து, திருச்சபை அங்கத்தவர்களால் முறையாக ஆராயப்பட்டு, திருச்சபையால் நியமிக்கப்பட்டே ஊழியம் செய்யவேண்டுமென்பது வேத போதனை; கர்த்தரின் நியதி. கர்த்தரின் வார்த்தையை உடப்பில் போட்டுவிட்டு இன்று குடும்ப வாரிசுகளை உருவாக்கிக் கொண்டிருக்கிறது தமிழினத்து கிறிஸ்தவம்.*

*வேதம் எல்லா நற்தொழில்களையும் நன்மையானதாகப் பார்க்கிறது. செய்யுந் தொழில் எதுவாக இருந்தாலும் அதன் மூலம் நாம் கர்த்தரை மகிமைப்படுத்த வேண்டும். ஒரு வைத்தியனோ, கணக்காளனோ, என்ஜினியரோ அந்தத் தொழில் மூலம் கர்த்தரை மகிமைப்படுத்த முடியும். ஊழியம் இதையெல்லாம் விட விசேஷமானது என்று நினைப்பது தவறு. ஊழியம் அதற்கு அழைக்கப்பட்டவர்களுக்கு மட்டுந்தான். அழைக்கப்படாதவர்கள் அதைச் செய்தால் அது தவறானது. அவர்கள் அதில் நிலைத்*

*திருக்கவும் முடியாது. அழைக்கப்பட்ட இடத்தில் இருக்க வேண்டும் என்கிறது வேதம். (1 கொரிந்தியர் 7:24). நெகேமியா பானபாத்திரக்காரனாக இருந்தான். இயேசு கிறிஸ்து தச்சு வேலை செய்தார். தாவீது முதலில் மேய்ப்பனாகவும், பின்பு போர்வீரனாகவும் இருந்து அதன் பிறகே அரசனானான். ஆபிரகாம் மந்தைகளின் உரிமையாளனாக இருந்தான். யோசேப்பு அரச ஊழியனாக இருந்தான். யோசுவா இராணுவத் தளபதியாக இருந்திருக்கிறான். ரூத் இல்லத்தரசியாக இருந்தாள். ஆக்கில்லாவும், பிரிஸ்கில்லாவும் கூடாரத் தொழிலில் ஈடுபட்டிருந்தார்கள். இதிலிருந்து இந்தத் தேவ மனிதர்கள் அனைவருமே வாழ்க்கையில் ஏதோவொரு தொழிலைக் கர்த்தருக்காகச் செய்திருக்கிறார்கள் என்பதை அறிந்துகொள்ளுகிறோம். அந்தத் தொழில்களை அவர்கள் மதிப்பற்றதாகவும், உலகத்தைச் சேர்ந்ததாகவும் எண்ணவில்லை. அந்தத் தொழில்களைச் செய்து அவர்கள் கர்த்தரை மகிமைப்படுத்தியிருக்கிறார்கள். இயேசு கிறிஸ்து ஊழியப் பணியை ஆரம்பித்த பிறகும் சமுதாயத்தில் ஒரு தொழிலைச் செய்து வாழ்ந்திருந்திருக்கிறார். கூடாரம் செய்யும் தொழில் தெரிந்திருந்த பவுல் அப்போஸ்தலன் அந்தத் தொழிலைத் தரக்குறைவானதாக எண்ணாமல் திருச்சபைக்கு தன்னால் பாரமேற்படக்கூடாதென்று அந்தத் தொழிலைச் செய்து தன் தேவைகளை நிறைவேற்றிக் கொண்டார் என்று புதிய ஏற்பாடு விளக்குகிறது. இதையெல்லாம் விட்டுவிட்டு ஊழியம் செய்வது உழக்கை பிடிப்பதைவிட மேல் என்று நினைப்பதைப் போன்ற முட்டாள்த்தனம் வேறொன்றில்லை.*

**4. தொழில்கள் பற்றிய விபரங்களைச் சேகரித்துக் கொண்டு முயற்சி திருவினையாக்கும் என்பதை மனதில் வைத்து கர்த்தரில் தங்கியிருந்து தொழிலை நாட வேண்டும்.**

*இறுதியாக, தொழிலுக்கான தகுதிகளை அடைந்தபிறகு செய்யவிரும்புகிற தொழில் பற்றிய விபரங்களைச் சேகரித்துக் கொண்டு கர்த்தரில் தங்கியிருந்து அத்தொழிலைத் தேட ஆரம்பிக்க வேண்டும். பல கம்பேனிகளுக்கு விண்ணப்பங்களை அனுப்பி இன்டர்வியூக்குப் போய் தொழிலில் சேர வேண்டும். நம்முடைய தகுதிகளை விளக்கும் ஒரு* Resume *ஐத் தயாரித்து வைத்துக்கொள்வது அவசியம். அது காலத்துக்கு உகந்தாக அமைந்திருக்க வேண்டும். அது வேலை கொடுப்பவர்களின் ஆர்வத்தைத் தூண்டுவதாகவும், அவர்கள் அதைப் பார்த்துவிட்டு நம்மை இன்டர்வியூவுக்கு அழைக்கும்படியானதாகவும் இருக்க வேண்டும். இன்றைக்கு உலகம் எங்கோ போய்க்கொண்டிருக்கிறது. தொழிலகங்கள் தகுதியுள்ளவர்களையும், உழைக்கக்கூடியவர்களை மட்டும் தேடாமல் அதற்கு மேலும் திறமைகளையும், உத்திகளையும் கொண்டவர்களை நாடுகின்றன. திறமையற்றவர்கள் இந்த நவீன உலகத்தில் பின்தங்கிவிடுவார்கள். இதற்காக நாம் பொய்சொல்லத் தேவையில்லை, நாடகமாடத் தேவையில்லை, இல்லாததை இருப்பதாகக் காட்டிக் கொள்ளத் தேவையில்லை. நேர்மையாகவே எப்போதும் நடந்து கொள்ள வேண்டும்.*

*வசதியுள்ளவர்களால் மட்டுமே இதெல்லாம் முடியும் என்ற தவறான நம்பிக்கையும் பலரிடம் இருக்கிறது. அதெல்லாம் கஷ்டப்பட்டு படித்து*

உயரத் தயங்குகிறவர்களின் சாக்குப்போக்கு. வசதியில்லாத பலர் வாழ்க்கையில் உயர்ந்திருப்பதை உலகம் நமக்கு அன்றாடம் சுட்டிக்காட்டி வருகின்றது. வேதத்தில் அதற்கான பல உதாரணங்களைப் பார்க்கலாம். இயேசு கிறிஸ்துவின் அப்போஸ்தலர்களில் பலர் வாழ்க்கையில் வசதியில் லாதவர்களாகத்தான் ஆரம்பத்தில் இருந்திருக்கிறார்கள். அப்போஸ்தலர் களாக வந்தபிறகும் அவர்களுடைய வசதிகள் அதிகரித்துவிடவில்லை. ஆனால், அவர்கள் அப்போஸ்தலர்களாக இயேசு கிறிஸ்துவால் நியமிக் கப்படுவதற்கு அவர்களுடைய வசதிக்குறைவு தடையாக இருக்கவில்லை. பேதுரு மீன் பிடிக்கும் தொழிலைச் செய்து வந்தார். அவர் பின்னால் பெரும் பிரசங்கியாக மாற முடிந்தது. பேதுரு ஆரம்பத்தில் முதிர்ச்சி யுடையவராக இருக்கவில்லை. ஆனால், அவருடைய விடாமுயற்சியும், தன்னைத் திருத்திப் பக்குவப்படுத்திக்கொள்ளும் தன்மையும் அவருக்கு கைகொடுத்தன; வாழ்க்கையில் அவரை உயர்த்தின. திறமையுள்ளவன் எங்கும், எப்போதும் சிறக்கலாம்.

## தொழிலில் அக்கறை

இதுவரை ஒரு தொழிலைத் தேடிக்கொள்ள என்னென்ன செய்ய வேண்டும் என்பதையெல்லாம் விளக்கினோம். இனி ஒரு தொழிலைத் தேடிக்கொண்ட பிறகு அந்தத் தொழிலை எப்படிச் செய்ய வேண்டும் என்பதற்கான சில ஆலோசனைகளைப் பார்ப்போம்.

1. **செய்யும் தொழிலில் அக்கறை காட்டி கடுமையாக உழைக்க வேண்டும்.** - எந்தத் தொழிலாக இருந்தாலும் அதில் இணைந்துகொண்ட பிறகு அதில் அதிக அக்கறை காட்டி நல்ல முறையில் கடுமையாக உழைக்க வேண்டும். வேலை கொடுத்தவர்களுக்காக உழைக்காமல் கர்த்தருக்காக உழைக்க வேண்டும். அதற்காக கர்த்தர் நம்மிடம் கணக்குக் கேட்பார். கர்த்தருடைய வார்த்தையை மீறாமலும், அதேநேரம் தொழிலைத் தந்திருப்பவர்களின் முகங்கோணாமலும் வேலை செய்ய வேண்டும். சம்பளத்துக்காக மட்டும் வேலை செய்யாமல் உழைப்பைக் கர்த்தர் எதிர்பார்க்கிறார் என்ற எண்ணத் தோடு வேலையை சிறப்பாகச் செய்ய வேண்டும். விசுவாசிகளில் அநேகர் இன்று அவிசுவாசிகள் போல் நடந்து அக்கறையில்லாமல் வேலை செய்கி றார்கள். அவிசுவாசிகள்கூட இன்றைக்கு வேலை செய்வதில் நமக்கு உதார ணமாக இருந்துவிடுகிறார்கள்.

தொழிலில் அக்கறை காட்டுவது என்பது அநேகருக்கு புரியாததொன்றாக இருக்கிறது. ஒழுங்கில்லாமல் வாழ்க்கையில் வளர்ந்ததனால் ஏற்பட்ட பாதிப்பு அது. அதை விசுவாசிகள் நிவர்த்தி செய்துகொள்ள வேண்டும். தங்களுக்கென்று ஓர் ஒழுங்கை ஏற்படுத்திக் கொண்டு சகல வேலைகளை யும் முறையோடு செய்வது அவசியம். வீணாக நேரத்தை செலவழிக்கிறவர் கள் நம்மத்தியில் இன்று அதிகம். வெறும்பேச்சுப் பேசியும், அரட்டை அடித்தும் அநேகர் நேரத்தை வீணாக்குகிறார்கள். இதெல்லாம் நல்ல உழைப்புக்கு அடையாளமில்லை. கடுமையாக நேர்மையோடு உழைப்ப தானால் இதையெல்லாம் விட்டுவிட வேண்டும். செய்யும் தொழிலில் சிரத்தை காட்ட வேண்டும். அதை அலட்சியமாக எண்ணக்கூடாது. நம்மை

*நம்பி வேலைக்கு எடுத்துக்கொண்டவர்கள் நம்பக்கத்தில் இருந்தாலும் இல்லாவிட்டாலும் கர்த்தருக்கென்று அந்த வேலையை சிரத்தையோடு செய்து முடிக்க வேண்டும்.*

*2.* **காலந்தவறாமல் தொழிலில் ஈடுபட்டு காலநேரத்துடன் தொழில்களை நிறைவு செய்ய வேண்டும். -** *செய்ய எடுத்துக்கொண்ட பணியை எப்படிச் செய்வது என்று சிந்தித்து அதை செய்து முடிப்பதற்கான ஒரு திட்டத்தை வகுத்துக் கொண்டு கொடுக்கப்பட்ட காலத்தில் அதை நிறைவேற்றி முடிப்பது அவசியம். இப்படித்தான் நெகேமியா எருசலேம் மதில்களைக் கட்டி முடித்தான். இப்படித்தான் சாலமோன் ஆலயத்தைக் கட்டி முடித்தான். இந்த முறையில்தான் பவுல் திருச்சபை ஊழியத்தைச் செய்திருக்கிறார். திட்டமிடாமல் எந்தப் பணியையும் செய்ய முடியாது. திட்டமிட்டுப் பணி செய்ய வேண்டுமானால் நாம் நேரத்திற்கு வாழ்க்கையில் மதிப்புக் கொடுக்க வேண்டும். நம்மவர்கள் மத்தியில் நேரத்தை வீணாக்குவது என்பது சாதாரணமாக நடந்துவருகிற ஒன்று. நம் நேரத்தையும் வீணாக்கி அடுத்தவர்களின் நேரத்தையும் வீணாக்குகிறோம். ஆபீசில் ஒரு மணி நேரத்தில் முடிக்கப்பட வேண்டிய கோப்பை இரண்டு நாளெடுத்து முடிப்பது சகஜமாக நடந்து வருகிறது. விசுவாசியிடம் இதெல்லாம் இருக்கக் கூடாது. நேரத்திற்கு நாம் மதிப்புக் கொடுக்கப் பழக வேண்டும். நேரம் கர்த்தருக்கு சொந்தமானது. நேரத்திற்கு மதிப்புக் கொடுக்கத் தெரிந்தவர்கள்தான் திட்டமிட்டு காரியமாற்ற முடியும். ஒவ்வொருவரும் நாம் எவ்வளவு நேரத்தை வீணாக்குகிறோம் என்பதைக் கணக்குப் பார்த்து அதைத் திருத்திக் கொள்ள வேண்டும். எடுத்துக் கொண்ட வேலைகளைக் கொடுக்கப்பட்ட நேரத்துக்குள் செய்து முடிக்க வேண்டும்.*

*ஊழியத்திற்கும் இதே வழிமுறைதான். அநேக போதகர்கள் வாழ்க்கையில் இன்று நேரத்திற்கு மதிப்புக்கொடுப்பதில்லை. நேரத்தைப் பயன்படுத்தி உழைப்பதில்லை. வாழ்க்கையில் இதையெல்லாம் கற்று, பின்பற்றி நடக்காதவர்களே இன்றைக்கு ஊழியத்தில் இருந்து கர்த்தரை அவமதிக்கிறார்கள். செய்கிறேன், நிச்சயம் வருகிறேன், முடித்து விடுகிறேன் என்றெல்லாம் வாக்குக் கொடுத்துவிட்டு நேரத்தை வேறெதிலாவது செலவிட்டுவிட்டு சாக்குப் போக்குச் சொல்லுகிற எத்தனை ஊழியக்காரர்களை நாம் அன்றாடம் பார்த்து வருகிறோம். உதட்டில் சிரிப்பை அள்ளி வாரிவிட்டு அலட்சியமாக நடந்து வருகிற ஊழியர்களால் ஆத்துமாக்களுக்கு ஆபத்து. இன்றைக்கு பிரசங்க ஊழியமும், திருச்சபை ஊழியமும் பாழாகி இருப்பதற்கு இவர்கள்தான் காரணம். ஊழியத்தை நாடி வரும் வாலிபர்கள் முதலில் தங்களுடைய வாழ்க்கையில் நேரத்தைப் பயன்படுத்தி நேர்மையாக நடந்து கொள்ளப் பழக வேண்டும். பரிசுத்த வாழ்க்கைக்கு இதுவும் ஓர் அறிகுறி.*

*3.* **சாட்சியுள்ளவர்களாக தொழில் செய்யும் இடத்தில் நடந்துகொள்ள வேண்டும். -** *தொழில் செய்யுமிடத்தில் நாம் சாட்சியுள்ளவர்களாக நடந்து கொள்ள வேண்டும். சக ஊழியர்களோடு நாம் நடந்துகொள்ளும் முறை நமது விசுவாசத்தின் அடிப்படையில் இருக்க வேண்டும். நமது நடத்தையால் நம்முடைய சாட்சியத்துக்கு எந்தப் பங்கமும் ஏற்படக்கூடாது. தானியேல்*

*தன்னுடைய நடவடிக்கைகளால் புறஜாதியார் மத்தியில் கர்த்தருக்கு மகிமை வரும்படிச் செய்திருக்கிறான். நம்மிடத்தில் இருக்கும் மிகப் பெரிய பலமே நமது விசுவாசம்தான். அதன்படி வேலைத்தளத்தில் நடந்து கொள்வது அவசியம். நாம் வேலை செய்யும் விதத்தையும், நடந்து கொள்ளும் முறையையும் பார்த்துப் புறஜாதியினர் நமது விசுவாசத்தைப் பற்றி அறிந்துகொள்ளும் நிலைமையை நாம் உருவாக்க வேண்டும். நமது விசுவாச நடத்தையே நமது பேச்சைவிட பலமுள்ள சாட்சி.*

**4. கர்த்தருடைய வேதத்துக்கு முரணான விதத்தில் தொழில் செய்யும் இடத்தில் தொழில் சம்பந்தமான விஷயங்களில் நடந்துகொள்ளக்கூடாது. -** *தொழில் செய்யும் இடத்தில் தொழில் சம்பந்தமான எந்த விஷயத்திலும் கர்த்தரின் வேதத்திற்கு முரணாக நடந்துகொள்ளக்கூடாது. இலஞ்சம் வாங்குகிறவர் களும், கொடுக்கிறவர்களும் நம்பக்கத்தில் இருந்தபோதும் அது எந்தவிதத் திலும் நம்மைத் தீண்டிவிடாதபடி பார்த்துக்கொள்ள வேண்டும். அதற்கு நம்ம வாழ்க்கையில் இடங்கொடுக்கக் கூடாது. அது பெரும் அக்கிரமம்; அநியாயம். வேரோடு கிள்ளியெறியப்பட வேண்டிய எயிட்ஸ் வைரஸ். பலருடைய வாழ்க்கையை நிர்மூலமாக்கும் பிசாசு. விசுவாசிகளில் இதன் சாயல்கூடப் படக்கூடாது.*

*அதுமட்டுமல்லாமல், வேலை செய்யும் இடத்தில் இருக்கும் எந்தப் பொருளையும் நம்முடைய சொந்தத் தேவைகளுக்காகப் பயன்படுத்தக் கூடாது. அநேகர் இதுபற்றி சிந்திப்பதேயில்லை. வேலை நேரம், நம் மேசை யில் இருக்கும் பொருள்கள், வேளைத்தளத்தில் இருக்கும் வாகனங்கள், வேலையைச் செய்து முடிப்பதற்காக நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் வசதிகள் எல்லாவற்றையும் நம்முடைய சொந்த நன்மைக்காகப் பயன்படுத் தக் கூடாது. வேலை நேரத்தில் தொலைபேசியில் கண்டவர்களோடும் மணிக்கணக்கில் பேசி நேரத்தை வீணடிக்கக் கூடாது. ஒரு காப்பி குடிப்ப தற்காகக் கொடுக்கப்பட்ட நேரத்தைப் பதினைந்து காப்பி குடிக்கும் நேர அளவுக்கு உயர்த்தி நேரத்தை வீணாக்கக் கூடாது. நம்மினத்தின் பொருளா தார, சமுதாயப் பின்தங்களுக்குக் காரணமே நம்மினத்து மக்கள் அநாவசிய மாக அன்றாடம் வீணாக்குகிற நேரமே. நேரத்தைப் பயன்படுத்தி நாம் உழைக்கத் தீர்மானித்தோமானால் நம்மினம் குறுகிய காலத்தில் துரித முன்னேற்றத்தை அடைந்துவிடும்.*

*இதுவரை நாம் பார்த்தவைக்கும் கர்த்தருக்கும் சம்பந்தமில்லை என்று நினைக்கின்ற பலவீனமான விசுவாசிகள் நம்மத்தியில் இன்று அதிகம். அவர்களுடைய பலவீனம், அவர்கள் வாழ்க்கையில் உயர்வதற்குப் பெருந் தடையாக இருந்துவிடும். ஒழுங்கின் தேவன் நாம் ஒழுங்கற்றவர்களாக வாழ்வதற்காகப் படைக்கவில்லை. ஒழுங்கோடு வாழ்ந்து அவரை நாம் வாழ்க்கையில் மகிமைப்படுத்த வேண்டுமென்பதற்காகவே படைத்திருக் கிறார். அதைச் செய்வதை நாம் வாழ்க்கை இலட்சியமாகக் கொள்ள வேண்டும்.*

# தேடியும் கிடைக்குமா குன்றுமணி

சாக்கடைத் தண்ணீர்;
கூவத்து நீர்;
குட்டையில் தேங்கி நிற்கும்,
கருநிறத்து அழுக்கு நீர்
இத்தனைக்கும் இருக்கு - உறவு
பிரிக்க முடியாதபடி
துர்நாற்றமும், பக்கத்தில்
நெருங்க முடியாதபடி
கண்ணை மூடவைக்கும்
அசிங்கங்களின்
மொத்த வடிவமும்
மட்டுமே சொந்தம்
இம் மூன்றிற்கும்.

அவலட்சனமாய்,
அருவருப்பாய்,
இல்லாததையெல்லாம்
இருப்பதுபோல்
பேசியும், எழுதியும்
பரப்பியும் வரும்
துர்க்குணங்கொண்டோர்
இருதயத்தில் இருப்பது . .
கூவத்து நீரைவிடக்,
குளத்தில் தேங்கி நிற்கும்
சேற்றுத் தண்ணீரைவிடக்
கேவலமான
அசிங்கங்களின் மொத்த
உருவான பாவம்.

நாற்றமிகு பாவத்தில்
நலிந்து மனந்திரும்பாது
நாளும் சாக்கடைத்
தண்ணீர்போல் தேங்கி
ஊருக்கு நல்லவனாய்ப்
பாசாங்கு செய்து
'ஊழியன்' என்ற பெயரில்
வேஷதாரியாய் உலவும்
போலிச் சாக்கடைச்
சேறு நிறைந்த நம்மினத்தில்
தேடியும் கிடைக்குமா
குன்று மணி!

– சுபி

# எண்ணங்கள்!




தொடர்ந்து பத்திரிகையை அனுப்பிக் கொண்டிருப்பதற்காக நன்றி. உங்கள் கருத்துக்களில் சிலவற்றில் எனக்கு முரண்பாடு இருந்தாலும் உங்கள் எழுத்துக்களை அதிகமாய் மதித்துப் பாராட்டுகிறேன். நீங்கள் எழுதிய "கூடில்லா குருவிகள்" ஆக்கத்தைப் பிரதிகள் எடுத்து அநேகருக்கு கொடுத்திருக்கிறேன். இன்றைக்கு தமிழிலே ஏராளமான கிறிஸ்தவ பத்திரிகைகள் வந்துகொண்டு இருக்கின்றன. ஆனால், சத்தியத்துக்காகப் போராடுபவை ஒன்றுகூட இல்லை. "தடியெடுத்தவன் தண்டல்காரன்" என்பதுபோல் இன்றைக்கு பைபிளைக் கையில் தூக்கியவர்களெல்லாம் போதகராகிவிட்டார்கள். இன்றைக்கு சபைகள் ஸ்தாபிப்பது என்பது குடிசைத் தொழிலாகிவிட்டது. தற்காலத்து ஊழியனுக்கு எந்தத் தகுதியும் தேவையில்லாமலிருக்கிறது. எவரும் எதுவேண்டுமானாலும் பேசலாம், எழுதலாம் என்ற நிலை. சமீபத்தில் நீங்கள் அனுப்பிய "திருச்சபை சீர்திருத்தம்" என்ற நூல் மிகவும் பயனுள்ளது. ஆவிக்குரிய உண்மையை நாடுகிற எவரும் வாசித்து உணர வேண்டியது. – ***பாஸ்டர் ஜே. ஆர். பாலசுந்தரம், தமிழ்நாடு***



உங்களுடைய பத்திரிகையை விரும்பி வாசிக்கிறவர்களில் நானும் ஒருவன். ஆனால், கிறிஸ்தவக் கோட்பாடுகள் பகுதியில், குழந்தை ஞானஸ்நானம் வேதபோதனைக்கு எதிராக அமைகிறது என்று எழுதியிருக்கிறீர்கள். இது பற்றி நீங்கள் மேலும் ஆராய்ந்து பார்த்துவிட்டு பதிலளித்திருக்கலாம் அல்லது அது உங்கள் கருத்து மட்டுமே என்று பதிலளித்திருக்கலாம். – ***சாந்தரூபன், தமிழ்நாடு***

*பத்திரிகையை வாசித்து வரும் வாசகருக்கு என்னுடைய நன்றி. குழந்தை ஞானஸ்நானம் வேதம் போதிக்காத ஒன்று என்பதை நான் ஆராய்ந்து பார்க்காமல் எழுதவில்லை. குழந்தை ஞானஸ்நானம் வெறும் ஊகத்தின் அடிப்படையில் உருவானதென்பதை புதிய ஏற்பாட்டை ஆரம்பத்தில் இருந்து கவனமாக வாசிக்கும் எந்த விசுவாசியும் புரிந்துகொள்ள முடியும். புதிய ஏற்பாட்டின் ஒரு பகுதியிலாவது குழந்தை ஞானஸ்நானத்தைப் பார்க்க முடியாது. பழைய ஏற்பாட்டின் யூத ஆண்பிள்ளைகளுக்கான விருத்தசேதனத்தை அடிப்படையாக வைத்து மனுஷ ஞானத்தினால் செயற்கையாக ஏற்படுத்தப்பட்டதே குழந்தை ஞானஸ்நானம். புதிய ஏற்பாடு தெளிவாக ஆரம்பம் முதல் கடைசிவரை விசுவாசிக்கிறவர்களுக்கு மட்டுமே ஞானஸ்நானம் அளிக்கும்படி வலியுறுத்துகிறது. மனந்திரும்பி கிறிஸ்துவை விசுவாசிக்க முடியாத எவருக்கும் ஞானஸ்நானம் அளிக்கும்படி எங்குமே நாம் வேதத்தில் வாசிப்பதில்லை. சுவிசேஷ செய்தியைக் கேட்டுப் புரிந்துகொள்ள முடியாத குழந்தைக்கு ஞானஸ்நானம் அளிப்பதில் எந்த நன்மையும் இல்லை. மனந்திரும்பி கிறிஸ்துவை விசுவாசிக்கிறவர்களைக் கொண்டு கட்டப்படுவதே திருச்சபை. குழந்தைகளுக்கு அதில் தனிப்பட்ட விசேஷ இடம் இல்லை. குழந்தைகள் வளர்ந்து சுவிசேஷத்தைக் காதால் கேட்டு இருதய மாற்றத்தை ஆவியின் கிரியையால் அடைந்து முழுமனத்தோடு தங்களுடைய இரட்சிப்புக்காக கிறிஸ்துவை விசுவாசிக்க வேண்டும். அதற்குப் பிறகுதான் அவர்களுக்கு ஞானஸ்நானம். அதுவே இயேசு கிறிஸ்துவின் ஆணித்தரமான போதனை. புதிய ஏற்பாட்டின் தெளிவான வழிமுறை. என்னைப் பொறுத்தவரையில் தமிழினத்தில் பாரம்பரிய சபைகள் இன்று சீரழிந்து கிடப்பதற்கு இந்தக் குழந்தை ஞானஸ்நானமும் ஒரு காரணமாக இருக்கிறது. குழந்தை ஞானஸ்நானத்தை மட்டும் பெற்று, கிறிஸ்துவில் விசுவாசம் இல்லாமல் சபை அங்கத்தவர்களாக இருந்து திருவிருந்து பெற்றுவரும் மனந்திரும்பாத பாவிகளை வைத்து சபை நடத்தினால் ஆத்மீக விருத்திக்கு எங்கே வழி? – ஆர்.*


# நமது வெளியீடுகள்




ஆதிசபையின் அற்புத வரங்கள்




சார்ள்ஸ் ஹெடன் ஸ்பர்ஜன்




வில்லியம் கேரி




பத்துக் கட்டளைகள்

**கிடைக்குமிடம்:**

**இவாஞ்ஜெலிக்கள் பாப்திஸ்து சபை**

**57 / 2, டி. பி. கே மெயின் ரோடு, பைகாரா, மதுரை 625004**

**தொலைபேசி எண்: 0452 - 6505810**

**கிருபை இலக்கிய சேவை**

**19 இராஜசிங்க வீதி, கொழும்பு 6, ஸ்ரீ லங்கா**

மலர் 13 ஏப்ரல் - ஜூன் 2007 இதழ் 2

1. எங்கே, எப்படி, யாருக்குக் கொடுப்பது காணிக்கை?
2. நமக்கெப்போது விமோசனம்?
3. வாழ்க்கையில் தீர்மானம் எடுப்பது . . . !
4. உழைக்கப் பிறந்தவன் நீ !
5. என்ன தொழில் செய்வது, எப்படிச் செய்வது?
6. தேடியும் கிடைக்குமா குன்றுமணி - கவிதை
7. எண்ணங்கள்!

Terau Print